


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 7 - அக்டோபர் - 2018*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
New Century Reader's Sangam
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


# பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் - 4

மராட்டியர்களின்
மருத்துவக் கொடை
டாக்டர் சு. நரேந்திரன் - 11

பொன்செய் உலைக்களம்
பாவண்ணன் - 15

வண்ணமும் நடையியலும்
ந.முருகேசபாண்டியன் - 23

ஸ்ரீ அரவிந்தரும் மகாத்மா காந்தியும்
அ.மார்க்ஸ் - 29

உலகின் மிக நீண்ட கதை
ரோகிணி காயத்ரி - 43

சி.எம்.முத்துவும்
அவரது எழுத்துகளும்
ஜி. சரவணன் - 49

கொள்ளையர்
கி.இரா. சங்கரன் - 55

காந்தியின் கனவு வேறு
சவர்க்கரின் கனவு வேறு
யு.ஆர். அனந்தமூர்த்தி - 63

அதிகரித்து வரும்
அயல்நாட்டு தீவிரவாதம்
பி.தயாளன் - 65

ஹிரன் முகர்ஜியின் காந்தி
ஆர். பட்டாபிராமன் - 69

கவிமணி என்னும் பண்பாட்டியலாளர்
க. காமராசன் - 73



படித்துப் பாருங்களேன்...

# திராவிட ஆட்சியில் அரசியல் சமூக அசைவுகள்

**- எஸ்.நாராயண் (2018)**




**Dravidian Years,**
Politics and Welfare in Tamil Nadu,
S. Narayan (2018)
Oxford University Press

## ஆ. சிவசுப்பிரமணியன்

இந்திய விடுதலைக்குப் பின் நடந்த முதல் மூன்று பொதுத்தேர்தல்களிலும் (1952, 1957, 1962) வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியாகக் காங்கிரஸ் கட்சி விளங்கியது. 1967-இல் நடந்த நான்காவது பொதுத்தேர்தலில் அதனிடம் இருந்து தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியது. 1977 வரை தி.மு.க. ஆட்சியே தொடர்ந்தது.

தி.மு.க.வில் இருந்து விலகி. அ.இ.அ.தி.மு.க. கட்சியைத் தோற்றுவித்த எம்.ஜி.அர். 1977 தொடங்கி 1987 வரை, தன் கட்சியின் ஆட்சியைத் தொடர்ந்தார்; அவரது மறைவையடுத்து இன்று வரை தி.மு.க. அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் மாறி, மாறித் தமிழ்நாட்டை ஆண்டு வருகின்றன. இதன் அடிப்படையில் அரைநூற்றாண்டுக் காலமாகத் தமிழ்நாடு திராவிடக் கட்சிகளின் ஆளுகையிலேயே உள்ளதாகக் கூறும் மரபு உருவாகிவிட்டது.

திராவிடக் கட்சிகளின் ஆளுகையில் அரை நூற்றாண்டுக் காலமாக இருந்து வரும் தமிழ்நாட்டின் அரசியல், சமூக நலன் குறித்த மதிப்பீட்டை மேற்கொள்ளும் நூலாக இங்கு அறிமுகம் செய்யும் நூல் அமைந்துள்ளது. உயர் அதிகாரவர்க்கத்தைச் சார்ந்தவராக இந்நூலாசிரியர் இருந்துள்ளமையால் அரசு சார்ந்த தரவுகளுக்கு இந்நூலில் குறையில்லை. தரவுகளுடன் இணைந்து நூலாசிரியரின் திறனாய்வுப் பதிவுகளும் இடம் பெற்றுள்ளன. அதே நேரத்தில் இக்கட்டுரையாசிரியரும் ‘உங்கள் நூலகம்’ ஆசிரியர் குழுவினரும், இத்திறனாய்வுக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற முடிவுக்கு வாசகர்கள் வந்துவிடக்கூடாது.

தமிழக அரசிலும், மைய அரசிலும், பொறுப்பான உயர்பதவிகளை வகித்த அறிவுக்கூர்மை படைத்த

ஒருவரின் பதிவுகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே இந்நூல் அறிமுகம் செய்யப்படுகிறது.



## நூலாசிரியர்

இந்நூலின் ஆசிரியர் நாராயண் தம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை கொல்கத்தாவில் முடித்துவிட்டு, தமிழ்நாடு குறித்த அறிமுகம் எதுவும் இல்லாதவராக, சென்னை வந்தடைந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் இயற்பியலில், இளம் அறிவியல், முதுநிலை அறிவியல் கல்வி பயின்று, அக்கல்லூரிலேயே இரண்டாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரது மாணவப் பருவத்தில் கல்லூரி மாணவர் மன்றத் தலைவராகவும், சென்னைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் செயலாளராகவும் இருந்துள்ளார். தாம் பயின்ற காலத்து மாணவர்களின் அரசியல் உணர்வுகளை அறிந்து கொள்ள இப்பொறுப்புகள் அவருக்கு உதவியுள்ளன.

1964-இல் அய்.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்று 1965-இல் பணியில் சேர்ந்தார். 1966-இல் சேலம் மாவட்டத்தில் உதவி ஆட்சியராக (பயிற்சி) நியமிக்கப்பட்டார். பின்னர் உதவி ஆட்சியர், மாவட்ட ஆட்சியர், கிராம வளர்ச்சித்துறை இயக்குநர், கிராம வளர்ச்சித் திட்டங்கள் செயலர் (பொறுப்பு) என மாநில அரசில் பணியாற்றி உள்ளார்.

மைய அரசில், நிதி மற்றும் பொருளியல் துறையின் செயலாளராகவும், வருவாய், பெட்ரோல், நிலக்கரி தொழில் வளர்ச்சித் துறைகளின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, பிரதமரின் பொருளாதார ஆலோசகராகவும் (2003-2004) இருந்துள்ளார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் எம்.ஃபில் பட்டமும், தில்லி ஐ.ஐ.டியில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் உள்ள தெற்காசிய ஆய்வு நிறுவனத்தில் வருகைதரு முதுநிலை ஆய்வாளராகவும் உள்ளார். சற்று விரிவாகவே நூலாசிரியர் குறித்த விவரக் குறிப்புக்களைத் தந்துள்ளமைக்குக் காரணம், ஓர் ஆழமான தலைப்பைத் தேர்வு செய்து எழுதுவதற்கான பின்புலம் நூலாசிரி யருக்கு இருந்துள்ளதை வெளிப்படுத்துவதற்குத்தான்.

## தமிழகமும் சமூக சீர்திருத்தமும்

இன்று பல்வேறு வடமாநிலங்களில் இடஒதுக் கீட்டை முன்வைத்து போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டை மையமாகக் கொண்ட போராட்டங்கள் இன்று நிகழவில்லை. ஏனெனில் இடஒதுக்கீடு குறித்த போராட்டங்கள் ஆங்கிலக் காலனிய ஆட்சிக் காலத்திலேயே உருவாகி வெற்றியும் பெற்றுவிட்டன. (உள்இட ஒதுக்கீடு தொடர்பான போராட்டங்கள் மட்டுமே சிறு அளவில் உருவாகி அவையும் வெற்றி பெற்றுவிட்டன). சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் காலனியத்தின் வருகைக்கு முன்னரே மணிமேகலைக் காப்பியத்திலும், சித்தர்கள், பாய்ச்சலூர் நங்கை ஆகியோராலும் அறிமுகம் செய்யப் பட்டிருந்தன. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அயோத்திதாசர் இக்கருத்துக்களை தாம் நடத்திய 'தமிழன்' பத்திரிகை வாயிலாகப் பரப்பி வந்தார்; என்றாலும் 'சுயமரியாதை இயக்கம்' (1927) என்ற இயக்கத்தின் தோற்றத்தில் இருந்தே ஓர் இயக்கமாக சமூக சீர்திருத்தச் சிந்தனை உருப்பெற்றது.

## திராவிட இயக்கம்

சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியாகப் பெரியாரின் திராவிடர் கழகம் தோன்றியது. திராவிடர் கழகத்தில் இருந்து விலகி வந்தோரால் தி.மு.க.வும் இதில் இருந்து பிரிந்து சென்றோரால் அ.இ.அ.திமுகவும் உருவாயின. இவையனைத்தையும் ஒன்றடக்கியே திராவிடக் கட்சிகள் என்று அடையாளம் இடும் போக்கு அண்மைக் காலத்தில் உருவாகியுள்ளது.

## திராவிட இயக்கத்தின் தொடக்க நிலை

ஆங்கில ஆட்சியின்போது ஆங்கிலக்கல்வி அறிமுகமானது. இக்கல்வியானது, நீதித்துறை, பல்கலைக்கழகம், அரசுச் செயலகம் என்ற அமைப்புக்களில் பணியில் சேர்வதற்கான கடவுச்சீட்டாக அமைந்தது. இக்கடவுச் சீட்டின் துணையுடன் பணிசெய்யப் புகுந்தவர்கள் அதிகாரம் செலுத்தும் உரிமையைப் பெற்று சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் விளங்கலாயினர்.

இவர்களுள் பிராமணர்களே முதல்நிலையில் இருந்தனர். பிராமணர் அல்லாதார் ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தனர். பிராமணர் அல்லாதாரில் ஒரு பகுதியினர் வணிகர்களாகவும் தொழில் முனைவோராகவும் இருந்தனர். தம் தொழில்வளர்ச்சிக்கு உதவும் என்ற எண்ணத்தில் இவர்களில் பலர் பிராமணச் சார்புடையோராகவே இருந்தனர்.

*****

மும்பை, வங்காளம் ஆகிய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், அன்றைய சென்னை மாநிலத்தில் கிறித்தவ சமய அமைப்பினர் நடத்தும் பள்ளிகள் அதிக எண்ணிக்கையில் இருந்தன.

சென்னை மாநிலத்தில் 1185 பள்ளிகள் கிறித்தவ அமைப்புகளால் நடத்தப்பட்டு வந்தன. இப்பள்ளிகளில் 38,000 மாணவர்கள் பயின்று வந்தனர்.

அதே நேரத்தில் பம்பாய் வங்காள மாநிலங்கள் இரண்டிலுமாக 472 பள்ளிகள்தான் கிறித்தவ அமைப்புகளால் நடத்தப்பட்டு வந்தன. இவற்றில் 18000 மாணவர்கள் பயின்று வந்தனர். மொத்தமக்கள் தொகையில் மூன்று விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்த பிராமணர் சமூகத்தின் மாணவர்களே அதிக எண்ணிக்கையில் பயின்றனர்.

1892-க்கும் 1904-க்கும் இடைப்பட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் அதிகாரிகளாகத் தேர்வு செய்யப்பட்ட 16 இந்தியர்களில் 15 பேர் பிராமணர்களாக இருந்தனர். பொறியாளர்களைப் பொருத்தளவில் தேர்வு செய்யப்பட்ட 27 மாணவர்களில் 21 மாணவர்கள் பிராமணர்கள். இதனையொத்த நிலைதான் துணைஆட்சியர்கள், வருவாய் நிர்வாகத்தின் கீழ்நிலை அதிகாரிகள் பதவிகளில் இருந்தது. அரசுப்பணிகள் அனைத்திலும் பிராமணர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். காலனிய ஆட்சியில் அரசு உயர் பதவிகளை இந்தியர்களுக்கு வழங்கவேண்டுமென்று காங்கிரஸ் இயக்கம் போராடியபோது அதன் பயனைப் பெற்றவர்களாகப் பிராமணர்களே இருந்தனர்.

இத்தகைய சமூகச் சூழல் நிலவிய அன்றைய சென்னை மாநிலத்தில் வகுப்புவாரி இடஒதுக்கீட்டு முறையை வலியுறுத்தி தாம் அங்கம் வகித்த காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து பெரியார் ஈ.வெ.ரா. வெளியேறினார். பின்னர் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பிராமணர் அல்லாதார் என்ற சொல்லுக்கு மாற்றாகத் 'திராவிடர்' என்ற சொல்லை அவர் முன் வைத்தார். சாதி அமைப்பிற்கும் இந்து சமயச் சடங்குகளுக்கு எதிராகவும் குரல் எழுப்பினார். குறிப்பிடத்தக்க அளவில், பிராமணர் அல்லாதாரிடம் இருந்து பெரியாருக்கு ஆதரவு கிட்டியது. 1931-ஆவது ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டுப் பிராமணர்களில் 25 விழுக்காட்டினர் ஒன்றிணைந்த தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்துள்ளனர். பிராமணர் அல்லாதார் இயக்கம் தஞ்சை, திருச்சிப் பகுதிகளில் வலுவாக இருந்துள்ளதை இச்செய்தியுடன் இணைத்துப் பார்க்கலாம்.

## தி.மு.க.

பெரியாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் பெரியார் நிறுவிய திராவிடர் கழகத்தில் இருந்து 1949-இல் அண்ணாதுரை தன் ஆதரவாளர்களுடன் வெளியேறி தி.மு.க.வை நிறுவினார். தாய்க்கழகமான திராவிடர் கழகம்போன்று சமூக சீர்திருத்த இயக்கமாக மட்டும் நின்றுவிடாது ஓர் அரசியல் கட்சியாக தி.மு.க. தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது. 1957, 1962 பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு தமிழக அரசியலில் புறக்கணிக்க இயலாத அரசியல் கட்சி என்பதையும் நிறுவியது. அதே நேரத்தில் இதன் அரசியல் நுழைவு கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பலவீனப்படுத்தியது.

## தி.மு.க.வும் சமூக மாறுதல்களும் (1967–1977)

தி.மு.க.வின் தாய் அமைப்பான திராவிடர் கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபடாது தன்னை சமூக சீர்திருத்த இயக்கமாகவே வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. 1949-இல் உருவான தி.மு.க.வும் பிராமணிய எதிர்ப்பு, சமயச்சடங்குகள் எதிர்ப்பு, அரசு வேலைகளில் பிராமணர் அல்லாதாருக்கு உரிய பங்கு, தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு என்பனவற்றை முன்நிறுத்தல், இந்திமொழி எதிர்ப்பு, வடவர் எதிர்ப்பு என்பனவற்றை முன்நிறுத்தியே இயங்கி வந்தது.

இவ்வியக்கத்தின் தலைவர்கள் பலரும் சிறந்த மேடைப்பேச்சாளிகள். குறிப்பாக அண்ணாதுரை, கருணாநிதி ஆகிய இருவரும் மேடைப்பேச்சில் வல்லவர்களாக இருந்தார்கள். மேடைப்பேச்சிற்கு அடுத்தபடியாக அவர்கள் திரைப்படத்துறையில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 1952 அக்டோபரில் வெளியான 'பராசக்தி' என்ற திரைப்படம் கருணாநிதியின் திரை வசனத்தில் உருவாகியிருந்தது. இது பிராமணர்களையும், சமயம் சார்ந்த பழக்க வழக்கங்களையும் பகடி செய்யும் தன்மையில் அமைந்திருந்தது. இப்படத்தைத் தடை செய்யும் முயற்சியும் நடந்தது. அது வெற்றி பெறவில்லை. மாறாக அப்படத்தின் மீதான ஈர்ப்பை அதிகரிக்க உதவியது.

## கருணாநிதியின் திரைவசனத்தில் உருவான 'மருதநாட்டு இளவரசி'

1950-இல் வெளியானது எம்.ஜி.ஆர். நடித்த இப்படம், நல்ல வருவாய் ஈட்டியது. 1957-இல் இவரது திரைவசனத்தில் எம்.ஜி.ஆர். நடித்த 'புதுமைப்பித்தன்' வெளியானது. 1961-இல் அண்ணாதுரையின் திரைவசனத்தில் 'நல்லவன் வாழ்வான்' திரைப்படம் வெளியானது. திராவிட இயக்கம், தமிழ் அடையாளம், பண்பாடு என்பன பொதுவெளியில் விவாதிக்கப்பட

இத்திரைப்படங்கள் பங்களிப்புச் செய்தன. அண்ணாதுரை நாடகமாக உருவாக்கிப் பின் திரைப்படமாகவும் வெளிவந்த 'நல்லதம்பி', 'வேலைக்காரி' என்பனவும் இவ்வரிசையில் குறிப்பிடத் தக்கவையாகும்.

1980-ஆவது ஆண்டுவரை டூரிங் தியேட்டர் என்ற பெயரிலான கீற்றுக் கொட்டகையிலான திரை அரங்கங்கள் பரவலாக இருந்தன. மேற்கூறிய படங்கள் இக்கொட்டகைகளில் திரையிடப்பட்டு பெருந் திரளமான மக்களிடம் சென்றன. இதனால் 'கோவில்பண்பாடு', 'சமூகசீர்திருத்தம்', 'தமிழ்உணர்வு' என்பன போன்ற கருத்துக்களை மக்களிடம கொண்டு செல்வதில் தி.மு.க. வெற்றி பெற்றது. ஒருதொழில், பொழுதுபோக்கு வடிவம் என்பதுடன் கருத்துப் பரப்புரைக்கான கருவியாகவும் இத்திரைப்படங்கள் பங்காற்றின.

வெகுசன ஊடகம் ஒன்றைக் கருத்துப் பரப்புரைக்காகப் பயன்படுத்தும் தி.மு.க.வின் முயற்சியில் முக்கிய பங்களிப்பாளராக எம்.ஜி.ஆர். விளங்கினார். எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் ஓர் அரசியல் செய்தி இடம் பெற்றிருக்கும். எம்.ஜி.ஆர். திரைப்படத்தில் செய்வதை தி.மு.க. நடைமுறையில் செய்துகாட்டும், ஏழைகளுக்குப் பணியாற்றும், தீமையை எதிர்த்துப் போராடும் என்ற செய்தி இத்திரைப்படங்கள் வாயிலாக மக்களைச் சென்றடைந்தது.

இத்துடன் 1950-இன் நடுப்பகுதியில் இருந்து தொடர்ச்சியான போராட்டங்களை, தி.மு.க. நடத்தத் தொடங்கியது. திராவிடநாடு உருவாக்கம், இரயில் நிலையப் பெயர்மாற்றப் போராட்டம், குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம், தமிழ்ப்பண்பாடு குறித்த நேருவின் கருத்துக்கு எதிர்ப்பு, இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி மொழியை அறிவித்தலுக்கு எதிர்ப்பு என்பன தி.மு.க. நடத்திய போராட்டங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவற்றின் தொடர்ச்சியாக, 1963-க்கும் 1965-க்கும் இடையே தமிழகத்தில் நிகழ்ந்த இரு நிகழ்வுகள் 1967 பொதுத்தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறத் துணை புரிந்தன.

### முதல் நிகழ்வு (1965)

இந்தியாவின் ஆட்சிமொழியாக 1965-இல் இந்திமொழி இடம் பெற்று, ஆங்கிலம் நீக்கப்படும் என்ற செய்தியை மத்திய அரசு 1963-இல் வெளியிட்ட ஆட்சிமொழிச் சட்டத்தின் வாயிலாக வெளிப் படுத்தியது. ஆயினும் 1965-க்குப் பின்னரும் ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடரும் என்றும் உறுதியளித்திருந்தது.

இச்சட்டத்தில் இடம் பெற்றிருந்த சில வரிகள் தி.மு.க.வுக்கு நிறைவாக இல்லை. ஆட்சி மொழியாக இந்தி மொழி மாறும் என்று அறிவிக்கப்பட்ட 1965 சனவரி 26ஆவது நாள் அன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தி.மு.க. தொடங்கியது. 1965 சனவரி 25ஆம் நாளன்று மதுரையில் ஊர்வலமாகச் சென்ற மாணவர்களைக் காங்கிரஸ் கட்சியினர் தாக்கியதைத் தொடர்ந்து இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் நாடெங்கும் பரவியது. வன்முறை, துப்பாக்கிச் சூடு என, போராட்டம் இரண்டு மாதகாலம் நீடித்தது. துணை இராணுவத்தை வரவழைக்கும் அளவுக்குப் போராட்டம் கடுமையானது. அரசின் அதிகாரப்பூர்வமான அறிவிப்பின்படி, காவல்துறையினர் இருவர் உட்பட எழுபது பேர் போராட்டத்தில் இறந்து போயினர். கம்பம் நகரில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் மூன்று இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

தமிழக மக்களை அமைதிப்படுத்தும் நோக்கில், இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும்வரை ஆங்கிலமும் ஆட்சிமொழியாகத் தொடரும் என்ற உறுதிமொழியை, பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி வழங்கினார். இதனையடுத்து இந்தி எதிர்ப்புப் போராட்டமும், மாணவர் கிளர்ச்சியும் நின்றன. என்றாலும் அதை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசின் மீதான அய்யப்பாடும், காங்கிரசின் மீதான வெறுப்புணர்வும் தமிழக மக்களிடையே தொடர்ந்தன.

### இரண்டாவது நிகழ்வு

அகில இந்திய அளவில் உணவு உற்பத்தியானது 89.4 மில்லியன் டன் அளவில் இருந்து 1964-65 ஆண்டுகளில் 72.3 மில்லியன் டன்னாக அது குறைந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் உணவு தானிய உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தியில் விளிம்பு நிலையிலேயே இருந்து வந்தது. வடகிழக்குப் பருவமழையானது நன்றாக பெய்தால் விளிம்பு நிலையைக் கடந்து உபரியை எட்டும். மழை பொய்த்தால் உணவு தானியப் பற்றாக்குறை மாநிலமாகும். ஆந்திரா மற்றும் அருகில் உள்ள மாநிலங்களிலும் அரிசியை வேண்டி நிற்கும்.

சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் இன்று போல் பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. அது வடஇந்திய உணவாகவே பார்க்கப்பட்டது. உணவு தானியப் பற்றாக்குறையைப் போக்கும் வழிமுறையாக தானியப் போக்குவரத்து கண்காணிக்கப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சியர், உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட அரிசியைக் கைப்பற்றினார். இது அப்போதைய முதலமைச்சர் பக்தவத்சலத்திற்கு உரிமையானது என்பது தெரியவந்தது. இச்செய்தி மக்களிடையே பரவி உணவுப்பற்றாக்குறைக்கும்,

பதுக்கலுக்கும் காங்கிரஸ் அரசுதான் காரணம் என்ற கருத்து நிலைபெற்றது.

உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறையாக உணவுப்பொருள் பெற குடும்ப அட்டை முறையை காங்கிரஸ் அரசு அறிமுகப்படுத்தியது. அது அறிமுகப்படுத்திய மாதம் தமிழ்நாட்டின் மழைக் காலமான நவம்பர் மாதம். ஒருவாரம் கழித்து,'இந்து' ஆங்கில நாளேட்டில் பின்வரும் செய்தி வெளியானது:

> *'மழை பெய்தபோதிலும், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், குடைபிடித்தபடியும், தலைக்கு நேரே பையைப் பிடித்தபடியும், மழையை மறைக்க எதுவும் இல்லாத நிலையிலும் குடும்ப அட்டையைப் பெற வரிசையில் நின்றார்கள்'.*

குடும்ப அட்டையின்படி குடும்பத்தில் உள்ள வளர்ச்சி பெற்ற மனிதர் ஒவ்வொருவருக்கும் ஒரு லிட்டர் அரிசியும், கோதுமையும் வாரம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. இதன்படி ஒவ்வொருவருக்கும் நாளும் நான்கு அவுன்ஸ் உணவு தானியம் கிட்டும். இத்திட்டத்தின் படி 4,40,000 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. உணவுப் பொருள்கள் வழங்கல் நன்றாக நிர்வகிக்கப் பட்டு, இத்திட்டம் வெற்றியடைந்தது. ஆனால் இம்முயற்சி காலந்தாழ்த்தி செய்யப்பட்டது.

அடிப்படைத் தேவைகளான பொருட்களின் விலைஉயர்வு, தொடர்ச்சியான உணவு தானியப் பற்றாக்குறை என்பன, தாம் மத்திய அரசால் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற உணர்வை வாக்காளர்களிடம் உருவாக்கின. காங்கிரஸ் அரசுக்கு அளித்து வந்த ஆதரவைக் கைவிட்டு தி.மு.க.வுக்கு வாக்களித்தனர். 1967 பொதுத்தேர்தலுக்கு முன்னர் அண்ணாதுரை மக்களுக்கு அளித்த வாக்குறுதி 'ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி அளிப்போம்' என்பதுதான்.

*****

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி சுதந்திராக் கட்சியைத் தொடங்கி இருந்த ராஜாஜி தி.மு.க.வுடன் நெருக்கம் காட்டலானார். அவர் அறிமுகப்படுத்திய குலக்கல்வித் திட்டத்தால், அவர் முதல் மந்திரி பதவியைத் துறக்க நேர்ந்தது. கட்டாய இந்திக் கல்வியை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தியவர் அவர்தான். காங்கிரஸ் மீதான அவரது எதிர்ப்பு தி.மு.க.விடம் நட்பு கொள்ளத் தூண்டியது. அவரது நட்பினால் தி.மு.க. பிராமண எதிர்ப்புக் கட்சி என்றிருந்த படிமம் அகன்றது. 1964ல் தொடங்கி 1970 முடிய சுதந்திராக் கட்சியுடனான தி.மு.க.வின் உறவு நீடித்தது.

திராவிடர் கழகத்தினரிடமிருந்து வரித்துக் கொண்ட பிராமணிய வெறுப்புணர்வையும் பிரிவினை வாதத்தையும் தி.மு.க. கைவிட்டுவிட்டதாகவும், காங்கிரஸ்தான். தி.க.வுடன் உறவு கொண்டிருப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார். அவரது நட்பு, தி.மு.க.வின் 1967 தேர்தல் வெற்றிக்கு ஓரளவு உதவியது.

## ஆளும் கட்சியாக தி.மு.க. (1967)

1967-இல் நடந்த நான்காவது பொதுத்தேர்தலில் 15 ஆண்டுக்காலமாகத் தொடர்ச்சியாக ஆண்டு வந்த காங்கிரசை வீழ்த்தி தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியது. 179 தொகுதிகளில் தி.மு.க.வெற்றிபெற காங்கிரஸ் 51 தொகுதிகளில்தான் வெற்றியடைந்தது. இதற்கு முந்தைய தேர்தலில் காங்கிரஸ் 139 தொகுதிகளிலும் தி.மு.க. 50 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருந்தன.

## தி.மு.க.வின் சமூகநலத்திட்டங்கள்

அடித்தள மக்களின் எதிர்ப்புணர்வு காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகத் திரும்பியதில் அரிசி முக்கியப் பங்கு வகித்ததை நினைவில் கொண்டு அரிசி வழங்கலில் தி.மு.க. அக்கறை காட்டியது. ஒரு ரூபாய்க்கு மூன்று கிலோ அரிசி வழங்குவதில் அண்ணாதுரை ஆர்வம் காட்டினார். ஆனால் தலைமைச் செயலகத்தில் இருந்த உயர் அதிகாரிகள் இது குறித்து முடிவு எடுப்பதில் தயங்கினர். இவர்களுள் பலர் காலனிய ஆட்சியில் பயிற்சி பெற்ற ஐ.சி.எஸ். அதிகாரிகள், தலைமைச் செயலரும், ஐ.சி.எஸ்.அதிகாரிதான். இவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் வளர்ந்தவர்கள். பணி சார்ந்த அவர்களது ஒழுக்கம் என்பது, விரைவாகவும், நேர்மையாகவும், விதிமுறைகளுக்கும் நிர்வாக நடைமுறைகளுக்கும் உட்பட்டுச் செயல்படுவதாகும்.

அதிகாரப் படிநிலையானது, பொறுப்புகள் கடமைகள் என ஒவ்வொரு நிலையிலும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு செயல் பாட்டையும் மதிப்பீடு செய்வது, மேற்பார்வையிடுவது, சோதனை செய்வது, தவறுகளைத் திருத்துவது என சென்னை மாநிலத்தின் நிர்வாக அமைப்பு இந்தியாவில் உள்ள சிறந்த அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்ந்தது.

இவ்வகையில் 50களின் இறுதியில் சென்னை மாநிலத்தின் தலைமைச் செயலராக இருந்த ஆர்.ஏ. கோபாலசாமி சமுதாய வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற அமைப்புகளை உருவாக்கி கிராமப்புற வளர்ச்சிக்கு அடிகோலினார். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் தொடர்பான கடமைகளையும், சட்டதிட்டங் களையும் உதவி ஆட்சியாளர்கள் அறிந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டது. இவை செயல்படுத்தும் திட்டங்களின் செயல்பாட்டைப் பார்வையிட்டும் மதிப்பீடு செய்வதும் இவர்களின் பணிகளில் ஒன்றாயிற்று.

ஊராட்சி வளர்ச்சிக்கென்றே தனிப்பிரிவு ஒன்றிருந்தது. கிராம நலப் பணியாளர்கள், வளர்ச்சித்

திட்ட அதிகாரிகள் ஆகியோர் ஊராட்சி வளர்ச்சி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். உள்ளூர் நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராமப்புறச் சாலைகள் வேளாண் விரிவாக்கம் என்பனவற்றின் வாயிலாகக் கிராமப்புற வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்கள். கிராமப்புற மக்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

தொழில்வளர்ச்சியைப் பொறுத்தளவில் தொழில் அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் சிறுதொழில் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி உதவினார். சிறுதொழில் முனைவோருக்கான தொழிற்பேட்டைகளையும் தொழில் முதலீட்டுக் கழகத்தையும் நிறுவினார்.

மற்றொரு பக்கம், பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களை நிறுவுவதில் துணைநின்றார். ஒரு ரூபாய்க்கு மூன்று கிலோ அரிசி என்ற தி.மு.க.வின் திட்டம், அது ஆட்சிக்கு வருமுன் செயல்படுத்தப்பட்ட மேற்கூறிய திட்டங்களில் இருந்து வேறுபட்டது,ஆனால் அரசின் நிர்வாக அமைப்பானது காலனியக் கொள்கைகளை நிறைவேற்றி வந்த அதிகார அமைப்பின் தொடர்ச்சிதான்.

தி.மு.க.வின் திட்டமோ மக்களின் தேவைகளை நிறைவேற்ற முனையும் திட்டம். மேலும் இதுபோன்ற திட்டத்திற்கு இதற்கு முன்னர் முயற்சி எதுவும் எடுக்கப் படவில்லை. நிதிஒதுக்கீட்டைப் பொறுத்தளவில், நிதி நிர்வாகம் செய்யும் அதிகார வர்க்கம் பிற்போக்கான நிதிக்கொள்கையைக் கொண்டிருந்தது. ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதனால் கிடைக்கும் ஆதாயம் என்ன என்று கணக்கிடுபவர்கள் சமூகநலத்திட்டங்களைக் கண்டு கொள்ளமாட்டார்கள்தானே!

ரூபாய்க்கு மூன்று கிலோ அரிசி என்ற திட்டம், செயல்படுத்த முடியாத அதிகப்பணம் தேவைப்படும் திட்டம் என்றும், இதற்குத் தேவையான அளவு அரிசி இல்லை என்றும் முதலமைச்சரிடம் கூறிவிட்டனர். இப்பதிலைக் கேட்டதும் இக்கட்டான நிலைக்கு ஆளான அண்ணாதுரை குறைந்தது ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியாவது தற்போது குடும்ப அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கவேண்டுமென்று வற்புறுத்தினார். அது ஏற்றுக்கொள்ளப்படடு அதன்படி அரிசி வழங்கப்பட்டது. சென்னை, கோவை என்ற இரு நகரங்கள் மட்டுமே இத்திட்டத்தால் பயன்பெற்றன. இதைத் தமிழ்நாடு முழுமைக்கும் விரிவுபடுத்த நிதிநிலைமை இடம் தரவில்லை. நடுவண் அரசோ, தன் தானியசேமிப்பில் இருந்து அதிகளவு அரிசி ஒதுக்க மறுத்தது. இறுதியில் இத்திட்டம் வெற்றிபெறாது போய்விட்டது.

*****

*1969*-இல் அண்ணாதுரை மறைந்தபின் கருணாநிதி முதலமைச்சரானார். இதன் பின்னர் நிகழ்ந்த மாறுதல்களை நூலாசிரியர் விவரித்துள்ளார். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், உதவி ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரைக் காணவரும்போது, ஒன்றியத்தில் பணிபுரியும் அதிகாரிகளுடன் வருவார்கள். ஆனால் இப்போது மாவட்ட அல்லது உள்ளூர்க் கட்சிக்காரர்கள் நீர்ப்பாசனம், உணவு தானிய விநியோகம், பள்ளிகளின் செயல்பாடு குறித்து முறையிட வந்தனர். உயர் அதிகார வர்க்கத்தினரிடம் இருந்து வரும் உத்தரவுகளை விட கட்சியிடம் இருந்து வரும் வேண்டுகோள்களைக் கவனிக்க வேண்டியநிலை உயர்நிர்வாக அதிகாரிகளுக்கு ஏற்பட்டது.

*****

தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தின் புள்ளி விவரப்படி *1960*-க்கும் *1980*க்கும் இடைப்பட்ட காலத்தில் அரசுப்பணியில் நுழைவோரின் சாதிகளில் வேறுபாடு காணப்படலாயிற்று. பிற்படுத்தப்பட்ட சாதிப் பிரிவுகளில் இருந்தும், அட்டவணைப் பிரிவுகளில் இருந்தும் பணியில் சேர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று.

சாதிகளின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே அரசுப்பணிக்கான இடஒதுக்கீடு நிகழ்ந்தமையால் முற்படுத்தப்பட்ட சாதிகளின் அரசு வேலைவாய்ப்பானது மிகவும் குறைந்து பிற்பட்ட சாதியினர், அட்டவணை சாதியினர், ஆதிவாசிகள் ஆகிய பிரிவுகளில் அரசு வேலைவாய்ப்பு உயர்ந்தது. இது குறிப்பிடத்தக்க மாறுதலாகும். **1925**-ஆவது ஆண்டு காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாடு தொடங்கி பெரியார் வலியுறுத்தி வந்த வகுப்புவாரி இடஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.

*****

சேரிகளை அகற்றி குடிசை மாற்றுவாரியக் குடியிருப்புகள், மீனவர்கள், காவல்துறையினர், ஆதிதிராவிடர்களுக்கான குடியிருப்புகள் என புதிய குடியிருப்புகள் உருவாயின. இதன் பொருட்டு, குடிசை மாற்று வாரியம், அட்டவணை சாதியினருக்கான வீட்டுவசதி வாரியம் என்பன புதிதாக உருவாயின. உணவுப் பொருட்கள் வழங்கும் பொதுவிநியோக முறை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை ஆகியன பொதுவிநியோக முறையின் வாயிலாக மக்களைச் சென்றடைந்தது. அத்துடன் பொங்கலையொட்டி, சேலை, வேட்டி ஆகியனவும் வழங்கப்பட்டன.

இவை தவிர திருமணத்திற்குத் தாலி வாங்கப் பணஉதவி, கணவனை இழந்த பெண்களுக்கும்,

முதியோருக்கும் ஓய்வூதியம் என்பன வழங்கப்பட்டன. இத்திட்டங்கள் நலிந்த பிரிவினருக்கான திட்டங்களாக அமைந்தன.

இக்கால கட்டத்தில் (1970-1976) குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றது. உற்பத்தியானது 17 விழுக்காடு அதிகரித்தது. தனிநபர் வருமானம் 30 விழுக்காடு அதிகரித்தது. 1971-ஆவது ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை 39.5 விழுக்காடாக இருந்தது. 1981ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 54.4 விழுக்காடாக உயர்ந்தது. 1971இல் கைக்குழந்தை மரணம் 125 ஆக இருந்தது. 1977இல் இது 103 ஆகக் குறைந்தது.

எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி அதிகரித்தபோதிலும் அதற்கான அடித்தளம் தி.மு.க. ஆட்சியின் தொடக்க காலத்தில் தான் இடப்பட்டது. இதே காலத்தில் குஜராத்துக்கும், மகாராஷ்டிராவுக்கும் அடுத்த நிலையில்தான் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி இருந்தது.

1950ஐ அடுத்து ஜமீந்தாரி முறை ஒழிப்பும் குடியானவர்களுக்கு நிலம் வழங்கலும் நடந்திருந்தன. தி.மு.க. ஆட்சியில் 'மைனர்; இனாம்' நிலங்கள், கோவில் நிலங்கள், தோட்டங்கள், பழப்பண்ணைகள் என்பன தொடர்பாக சில சீர்திருத்தங்கள் நிகழ்ந்தன. ஐந்தில் இருந்து பன்னிரெண்டு ஏக்கர் வரையில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு வருமான வரியில் இருந்து விதிவிலக்களித்தது.

நீர்ப்பாசன வசதி இல்லாத புஞ்சை நிலங்களுக்கு நிலவரி செலுத்துவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இத்திட்டத்தால் 4.5 மில்லியன் குடியானவர்கள் பயன்பெற்றனர். நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்படி உயர்ந்த அளவில் முப்பது 30 ஏக்கர் தரமான நிலம் வைத்திருக்கலாம் என்ற விதிமுறையைத் திருத்தி 15 ஏக்கர் தரமான நிலம் வைத்திருக்கலாம் என்று குறைத்தது. அன்றைய தஞ்சை மாவட்டத்தின் பெருநிலக் கிழாராக இருந்த வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியாரின் நிலங்கள் கரும்பு சாகுபடிக்காக அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஜி.கே. மூப்பனார் மற்றும் இதர நிலக்கிழார் குடும்பங்களில் தோட்டப் பண்ணையாக மாற்றியிருந்த விளைநிலங்கள் வரையறைக்குட்படுத்தப்பட்டன.

*****

ஆங்கில ஆட்சிக்காலத்தில் 1895-இல் உருவான கிராம அதிகாரிகள் சட்டமானது பரம்பரை அடிப்படையில் கிராம அதிகாரிகளை நியமிக்க வழிவகுத்தது. இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் நில உரிமையாளர்களாகவும், உயர்சாதியினராகவும் இருந்தனர். தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் பெரும்பாலும் பிராமணர்களே கிராம முன்சீப் என்ற பதவியில் இருந்தனர். கர்ணம் என்ற பதவியில் கல்வியறிவுடைய இதரசாதியினர் இருந்தனர். தி.மு.க. ஆட்சியில் இப்பாரம்பரிய முறையை மாற்றும் சீர்திருத்தம் அறிமுகமானது. இம்முயற்சியில் வருவாய்த்துறையின் செயலாளராக இருந்த கே. திரவியம் முக்கிய பங்காற்றினார். காலனிய ஆட்சி அறிமுகப்படுத்திய பாரம்பரிய முறையை நீக்கும்படி அரசுக்கு அவர் பரிந்துரைத்தார். இதன்படி தமிழ்நாடு, பொதுத்தேர்வாணையம் வாயிலாகக் கிராமநிர்வாக அதிகாரியும், கர்ணமும் தேர்வு செய்யப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. 1981-இல் எம்.ஜி.ஆரால் இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சீர்திருத்தத்தால் அட்டவணை சாதியினர் உட்பட அனைத்துச் சாதியினரும் பயன்பெற்றனர். இது போன்றே கூட்டுறவுத்துறையிலும் சீர்திருத்தங்கள் அறிமுகமாயின. இவற்றை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்துவதில் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த சி.பா. ஆதித்தனரின் பங்களிப்பு முக்கியமானது.

*****

1967க்கும் 1971க்கும் இடைப்பட்டக் காலத்தில் தனியார் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

*****

அரசியல், வளர்ச்சி, நிர்வாகம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைப்பதில் முதல்வராக இருந்த கருணாநிதி முக்கிய பங்காற்றினார். இக்காலத்தில் வெளியான எம்.ஜி.ஆரின் 'அடிமைப்பெண்' (1969), 'எங்கள் தங்கம்' (1970), 'ரிக்ஷாக்காரன்' (1971), 'மாட்டுக்காரவேலன்' (1970) என்ற திரைப்படங்கள் இக்கால நிலையை வெளிப்படுத்துவனவாய் அமைந்தன. இந்த அரசால் ஏழைகளின் நலன் பாதுகாக்கப்படும் என்ற செய்தியை இப்படங்கள் மக்களுக்கு வழங்கின.

*****

மொத்தத்தில் 1967 தொடங்கி 1976 வரையிலான தி.மு.க. ஆட்சி முந்தைய ஆட்சியில் இல்லாத நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தியும் பிற்படுத்தப்பட்ட அட்டவணை சாதியினரின் வேலைவாய்ப்பை அதிகரித்தும் தன்னை வலுவான கட்சியாக நிலை நிறுத்திக் கொண்டது.

தொடரும் ....



# மராட்டியர்களின் மருத்துவக் கொடை

**டாக்டர் சு. நரேந்திரன்**

**இ**ந்தியத் துணைக் கண்டத்தில் மிகவும் செழிப்பான காவிரி பாயும் பிரதேசமாகிய தஞ்சாவூர் நாட்டை *1676 - 1855*-ஆம் ஆண்டு வரை *12* அரசர்கள் ஆண்டு வந்துள்ளனர். இதில் *6* அரசர்கள் கலைகளைப் போற்றி வளர்த்தார்கள். இந்த அறுவரில் மூன்று அரசர்கள் தாங்களே பெரும் அறிஞர்களாகவும் இருந்து கலைகளை வளர்த்தார்கள்.

மராத்திய மன்னர்கள் - நாயக்கர்களைப் பின்பற்றிச் சமஸ்கிருதத்திற்கும், தெலுங்கிற்கும் முதலிடம் கொடுத்து, கற்றுத்தேர்ந்து, தமிழைப் புறந்தள்ளியதால், சைவ மதத்தினரைக் காப்பாற்றும் நிலையில் தமிழகத் திருமடங்கள், குறிப்பாகத் திருவாவடுதுறை ஆதீனம் தமிழை வளர்க்கும் நிலையில் இருந்தது. மாறாகத் தமிழ் மருத்துவத்தை வளர்ப்பதில் எந்த மதமும், திருமடங்களும் கவனம் செலுத்தவில்லை என்றாலும், அதன் வளர்ச்சிக்குத் தடை செய்யவில்லை. தஞ்சாவூரைச்சுற்றி மராட்டியர் ஆண்ட காலத்தில் *5783* கிராமங்களில் பரம்பரை மருத்துவர்கள் ஒன்றரை ஏக்கர் நிலத்தை இறையிலியாகப் பெற்று மருத்துவம் புரிந்து வந்தனர். இது தவிர மற்ற சித்த மருத்துவர்களும், கிராமங்களில் தம் தொழிலை நடத்தி வந்தனர். ஆனால் இவர்களுக்குப் போட்டியாக ஆயுர்வேத மருத்துவர்களும் அவ்வூரில் மருத்துவம் புரிந்துவந்தனர். இவர்களுக்கு அக்கிராம மக்கள் காய், கனி, பால் மற்றும் தம்மிடமுள்ள மிகையாக விளைந்த விளை பொருட்களையும், நன்றிக்கடனாக அளித்து, தங்களை அறுவைச் சிகிச்சையிலிருந்து காப்பாற்றிக் கொள்வதாக நம்பினர். மருத்துவர்கள் தம்மிடமுள்ள ரகசிய மருத்துவ முறைகளைக் கொண்ட சுவடி நூல்களில் உள்ளவற்றை, தங்களை நம்பும் பொருட்டுப் படித்துக் காண்பித்து, தங்களுக்கான மருத்துவத்திற்குப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். கவலை அளிக்கும் எந்த அளவிலும் உள்ள பலதரப்பட்ட நோய்களையும் நாடி பிடித்துப் பார்த்து, நோயை அறிந்து மருந்து வழங்கினர். இவர்களில் சிலர் மிகப்புகழ் பெற்று நாடு முழுவதுமுள்ள செல்வந்தர்களுக்கும் மருத்துவம் அளித்தனர். இக்காலக் கட்டத்தில் நாட்டு மருத்துவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியப் படையிலும் பணியமர்த்தப் பட்டனர்.

நோயாளிகளுக்குத் தனியாக மருத்துவமனைகள் அக்காலகட்டத்தில் இல்லாத நேரம். ஆகவே இவர்கள் வீட்டிலேயே மருத்துவம் செய்யப் பெற்றனர். ஒரு விடியலாக மராத்திய மன்னர் சஹாஜி (Sahaji - *1684 - 1712*) மருத்துவமனைகளைக் கட்டி, ஹைதராபாத் மற்றும் அரேபியாவிலிருந்து மருத்துவர்களை வரவழைத்தார். இந்த மருத்துவமனையில் நோயாளிகள் சோதனை செய்யப்பட்டு, அரசர் செலவில் அவர்களுக்கு மருந்தளிக்கப்பட்டது. இத்துடன் கட்டணமற்ற தங்கும் விடுதிகள் (சத்திரங்கள்) இராமேஸ்வரம் போகும் சாலையோரங்களில் கட்டப்பட்டு, நடந்து செல்லும் பயணிகளுக்கு நோய் ஏற்பட்டால், அங்குத்தங்கி மருத்துவமும் பெற்றனர். இச்சத்திரங்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாதாரண நோய்களைத் தீர்க்கவல்லதாக எட்டு மருந்தகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சஹாஜி வெளியூரிலிருந்து மருத்துவர்களை அழைத்த செயல் பீஜப்பூர் சுல்தானைப் பார்த்துச் செய்த செயலை ஒத்தது ஆகும். இச்செயல் சஹாஜி மன்னர் மராட்டிய அரசர்களில் இரண்டாமவன் என்பதால் உள்நாட்டின் மருத்துவர்களின் திறமையை அறியாமல் இருந்ததே காரணமாகும். மேலும் துளஜாஜிக்கு முன்பிருந்த வர்களும் சித்த மருத்துவர்களின் பெருமையை, மன்னர்களிடம் கொண்டிருந்த உறவை அறிந்தவர்களாக இல்லை. இத்துடன் அரண்மனையிலிருந்த மருத்துவம் பற்றிய பதிவுக் குறிப்புகள் (*1773 - 1776*) எரிக்கப் பட்டதினாலும் ஆகும். மராட்டிய அரசர்கள் தங்கள் பதிவுகளை மோடி எழுத்தில் சுவடியில் பதிவு செய்து வைத்தார்கள். இதில் *1000* சுவடிக்கட்டுகள் இன்னும் சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ளன. இதில் பெரும் பகுதி இன்றுவரை மொழி பெயர்த்து வெளியிடப் படாமலே உள்ளன. இவை வெளியிடப்பட்டால் பல அரிய மராத்திய சரித்திரக் குறிப்புகள் கிடைக்கக் கூடும்.

மன்னர் துளஜாஜி இரண்டு மருத்துவ நூல்களைச் சமஸ்கிருதத்தில் எழுதியுள்ளார் என்றாலும், அதில் மருத்துவத்திற்கு ஆற்றிய பணிகளை, சேவையை அறிய முடியவில்லை. இவரால் சுவீகாரம் எடுக்கப்பட்ட அரசர் சரபோஜி - II, உள்நாட்டு மருத்துவத்திற்கு முதன்மை கொடுத்து, இதற்கான மருத்துவக் குறிப்புகளைச் சேகரித்துப் பத்திரப்படுத்தினார்.

இம்மருத்துவமுறைகள் செயல்பாட்டில் இருக்க பல உத்திகளைக் கையாண்டார். எ.கா. மக்களின் துப்புரவு மற்றும் உடல் நலத்தைப் பேண, சரபோஜி தஞ்சையிலுள்ள கோட்டைக்குள் இருந்த சேப்பாண நாயக்கன் ஏரி, சிவகங்கைக் குளம் ஆகியவைகளை ஊரில் உள்ள பல நல்ல தண்ணீர்க் கிணறுகளுடன் இணைத்துப் போதுமான தண்ணீரைப் பொது மக்களுக்குக் கிடைக்க வழியமைத்தார். இது தவிர தஞ்சையில் 6 மைல்கள் சுற்றளவிலுள்ள கருவுற்ற 9 மாதத்திலிருந்து குழந்தை பிறந்த பின் மூன்று மாதங்கள் வரை பாலைத் தாய்க்கும், சேய்க்கும் இலவசமாக அளித்தார். இதை அவர் மகன் சிவாஜியும், தான் இறக்கும் வரை, அதாவது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி தஞ்சையை முழுவதுமாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றும் வரை இச்சலுகைகளை வழங்கினார். தஞ்சையில் அன்றைய கால கட்டத்தில் குருகுல முறைப்படி போதிக்கப்பட்ட மருத்துவம் மறைபொருளாக எழுதி வைக்கப்பட்டு, பலநூறு ஆண்டுகள் இச்செயலே நீடித்ததால் பலருக்கு, பலதரப்பட்ட மருத்துவ முறைகளுடன் மிகவும் சக்தி வாய்ந்த மருத்துவமாகவும், சிலருக்குச் சக்தியற்றதாகவும், மந்திரத்தன்மையற்றதாகவும், பல மருந்துகளைக் கொண்டு குறுக்கு வழியில் குணப்படுத்தக் கூடியதாகவும் மருத்துவம் அமைந்தது. மருத்துவம் பொதுமைப் படுத்தப்படாது மருத்துவப் பள்ளிகள் இன்றி முறைப்படி மருத்துவம் போதிக்காததே இதற்குக் காரணம். மேலும் அன்றைய மருத்துவர்கள் தன்னிடம் உள்ள ஓலைச்சுவடிகளை, மருத்துவச் சுவடி நூல்களை வழிவழியாக வழிபட்டு வந்தனர். இந்நூல்கள் மற்றவர்கட்குக் கொடுத்து வாங்கல் என்பதும் இல்லாது இருந்தது. இந்நூல்களில் மருத்துவத்தைக் கண்டறிதல், குணப்பாடு, அதனால் ஏற்படும் முன்னேற்றம் ஆகியவைகள் முறையாக வகைப்படுத்தப்பட்டு எழுதப்படாது இருந்ததும் ஒரு குறையாகவே காணப்பட்டது. பெரும்பாலான மருத்துவச் சுவடிகளில் நோயின் அறிகுறி, மருத்துவம், குணப்பாடு ஆகியவை அங்குமிங்குமாக இருந்தது. இதன் காரணம் மருத்துவத்தை அறிந்து எழுதியவருக்குப் பிறகு அதைப் பின்பற்றும் சீடர்கள் தனக்கு ஆர்வம் உள்ளதை அல்லது தனக்கு வேண்டியதை மட்டும் ஓலைச்சுவடியில் படி எடுத்திருக்கலாம்.

மேலும் மருத்துவர்களுக்குத் தேர்வு எழுதிச் சான்றிதழ்கள் பெறவோ அல்லது மருத்துவம் புரிய உரிமையோ பெற தேவையின்றி இருந்தது. இதன் காரணமாகப் பல மருத்துவர்கள் மிகக் குறைந்த அளவு மருத்துவ அறிவுடன் தான் இருந்ததால் பண்டைய முடிவுகளைப் பற்றித் தனக்குத் தெரிந்தவரை கையாண்டு மருத்துவம் புரிந்தனர். இதனால் சித்த மருத்துவம் பல போலி மருத்துவர்கள் உருவாகக் காரணமாகி, யார் உண்மையான மருத்துவர், யார் போலியானவர் என்று பிரித்துப் பார்க்க இயலாது போய்விட்டது.

### ஆரம்ப கால மருத்துவத்திலிருந்து வேறுபட்ட மராட்டியர் மருத்துவம்

உள்நாட்டு மருத்துவத்தை ஒட்டியே அக்கால கட்டத்தில் ஐரோப்பிய மருத்துவமும் இருந்தது. அவர்கள் இரத்தம், பித்தம், சளி, எரிப்பாற்றல் ஆகியவைகளே உடல் கேட்டிற்கான காரணம். இதற்கு வாந்தி எடுப்பது, இரத்தத்தை வெளியேற்றுவது, அட்டை (Leech) மருத்துவம், பேதி கொடுப்பது ஆகியவை மருத்துவமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இது போலவே இயற்கையில் கிடைக்கும் மூலிகை, உலோகம் ஆகியவைகளே மருந்தாகப் பயன்படுத்தப் பட்டன. இரும்பு - இரத்த சோகைக்கும், சிங்கோனா மலேரியாவிற்குமே அந்நிலையில் மருந்தாக இருந்தது. அறுவைச் சிகிச்சைகூட கை, கால்களுக்கானதாக இருந்தது. உடல் உள் உறுப்புகள் கேட்கத் தகாததாகக் கருதப்பட்டது. அறுவை மருத்துவர்கள் 1745-ஆம் ஆண்டு வரை நாவிதர்களுக்கு இணையாகவே கருதப்பட்டனர். தொடக்க நிலையைக் கடந்து உடல் கூறு, உடல் இயங்கியல், வேதியல், பௌதீகம் இருப்பினும் அவை மருத்துவம் புரிய துணை செய்யவில்லை. நோய் அறிதல் என்பது அறிகுறிகளை மட்டும் குறிப்பிட்டதாக இருந்தது. மருத்துவமும் அனுபவத்தை ஒட்டியே அமைந்தது.

1753-ல் கல்வியைக் குறித்த ஜேம்ஸ் லின்ட் (Jameslind) நூலும், எட்வர்ட்ஜென்னரின் (Edward Jenner) அம்மை குத்தல் குறித்த நூல்கள் மட்டுமே மருத்துவம் குறித்த நூல்கள். மற்றைய ஏதும் குறிப்பிடத்தக்கதாக இல்லை என்று கூறலாம். அடிசன், (Addison), பிரைட் (Bright) மற்றும் குல் (Gull) போன்றோரின் நூல்கள் பிந்தையதே. 1848 வரை மருந்து போடும் துளையுடைய ஊசிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஐரோப்பிய மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளிடம் கண்ட அறிகுறி குணப்பாடுகளைப் பதிவு செய்து ஆராய்ந்தனர். அவைகளைச் சான்றுகள் மூலம் மெய்ப்பித்துக் கொண்டார்களேயன்றி நம்பிக்கையினால் அறிவியலை வளர்த்துக் கொள்ளவில்லை. ஹெக்னிமேன் போன்றோர் அந்நிலையில் பரிசோதனை மூலம் மருந்துகளை ஆராய முற்பட்டு, பல மருந்துகளைக் கண்டுபிடித்தனர். ஃபிரடரிக் வில்கிம் (Frederick Wilheim), சர்டுனர் (Sertuerner 1805) ஆகியோர் மூலிகையிலிருந்து நோய்களைக் குணமாக்கும் பொருள்களைத் தனித்துப் பிரித்து எடுத்து ஆய்ந்து மருந்து தயாரிப்புக்கு வித்திட்டனர்.

**சரபோஜியின் சித்த மருத்துவத்திற்கான கொடை:**

மேற்கூறப்பட்ட நிலையிலேயே மருத்துவச்சேவை சரபோஜியின் ராஜ்யத்திலும் ஐரோப்பாவிலும், நடைமுறையில் இருந்தது. சரபோஜியின் தந்தை இறக்கும் பொழுது சரபோஜி சிறுவனாக இருந்ததால், வளர்க்கும் பொறுப்பைச் சீர்திருத்த கிருத்துவ மிஷனரியான ஸ்வாட்ஜ் பாதிரியிடம் ஒப்படைத்தார். இவர் வழிகாட்டலில் சரபோஜி சென்னையில் ஐரோப்பிய அறிவுஜீவிகளுடன் படித்து, மேலும், மேலும் புதியவைகளை அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டார். பிறகு பல இந்திய ஐரோப்பிய மொழிகளைக் கற்றுணர்ந்தார். இதன் மூலம் பல மொழி மருத்துவ நூல்களைக் கற்க முனைந்தார். இந்நிலையில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வளம் கொழிக்கும் தஞ்சை ஆட்சியை முழுவதும் அரசரிடமிருந்து, தன் வசம் ஆக்கிக்கொண்டது. இருப்பினும் கம்பெனி அரசருக்குத் தன் அறிவுசார்ந்த வேலைகட்கு, செய்கைகளுக்குத் தேவையான பொருளுதவி அளித்தது.

**மூலிகைத் தோட்டம்:**

ஐரோப்பியக் கல்விபெற்ற அரசர் சரபோஜி பல நோய்களுக்கான மருத்துவக் குறிப்புகளை அறிந்து சோதனை செய்ய முனைந்தார். இதற்காகத் தன்வந்திரி மஹாலின் ஒரு பகுதியில் மருத்துவ சோதனைக்கான மையத்தைத் திறந்து. அதில் 12 இந்திய மருத்துவர்களை நியமித்தார். அவர்கள் நோய்களுக்கான தகுந்த சிகிச்சையை அளித்தனர். ஐரோப்பிய மருத்துவர்கள் நோயாளிகளின் குறிப்பேட்டில், நோயின் தன்மைகளைக் குறித்து வைத்தனர். இதன்படி மன்னர் மருத்துவக் குறிப்பேட்டிலுள்ள மருந்துகளில் சிறந்த வைகளில் 5000 மருத்துவக் குறிப்புகளைச் சேகரித்தார். இதைத் தமிழ் மருத்துவர்களும் சரிபார்த்தனர். இக்குறிப்புகள் பல வகையாகப் பிரிக்கப்பட்டு 18 நூலாக எழுதப்பட்டன. நோயாளிகளிடம் சரியான மருந்து கொடுத்து சோதனை செய்ய மூலிகைத் தோட்டம் பராமரிக்கப்பட்டு, மருந்தும் தயாரிக்கப்பட்டது.

சரபோஜி மருத்துவர்களுக்குச் சரியான மூலிகை களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த, சிறந்த ஓவியங்களைக் கொண்டு அரிய மூலிகைகளின் படத்தை அதன் நிறத்தை ஒட்டி வண்ணத்தில் தத்ரூபமாக வரைந்து, அதனடியில் அதன் பயன்களையும், பெயரையும் குறித்து வைத்துள்ளார். அப்படங்கள் அடங்கிய புத்தகம் இன்றும் சரஸ்வதி மஹால் நூலகத்தில் புதிய படங்களைப் போல காட்சியளிக்கின்றன. இதே போல உடற்கூறுகளைக் குறித்த படங்களும் நூல் வடிவத்தில் வண்ணத்திலும் கருப்பு வெள்ளையுமாகவும், இருக்கின்றன. நோயாளிகளைப் பற்றிய குறிப்புகள் படத்துடன் குணப்பாடுகள் எழுதப்பட்டு, அவை பிற்காலச் சந்ததியினருக்கு ஆய்வுக்கு உதவும் விதமாக உள்ளன. இவைகளில் குறிப்பிடத்தக்கது கண் நோய்களைப் பற்றியது ஆகும்.

**சரபோஜி யாத்திரை:**

சரபோஜி, சரஸ்வதி மஹால் நூலகத்திற்கு மருத்துவம், அறுவைச் சிகிச்சை, தாவர இயல், உடல்கூறு, மிருக மருத்துவம் ஆகியவைகள் குறித்த நூல்களை வாங்கியதோடு அவைகளை அவரே படித்து முக்கியமான கருத்துக்களைக் கோடிட்டு வைத்துள்ளார். மேலும் மன்னர் பழைய ஓலைச்சுவடி நூல்களையும் வாங்கி நூலகத்தின் பயன்பாட்டிற்கு உதவியுள்ளார். இத்துடன் இந்தியாவில் கல்வி கற்பிப்பதில் சிறந்து விளங்கிய காசிக்கு 1820-இல் பரிவாரம், எழுத்தர் மற்றும் அறிஞர்களுடன் யாத்திரை சென்றார். அப்படிச் சென்று வருகையில் பழைமை வாய்ந்த அகத்தியர், தேரையர், பிரம்மமுனி, மச்சமுனி, தன்வந்திரி, சட்டைமுனி, யூகிமுனி, திருமூலர், கொங்கணவர் ஆகியோரின் மருத்துவச் சுவடிகள் திரட்டிக் கொண்டு வரப்பட்டன.

மன்னர் சரபோஜி மருத்துவர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட 5000 மருத்துவக் குறிப்புகளின் குணப்பாட்டை அறிந்து தான் முழுவதும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து 900 குறிப்புகளை மராத்தி மொழியில் உரைநடையில் தன் இனத்தாருக்குப் பயன்தரும் வகையில் மொழிபெயர்த்தார். தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட பாடலாகச் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் வழியாக “சரபேந்திர வைத்திய ரத்னாவளி” என்ற நூல் 1957-இல் வெளியிடப்பட்டது.

இவ்வளவு சிறப்புற்ற மருத்துவம் தொடர்பான தன்வந்திரி மஹால் எங்கிருந்தது என்பதை எஸ். கணபதிராவ் மோடி ஆவணங்களை ஆராய்ந்த பிறகு சரஸ்வதி மஹால் உள்ள இடத்திலேயே நடைபெற்று வந்தது என்று கூறுகிறார். இதுவே கிராமங்களில் நடைபெற்ற ஆரோக்கிய சாலைகளுக்குத் தலைமைப் பீடமாகத் திகழ்ந்தது. இந்த ஆரோக்கியசாலையில் மருத்துவர், டிரஸ்சர், மருந்தாளுநர், கணக்கர், உதவி புரிவர் ஆகியோர் பணிபுரிந்தனர்.

**பல்கலைக்கழகம்:**

கணபதிராவின் மோடி ஆவண ஆய்வின்படி சித்த மருத்துவ ஆய்வுகளுடன் மன்னர் நவ வைத்திய கலாநிதி சாலை என்ற சிறு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து மருத்துவக் கல்வியைப் போதித்ததாகக் கூறுகிறார். மன்னர் தன்வந்திரி மஹால் குறித்த செயல்பாடுகளை, சுவாமி வைத்தியர் ஆலோசனையுடன் நடத்தியுள்ளார். மன்னர் இறந்த பிறகும்கூட தன்வந்திரி மஹால் மருத்துவமனை செயல்பாட்டில் இருந்துள்ளது என்பதை உடற்கூறு குறித்த நூல்கள், அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்கள் மற்றும் நூல்கள் வாங்கப் பட்டுள்ளதை மோடி ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

(Heritage of the Tamils Siddha Medicine: P. 59 - 86). ●

# நியூ செஞ்சுரியின் பெரியாரிய நூல்கள்...




பசு. கவுதமன் தொகுத்தளிக்கும்
பெரியாரின் எழுத்துகளுக்கான செம்பதிப்பு

## "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?"

## பெரியார் ஈ.வெ.ராமசாமி

மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு

**3770 பக்கங்கள் அடங்கிய ஐந்து தொகுதிகள் ₹ 4800/-**

எஸ்.வி.ராஜதுரை - வ.கீதா எழுதிய

## பெரியார்: சுயமரியாதை சமதர்மம்

இந்திய மக்களின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அச்சுறுத்தலை உருவாக்கிக் கொண்டிருக்கும், தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டு, சமூக, அரசியல் பொருளாதார நலன்களைத் துடைத்தெறிய பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் போலி சந்நியாசிகளின் குண்டாந்தடி பாசிசத்தை எதிர்த்து நிற்க, ஊன்றி நிற்பதற்கு மட்டுமே கைத்தடிகளைப் பயன்படுத்திய அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோர் நமக்கான வலுவான கருத்தாயுதங்களாக இருப்பர்.




**₹ 900/-**




## பெரியார் என்னும் இயக்கம்

**தா.பாண்டியன்**

பெரியார் என்பவர் தனியொரு மனிதர். அவரது வாழ்வு ஒரு பேரியக்கமாகும். உலகுக்கே தன்வாழ்க்கைச் செயல்பாட்டில் வழிகாட்டும் பெரியார் காலங்களைக்கடந்து என்றென்றைக்கும் தேவைப்படும் ஞானசூரியன் என்பதை வலியுறுத்துகிறது இந்நூல்

**₹ 80/-**



# பொன்செய் உலைக்களம்

## பாவண்ணன்

'பொன்செய் உலைக்களம்' என்பது தங்கப்பாவின் பாடலொன்றில் இடம்பெறக்கூடிய சொல். அவர் உருவாக்கிய மிகச்சிறந்த சொல்லிணைவுகளில் ஒன்று. அவருடைய ஒட்டுமொத்தமான பாடல்களின் உலகத்திலிருந்து இத்தகு நூறு சொல்லிணைவுகளை நம்மால் தொகுத்துக்கொள்ள முடியும். அந்த அளவுக்கு சொற்கள்மீது ஆர்வமும் காதலும் கட்டுப்பாடும் கொண்டவர் தங்கப்பா. செம்புலப்பெயல்நீர், மீனெறி தூண்டில், அணிலாடு முன்றில், குப்பைக்கோழி போன்ற சங்ககாலப் பாடல்களில் இடம்பெற்றிருக்கும் எண்ணற்ற சொல்லிணைவுகளை நினைவூட்டும் வகையில் தங்கப்பா உருவாக்கியிருக்கும் சொல்லிணைவுகள் அமைந்துள்ளன. ஒருவகையில் சங்கப்பாடல்களின் தொடர்ச்சியாக அவர் நம்மிடையே வாழ்ந்தார்.

அவர் என் ஆசிரியர். 1975 முதல் 1978 வரை நான் அவரிடம் பயின்றேன். 1934இல் பிறந்த தங்கப்பா அந்தக் காலகட்டத்திலேயே தன்னுடைய மிகச்சிறந்த பாடல்களை எழுதிவிட்டார். அவர் கவிதை என்னும் சொல்லை விரும்புவதில்லை. பாடல் என்ற சொல்லையே இறுதிவரைக்கும் பயன்படுத்தி வந்தார். அவரை அழைப்பவர்களும் பாவலர் என்றே அழைத்துவந்தார்கள்.

வாழ்க்கையை இரண்டாகப் பகுத்துப் பார்க்கும் பார்வையை தங்கப்பா தன்னுடைய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஒன்று உரைநடை வாழ்க்கை. இன்னொன்று பாட்டு வாழ்க்கை. உரைநடை வாழ்க்கை சலிப்பு மிகுந்தது. தினசரித் தேவைகளைப்பற்றிய கவலைகளை மனம் முழுக்க நிரப்பிக்கொண்டு ஓடிக்கொண்டே இருப்பது. உலகியல் வெற்றிகளைப்பற்றிய உச்சப்புள்ளிகளை வகுத்துக்கொண்டு, அதை நோக்கி அடி அடியாக ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டே இருப்பது. ஒவ்வொரு நாளும் முன்னேற்றம், அதற்கான திட்டம் என கனவுகளால் நிறைத்துக்கொண்டிருப்பது. அதற்கு நேர்மாறாக பாட்டு வாழ்க்கை இயற்கை இன்பத்தை நாடும் வாழ்க்கை. நம்மைச் சுற்றியுள்ள வானையும் மண்ணையும் செடிகொடிமரங்களையும் ஆர்வத்தோடு பார்த்துச் சுவைக்கும் வாழ்க்கை. கனவுகளாலும் கற்பனைகளாலும் நிறைந்த வாழ்க்கை.

பாட்டு என்றதுமே கற்பனை என்னும் சொல் தானாக வந்து விழுவதைக் கவனிக்கவேண்டும். பாட்டை எழுதுகிறவர், அதைப் படிக்கிறவர் இருவருக்குமே கற்பனை ஓர் அடிப்படைத் தேவையாக உள்ளது. பித்தூறிய மனத்தில் ஊற்றெடுக்கின்றன சொற்கள். ஆற்றில் புரண்டோடிவரும் வெள்ளமென பாவலனின் கற்பனை பாய்ந்தோடி வருகிறது. கற்பனையும் சொற்களும் இணைந்து பாடல் உருக்கொள்கின்றது. பாட்டு எப்போதும் ஒரு காட்சியை முன்வைக்கிறது. அதைப்

படிக்கும் வாசகன் அந்தக் காட்சியை உள்வாங்கிக்கொள்கிறான். அதைத் தன் கற்பனையால் பெருக்கி விரித்தெடுத்து அதில் மனம் தோய்கிறான். வாசகனின் கற்பனை ஒரு காட்சியை ஓராயிரம் காட்சிகளாக மாற்றிக்கொள்ளும் ஆற்றல் கொண்டது.

ஒரு மிகச்சிறந்த பாடல் என்பது பித்து, கற்பனை, காட்சிகள், சொற்கள் அனைத்தும் உச்சம் பெற்ற படைப்பாக இருக்கும் என்பதை ஓர் எளிய வரையறையாக வகுத்துக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக அள்ளூர் நன்முல்லையாரின் குறுந்தொகைப்பாட்டைப் பார்க்கலாம்.

***குக்கூ என்றது கோழி: அதனெதிர்***
***துட்கென்றன்று என் தூஉ நெஞ்சம்***
***தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்***
***வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே***
***'வாள்போல் வைகறை'***

என்னும் சொல்லாட்சி யில் உள்ள கூர்மையைக் கவனிக்கும்போது அதில் அடங்கியிருக்கும் பித்தை உணரலாம். உறையிலிருந்து உருவியெடுக்கப்படும் வாளென பிரகாசம் மிகுந்த ஒரு கோடாக ஒளி பரவி கதிர் எழ இருக்கும் தயார் நிலையை கவிதை காட்சியாக மாற்றுகிறது. ஒரு படையின் புறப்பாடுபோல கதிரவனின் புறப்பாடு குறிப்பாலேயே சொல்லப்படுகிறது. அதைக் காணும் இளம்பெண் பதற்றம் கொள்கிறாள். அவள் காதல் பித்து பலமடங்காகப் பெருகி அவளை அலைக்கழிக்கிறது. கோழியின் கூவலால் முதல் அதிர்ச்சி. வைகறையின் தோற்றத்தால் அடுத்த அதிர்ச்சி. அனைத்தும் அவளை பித்தின் உச்சத்துக்கே கொண்டுசெல்கிறது.

ஒருவர் தோளை ஒருவர் பற்றி உறங்கும் இடம் மஞ்சத்திலா, தோட்டத்திலா, பூப்பந்தலுக்கு அடியிலா, புல்தரையிலா, வயலோரமா என எந்தக் குறிப்பும் இல்லை. அவனோ அல்லது அவளோ வரச்சொல்லி சந்தித்துக்கொண்ட இடம். அவ்வளவுதான்.

இந்தப் பாட்டை சுதந்திரமான வாசிப்புக்குத் தோதான வகையில் நமது காலத்துத் தமிழில் இப்படி எழுதிப் பார்க்கலாம்.

***குக்கூ என்று கோழி கூவியது***
***அதைக் கேட்டு என் நெஞ்சம் அதிர்ந்தது***
***வெட்டித் துண்டாக்கும் வாள்நுனிபோல***
***வைகறைச் சூரியன் வருகிறான்.***

ஒரு பாட்டைப் புரிந்துகொள்வதற்கு இப்படி துண்டுதுண்டான வரிகளாக மாற்றி எழுதிப் பார்ப்பது ஒரு முக்கியமான முயற்சி. கவிதை ரசனையில் இது ஒரு இன்றியமையாத பயிற்சி. இந்த வரிகளை மீண்டும் மீண்டும் படிக்கும்போது நம்மையறியாமல் நாம் ஒரு நடுக்கத்தை உணரமுடியும். வெட்டித் துண்டாக்கும் என்ற சொல்லை நம்மால் அவ்வளவு எளிதாகக் கடந்துபோய்விடமுடியாது.

இந்தக் குறுந்தொகைப்பாடல் மருதத்திணையில் இடம்பெற்றிருக்கும் பாடல். வயலும் வயல்சார்ந்த இடமும் கொண்டது மருதநிலம். சமநிலத்தில் விவசாயம் செய்து குடிகள் வாழ்ந்துவரும் இடம். நிலத்தோடு பிணைப்பு கொண்டவர்கள். நிலப்பற்று குடிப்பற்றை மேலும் மேலும் கெட்டிப்படுத்தும் ஆற்றல் மிக்கது. குடிப்பற்று சொந்தக் குடிகளுக்கிடையே நெருக்கத்தையும் மாற்றுக்குடிகளுக்கிடையே நெருங்கிவிடாத பகையுணர்ச்சி யையும் ஒரே சமயத்தில் கொண்டிருக்கும். சொல் மட்டுமன்றி வாளும் கட்டுப்பாட்டை மீறிப் பாயும் களம் மருதம். மனிதர்களை வெட்டிக்கொல்வது இயல்பாக உள்ள ஒரு சமூகத்தில்தான் எடுத்த எடுப்பில் அது உவமையாக மாறும் அளவுக்கு மனத்தில் பதியக்கூடிய வாய்ப்புள்ளது. இன்றைய நாகரிக வாழ்க்கையில் நடைபெறும் ஆணவக்கொலையின் ஆதிவடிவமாக 'வெட்டிக் கொல்லும்' சம்பவம் இருக்கக்கூடும். இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து ஒரு பழைய உயிலைக் கண்டெடுத்து வாசிப்பதுபோல இருக்கிறது. ஒரு வாசகனாக இந்த உண்மையைத் தொட்டுணர்ந்ததை நான் மகிழ்ச்சியாகவே உணர்கிறேன். வரிகள் உரைப்பதை அல்லது சுட்டிக் காட்டுவதை மட்டுமன்றி, சொல்லாமல் விட்டதையும் எட்டித் தொடுவது ஒரு வாசிப்புமுறை.

பித்து, கற்பனை, காட்சிகள், சொற்கள் அனைத்தும் சங்கப்பாடல்களில் மிக இயல்பாக அமைந்திருக்கின்றன. நன்முல்லையாரின் பாட்டைப்போல ஒவ்வொரு பாட்டையும் இப்படிப் பகுத்தும் வகுத்தும் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம்.

சங்ககாலத்தைத் தொடர்ந்து நாம் காப்பியங்களின் காலத்தை வந்தடைகிறோம். உடனடியாக நமது கவனத்துக்கு வருவது சிலப்பதிகாரத்தின் கானல்வரிப் பாடல்.

***திங்கள் மாலை வெண்குடையான்***
***சென்னி செங்கோல் அதுவோச்சி***
***கங்கை தன்னைப் புணர்ந்தாலும்***
***புலவாய் வாழி காவேரி***
***கங்கை தன்னைப் புணர்ந்தாலும்***
***புலவாதொழிதல் கயற்கண்ணாய்***
***மங்கை மாதர் பெருங்கற்பென்று***
***அறிந்தேன் வாழி காவேரி***

காதல் பித்தேறிய மாதவியும் கோவலனும் காவிரியின் கரையோரம் அமர்ந்து பேசியிருக்கும் தருணத்தில் அந்த மாலை நேரத்து மயக்கமூட்டிய எழுச்சியில் பாடத் தொடங்கும் மாதவி பாடுவதுபோல அமைந்துள்ள பாடல் இது. வற்றாத பித்து. வளமான கற்பனை. செறிவான காட்சி. இனிமையான சொற்கள் என ஒரு பாடலுக்குத் தேவையான அனைத்தும் கச்சிதமாகப் பொருந்தியிருப்பதை உணரமுடியும். ஒரு சுதந்திர வாசகனாக இளங்கோவடிகள் எழுதியிருக்கும் இவ்வரிகளைத் துணையாகக் கொண்டு எழுத்தில் இல்லாத இன்னொரு இடத்துக்கு என்னால் சென்று சேரமுடிந்திருக்கிறது. மாதவியும் கோவலனும் காவிரிக்கரையோரம் உட்கார்ந்திருக்கிறார்கள். மாதவி

காவிரியில் கரைபுரண்டோடும் தண்ணீரின் அழகையும் நுரைத்துப்போகும் அலைகளின் அழகையும் பார்த்து மன எழுச்சியுற்று பாட்டிசைக்கிறாள். அந்தப் பாட்டைக் கேட்கும் கோவலன் மாதவியின் மனம் திரிந்துவிட்டதாக நினைத்துத் தடுமாற்றம் கொள்கிறான். பிறகு குழப்பத்தோடு பிரிந்துசெல்கிறான். இவை அனைத்தும் பின்னால் நிகழவிருக்கும் காட்சிகள். ஆனால் இளங்கோவடிகள் காவிரிக்கரையிலிருந்து பாடலைத் தொடங்கும் கணத்திலேயே இவையனைத்தையும் ஒரு வாசகனால் நுட்பமாக உணர்ந்துவிட முடியும். கண்முன்னால் ஓடும் ஆற்றின் ஓட்டம் ஒருவகையில் அதைக் காண்கின்ற மானுடனின் மனவோட்டத்துக்கு நிகரானது. இக்கணம் நாம் பார்க்கும் நீரும் அலையும் வேறு. கடந்த கணத்தில் பார்த்த நீரும் அலையும் வேறு. நீர் ஒருபோதும் நிலைத்திருப்பதில்லை. நிலையான எண்ணங்களிலிருந்து திரிபடைந்து குழம்பிவிட்ட கோவலனையே அந்தக் காவிரியின் சித்தரிப்பு வழியாக பார்க்கவைத்துவிடுகிறார் இளங்கோவடிகள். சங்கப் பாடலும் காப்பிய காலத்துப் பாடலும் காலத்தால் வேறுபட்டவையே தவிர கட்டமைப்பிலும் தரத்திலும் ஒரே விதமாகவே அமைந்துள்ளன.

காப்பிய காலத்தைத் தொடர்ந்து நாம் பக்தியிலக்கியத்தின் காலத்தை வந்தடைகிறோம். திருவாசகமும் நாலாயிரத்திவ்விய பிரபந்தமும் பாடல் சுரங்கங்களாக நம் முன்னால் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டுக்காக தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் ஒரே ஒரு பாடலை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

**ஊரிலேன் காணியில்லை**
**உறவுமற்றொருவர் இல்லை**
**பாரில்நின் பாதமூலம்**
**பற்றிலேன் பரமமூர்த்தி**
**காரொளி வண்ணனே என்**
**கண்ணனே கதறுகின்றேன்**
**ஆருளர் களைகன் அம்மா**
**அரங்கமா நகருளானே**
**மனத்தை உருக்கும் சொற்கள்.**

நேரடியாகவே ஆதரவற்ற தன் கோலத்தை முன்வைத்து தஞ்சம் தேடும் சொற்கள். இந்தப் பாடலிலும் ஒரு நுட்பமான வாசகனின் கண்களுக்குத் தென்படும் அழகான விவரணையொன்று உள்ளது. ஒருவனுக்கு பிறப்பால் இந்த உலகில் கிடைக்கக்கூடியது முதல் அடையாளம். வாழும் ஊர் வழங்கக்கூடியது இரண்டாவது அடையாளம். குருதிவழியில் பெருகிச் சூழும் உறவுகளின் நெருக்கத்தால் கிடைக்கக்கூடியது மூன்றாவது அடையாளம். தன் அறிவாலும் ஆற்றலாலும் அவனே இவ்வாழ்வில் தேடியடையும் தகுதியால் கிடைக்கக் கூடியது நான்காவது அடையாளம். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த நான்கு அடையாளங்களும் ஒருவனைக் கவசங்களாகத் தாங்கி நிற்கின்றன. ஆபத்தான நேரத்தில் ஒருவ்னுக்கு அரணாக வந்து நிற்கவேண்டியது குடும்பத்தின் கடமை. ஒருவேளை அதற்கு வழியில்லையென்றால் உறவு காக்கவேண்டும். அவர்களாலும் அவன் துறக்கப்பட்டால் ஊர் காக்கவேண்டும். அனைத்தாலும் துறக்கப்பட்டவனை அவனுடைய தகுதி காக்கவேண்டும். ஆதரவற்றவன் என்னும் இடத்தில் இந்த உலகம் ஒருவனைத் தள்ளிவிட்டுப் போகும் அளவுக்கு கருணையற்றதாக இன்னும் மாறவில்லை. ஆதரவற்றவன் என ஒருவன் தன்னை அறிவித்துக்கொள்ளும் முன்பு இந்த நான்கு அடையாளங் களையும் அவன் துறக்கவேண்டும். அப்படித் துறந்தவனே துறவி. தெய்வத்தின் பாதமே அவனுக்கு அடைக்கலம். தொண்டரடிப் பொடியாழ்வாரின் குரலில் தொனிக்கும் வேண்டுகோளை இந்தச் சுதந்திரமான எண்ண ஓட்டத்தின் வழியாகப் புரிந்துகொள்ள முடியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழின் பாடல்மரபு இப்படித்தான் இயங்கி வருகிறது. பாரதியார் ஒரு பாட்டை இப்படித் தொடங்குகிறார்.

**தீர்த்தக் கரையினிலே - தெற்கு மூலையில்**
**செண்பகத் தோட்டத்திலே**
**பார்த்திருந்தால் வருவேன் - வெண்ணிலாவிலே**
**பாங்கியோடென்று சொன்னாய்**
**வார்த்தை தவறிவிட்டாய் - அடி கண்ணம்மா**
**மார்பு துடிக்குதடி**
**பார்த்த இடத்திலெல்லாம் - உன்னைப்போல்**
**பாவை தெரியுதடி.**

'கன்றும் உண்ணாது கலத்தினும் படாது' என்று பாடிய வெள்ளிவீதியாரின் வரிகளிலும் 'முட்டு வேன்கொல் மோதுவேன்கொல்' என்று பாடிய ஔவையாரின் வரிகளிலும் தொனித்த அதே ஆற்றாமை. அதே வேதனை. அதே வலி. மார்பு துடிக்குதடி என்னும் சொல் படிப்பவர்களின் மார்பைத் துடிக்கவைக்கிறது. ஒரு பைத்தியம்போல பார்வை படும் இடங்களிலெல்லாம் அவளுடைய நிழலுருவத்தைக் கண்டுகண்டு மனம்நொந்து சுருங்கும் சித்திரத்தை நம்மால் பெற்றுக்கொள்ள முடிகிறது. 'எங்கு நின்றுகொண்டு இவனை இப்படி அவள் அலைக்கழிக்கிறாள்' என வாசிப்பவர்கள் அனைவரையும் வேதனைக்கு ஆளாக்கி கண்ணம்மாவைத் தேடுகிறவர்களாக மாறிவிடுகிறார்கள். பிறகொரு கட்டத்தில் தன் கண்ணம்மாவைத் தொலைத்துவிட்டுத் தேடுகிறவர்களுக்கும் காத்திருப்பவர்களுக்கும் இந்தப் பாடல் தோன்றாத்துணையாக மாறிவிடுகிறது.

மரபுப்பாடலின் தேக்கம் கிட்டத்தட்ட பாரதியாரின் காலகட்டத்திலேயே உருவாகிவிட்டது. பாட்டின் சட்டகத்தில் பொருத்தப்பட்ட சொற்களையெல்லாம் பாடல் என நம்பிய கவிராயர்கள் மரபுப்பாடல் வடிவத்தை படாதபாடு படுத்தி விட்டார்கள். பாடலுக்கு உயிர் என நம்பிய பித்து, கற்பனை, காட்சி அனைத்தும் பறந்துபோக, இலக்கண வடிவத்தில் நிரப்பப்பட்ட சொற்கூட்டத்தைப் பாடலென முன்வைப்பவர்கள் வந்துவிட்டார்கள். மரபுப்பாடல் மதிப்பிழந்துபோனதற்கு இது முதன்மைக் காரணம்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னால் மரபுப்பாடல்களின் மதிப்பு எப்போதும் தன் உச்சத்தில் மட்டுமே இருந்ததா என்றொரு கேள்வி எழுந்தால், இருந்திருக்க வாய்ப்பில்லை என்றுதான் விடைசொல்ல வேண்டும். உலகில் ஒரு பொருளுக்கான மதிப்பு திரண்டுவரும் நேரத்திலேயே அதைப் போலிசெய்து முன்வைக்கும் முயற்சிகளும் சமூகத்தில் உருவாகவே செய்யும். அவற்றை முன்வைத்து உயர்ந்தவை எனப் பேசுகிற ஒரு கூட்டம் இருந்திருக்கவே வாய்ப்புண்டு. உண்மை போலிகளோடு மோதியே தன்னை நிறுவ வேண்டிய சூழல் ஒவ்வொரு கட்டத்திலும் இருந்திருக்க வேண்டும். பாடல் உருவாக்கத்துக்கான மாற்று வழிமுறைகள் இல்லாத தருணத்தில் இது தவிர்க்கமுடியாத ஒன்று.

ஆங்கிலேயர் வருகையை ஒட்டி நம் நாட்டில் ஆங்கிலம் வேரூன்றத் தொடங்கியது. நம் மக்களும் ஆங்கிலம் படிக்கத் தொடங்கினர். வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் வளம்பெறவும் ஆங்கில அறிவு அவர்களுக்குப் பயனுள்ளதாக இருந்தது. ஆங்கிலம் வழியாக உலகெங்கும் இலக்கியம் இயங்கும் விதங்களைப்பற்றிய அறிவும் தெளிவும் நம்மை வந்தடைந்தன. ஆங்கிலம் கைப்பழக்கமான சில ஆண்டுகளிலேயே இந்திய எழுத்தாளர் தாகூர் நோபெல் பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். உலகக்கவிதைகளில் உருவான வடிவமாற்றம் தமிழ்க்கவிதைகளிலும் நிகழ்ந்தது. பாரதியார் வாழ்ந்த காலம் ஒரு திருப்புமுனைக்காலம். மரபுப் பாடல்களில் தேர்ச்சிமிக்க பாரதியார் வசனகவிதைகளை எழுதி ஒரு புதுமரபுக்கு வித்திட்டார். மரபுப்பாடலுக்குக் கவசமாக இருந்த இலக்கண வடிவம் மெல்ல உதிரத் தொடங்கியது.

தொடக்கத்தில் யாப்புவடிவத்தில் பாடல்களை எழுதிய ந.பிச்சமூர்த்திக்கு இந்தப் புதிய வசனகவிதை வடிவமே தனக்கு உகந்த வழியெனக் கண்டுணர்ந்து அந்த வடிவத்தில் எழுதத் தொடங்கினார். 'கிளிக்கூண்டு', பெட்டிக்கடை நாராயணன் போன்ற அழகான சித்தரிப்புக்கவிதைகள் வெளிவரத் தொடங்கின. முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் புதுப்பாடலின் வடிவம் மெல்ல மெல்ல வரவேற்கப்பட்டு, பல புதிய பாவலர்கள் எழுதத் தொடங்கினார்கள். எழும் மாற்றத்தினை உள்வாங்கி அறிந்துகொள்ளும் விழைவில்லாத மரபுப்பாவலர்களின் முயற்சிகள் மதிப்பற்றுச் சரிந்தன.

மரபுப்பாடல்கள் மீது படிந்து அழுத்திக் கொண்டிருந்த பண்டிதத்தனத்தை அகற்றி அவை வேர்பிடித்து நின்று இலைவிரித்து, கிளைவிரித்து, அரும்பி மலர்வதற்குத் தேவையான ஆற்றலை வழங்கியவர் தங்கப்பா. 1934இல் பிறந்த தங்கப்பா தானாகவே ஏற்றுக்கொண்ட பணி இது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல தேர்ச்சிமிக்க தங்கப்பா புதிய வடிவத்தை நோக்கிச் செல்வதே அவருடைய காலகட்டத்துக்கும் அவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்த தகுதிக்கும் பொருத்தமான ஒன்றாக இருந்திருக்கும். மாறாக, மரபிலக்கிய வழியின் மீது அவர் கொண்டிருந்த அளவற்ற பற்று அதை மேலும் மேலும் வளர்த்தெடுத்துச் செழுமைப்படுத்தவேண்டும் என்னும் கனவை அவருக்குள் ஊட்டியது. மரபுப்பாடல்களின் வழி முற்றிலும் அடைபட்டுப் போகவில்லை என்பதை தம் பாடல்கள் வழியாக இந்த மண்ணுக்கு உணர்த்துவதையே அவர் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டார். காலத்துக்கேற்றபடி மரபுப் பாடல்கள் புதுப்பிக்கப்படவேண்டியவையே அன்றி, ஒருபோதும் வீசியெறியத்தக்கவை அல்ல என்பது அவர் நம்பிக்கையாக இருந்தது. தங்கப்பாவே தன் 'உயிர்ப்பின் அதிர்வுகள்' தொகுதியின் பின்னுரையில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

'இனிதுமன் அவர் இருக்கை' என்னும் தலைப்பில் தங்கப்பா எழுதிய ஒரு பாடலைப் பார்க்கலாம்.

***வெயர்விளை வெய்துாண் மிசைந்த கேள்வன்
அயர்வறக் கிடந்த அணிசுமை சேக்கை
மகன்தாய் பொருந்தினள்ஆக, மகன்கண்டு
மூவுருள் மிதிசகடு ஊர்தல் நீங்கித்
தாவிப் பாய்ந்து கட்டில் ஏறி
ஈருடல் விலக்கி நடுவிடைப் புக்குப்
பூங்கை இருவர் கழுத்தொடும் வளைஇ
மாறிமாறி இருமுகம் முத்தி
மூரல் இளநகை பிலிற்றினன் இனிதே
இனிதுமன் அவர் இருக்கை
துனிகூர் உலகின் பெறலருங்குரைத்தே***

குறுந்தொகையிலோ, ஐங்குறுநூற்றிலோ இடம்பெறத்தக்க அமைப்பில் இந்தப் பாடல் இருப்பதைக் காணலாம். ஒரு திணையின் பெயரும் துறையின் பெயரும் இருந்தால் அதைத் தாராளமாக சங்கப்பாடலின் கணக்கில் சேர்த்துவிடலாம். அந்த அளவுக்கு கச்சிதமான சொற்கள். மூன்று சக்கரவண்டிக்கு மூவுருள் மிதிசகடு என்னும் புதிய சொல்லொன்றை போகிறபோக்கில் சொல்லிவிட்டுச் செல்கிறார் தங்கப்பா.

ஓர் எளிய குடும்பக்காட்சியே இங்கு சித்தரிக்கப் படுகிறது. ஒரு படுக்கை. அதில் கால்நீட்டிப் படுத்திருக்கிறான் கணவன். ஒரு குழந்தை மூன்று சக்கர வண்டியில் ஏறி படுக்கையைச் சுற்றி வலம் வந்து விளையாடுகிறது. அறைக்குள் மனைவி வருகிறாள். அவளும் களைத்திருக்கிறாள். மெல்ல படுக்கையை நெருங்கி கணவனுக்கு அருகில் படுக்கிறாள். அதுவரைக்கும் மூன்று சக்கர வண்டியை ஓட்டி பொழுதுபோக்கிக் கொண்டிருந்த குழந்தை சட்டென புன்னகையோடு படுக்கையை நோக்கித் துள்ளி வருகிறது. இருவருக்கும் நடுவில் புகுந்து, இருவர் கன்னத்திலும் மாறிமாறி முத்தமிட்டு, இருவர் மீதும் கைகால்களைப் போட்டுக்கொள்கிறது. இந்தச் சித்தரிப்புதான் பாடல். ஒரு புகைப்படம் எடுத்து சட்டமிட்டு பெரிதாக ஒரு கூடத்தில் பார்வைபடும் இடத்தில் மாட்டிவைக்கத் தக்க காட்சி. வாழ்க்கையின் அபூர்வமானதொரு கணம்.

மூரல் இளநகை எவ்வளவு அழகான சொல். குழந்தையின் மூரல் புன்னகையைச் சித்தரிக்கும் தங்கப்பாவின் பாடல் கணவனின் புன்னகையையும் மனைவியின் புன்னகையையும் சித்தரிக்கவில்லை. ஆனால் உய்த்துணரவைக்கிறது. அந்த இடத்துக்கு வாசகனைத் தள்ளிக்கொண்டுபோய்விடுகிறது பாடல் வேகம். மூன்று புன்னகைகள். மூன்றும் மூன்று விதம். அதனால்தான் அது 'இனிதுமன் அவர் இருக்கை' என்றிருக்கிறதுபோலும்.

'நோய் வாழ்க' என்றொரு பாடல். படுத்த படுக்கையில் இருக்கும் ஒரு பெண் தன் தேவைகளை நல்லவிதமாகக் கவனித்து, அல்லும் பகலும் பக்கத்திலேயே இருந்து அக்கறையோடு பார்த்துக்கொள்ளும் கணவனின் அன்பில் மகிழ்ந்து நெகிழ்ந்துபோகிறாள். அவன் அருகில் இருப்பதே அவளுக்கு அருமருந்தாக இருக்கிறது. இந்த நோய் இன்னும் ஒருசில நாட்கள் நீடித்தாலென்ன என்று நினைக்கத் தூண்டுகிறது அவள் நெகிழ்ச்சி. அந்தப் பித்தேறிய மன எழுச்சியில் தனக்கு வந்த நோய் வாழ்க என்று வாழ்த்துகிறாள்.

*'உளிதகர்ந்து அன்ன நுதல்முகம் தாக்கி*
*வலிவுற முறுக்கி யாக்கை வருத்தினும்*
*விலகல் வாழி எற்பிணி வெந்நோய் !*
*உலகுறு பணியின் ஓய்வில் தொண்டுள்ளத்து*
*எம்மையும் பாரார் இயங்கும் எம்கொழுநர்*
*பாடுறு சேக்கை என் மென்மருங்கமர்ந்து*
*பசைவெங்களிம்பு நுதல்படத் தேய்த்தும்*
*நோதோள் நீவியும் நுசுப்பு வேதொற்றியும்*
*பருகுநீர் ஊட்டிப் பனியுரை போர்த்துமென்*
*உடலும் உள்ளமும் உவப்ப*
*அளித்துப் பேணும் அன்பு நீடற்கே'*

அந்த நோய்க்கு அவனே காரணம், அவனுடைய பாராமையால் விளைந்ததாக இருக்கலாம் என்ற கற்பனையோடு அணுகிப் பார்க்கும்போது தன் நோயை வாழ்க என்றுரைக்கும் அவளுடைய மன எழுச்சி இன்னும் பொருள் பொதிந்த ஒன்றாக இருப்பதை உணரலாம்.

'வருகிறேன் கடலே' தங்கப்பாவின் முக்கியமான பாடல். கடலருகில் நிற்கிறான் ஒருவன். கடலை அவன் மனம் பிரதிபலிக்கிறது. அலையோசை அவன் மனஓசையாகிறது. மனம் அந்தக் கடலைப் பிரதிபலிக்கிறது. கொந்தளிக்கும் தோற்றம் அவன் குழப்பத்தின் படிமமாக மாறிவிடுகிறது. கடலையே தன் பாட்டுக்கு நடுவில் அலைவீசிப் பொங்கும்படி செய்கிறார் தங்கப்பா.

*கரையையா மோதுகின்றாய்*
*கரையுமென் உளத்தையன்றோ*
*திரைபடும் திவலை அல்ல*
*சிதறுமென் எண்ணமன்றோ*
*இரையுமுன் இரைச்சல் யாவும்*
*என்மனம் எதிரொலிக்கும்*
*விரைபவை உட்செல்லுங்கால்*
*என்னைஉள் இழுக்கின்றாயே*
*ஒருவர் ஆட்டாது ஆடும்*
*ஊஞ்சலே, கடலே, வாழ்வில்*
*ஒருவரும் துணையிலேன் நான்*
*உணர்வினால் தனியனானேன்*
*புரளும்நின் அலைக்குள் என்னைப்*
*புதைத்திடத் துடிக்கின்றேன் காண்*
*வருகின்றேன்கடலே நில்நில்*
*வண்கையால் வளைத்துக்கொள்வாய்*

'ஆட்டாது ஆடும் ஊஞ்சல்' எவ்வளவு அழகான சொல். ஊஞ்சல் தட்டுபோல நம்மைநோக்கி ஒவ்வொரு முறையும் நீண்டுவரும் அலை வந்துகொண்டே இருக்கிறது.

'குழந்தைகள் ஆட்டம்' பாடல் ஒரு விருந்துக் காட்சியை முன்வைக்கிறது. ஆனால் இந்த விருந்து பெரியவர்கள் வைக்கும் விருந்தல்ல. குழந்தைகள் தயாரித்து குழந்தைகளே உண்டு மகிழத்தக்க விருந்து. ஒரு பெரியவர் அந்தக் குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். அருகில் சென்று நின்று இன்னும் நெருக்கமாக வேடிக்கை பார்க்கிறார். அந்தக் குழந்தைகள் அவரை உணவுண்ண அழைக்கின்றன. மண்ணையும் நீரையும் அவர்கள் உணவாகப் படைக்கிறார்கள். அவரும் மகிழ்ச்சியோடு அவற்றை உண்டுவிட்டுத் திரும்புகிறார். கற்பனையான அவ்விருந்து உண்மையான விருந்தைவிட தடபுடலாகவும் சுவையாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறது. பாடலின் ஒவ்வொரு சொல்லிலும் அந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் வெளிப்படுகின்றன.

இந்தப் பாடலின் நீட்சிபோல அமைந்திருப்பது 'நினைவலைகள்' என்னும் பாடல். பெண்ணை யாற்றங்கரையில் சோலை வழிகளில் அலைந்து திரிந்து சுதந்திரமாகக் கழித்த பொழுதுகளையெல்லாம் தொகுத்துப் பார்த்து அசைபோட்டு மீண்டும் மீண்டும் அம்மகிழ்ச்சியைப் பல மடங்குகளாகப் பெருக்கிக் களிக்கும் ஒருவரை அது நமக்குக் காட்டுகிறது. 'வாழ்வென்னும் பெரும்புதிர்', 'வண்டியில் செல்கையில்' 'இளமை நினைவுகள்' 'கார்கால மகிழ்ச்சி', 'உலகுக்கு வேண்டுகோள்' போன்ற பல பாடல்கள் தங்கப்பாவின் மனம் தோய்ந்த காட்சிகளின் பெருந்தொகுப்புகள். ஒவ்வொரு பாடலும் ஒரு சிற்பம்.

'இருட்பேய் அணங்கு' ஒரு கதையைப்போல சொல்லப்பட்டிருக்கும் பாடல். இரவு புதருக்குள் ஒளிந்திருக்கும் ஓநாயைப்போல மறைந்து காத்திருக்கிறது. பகல் எப்போது மறையும் என்பதை ஒவ்வொரு கணமாக எதிர்பார்க்கிறது. மறைந்து திரியும் ஒரு பேயின் நடமாட்டத்தைச் சித்தரிப்பதுபோல இருள் சித்தரிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பகுதியும் சுவையானது.

இவையனைத்தும் காட்சிப்பாடல்களென தங்கப்பா எழுதிவைத்திருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல் களிலிருந்து எடுக்கப்பட்ட ஒருசில பாடல்கள். காட்சித் தொகுப்புகளாகவே தனித்துள்ள இயற்கையாற்றுப்படை, புயற்பாட்டு, ஆந்தைப்பாட்டு ஒவ்வொன்றும் தனித்து

ஆய்வுசெய்யும் வகைமையில் அமைந்தவை. அவற்றிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் வேண்டுமெனில் இன்னும் பல பாடல்கள் எடுக்கலாம்.

காட்சிகளாக அன்றி, அனுபவத்தெறிப்புகளாகவும் சில பாடல்களை தங்கப்பா எழுதியுள்ளார். ஏற்கனவே நிறுவப்பட்ட உண்மைகளை ஒரு புதிய சொல்லாட்சி வழியாக மீண்டுமொரு முறை நிறுவும் பாடல்கள் அவை. நாலைந்து முறை படித்தாலேயே மனத்தில் பதிந்து ஔவையார் பாடலைப்போலவோ, குறுந்தொகைப் பாடலைப் போலவோ நெஞ்சில் எப்போதும் நிலைத்து நின்றுவிடுபவை.

'அறிவிலர் வாழ்க்கை' என்பது ஒரு பாடல். கழிவிரக்கத்தோடு கூடிய குரலில் முன்வைக்கப்படும் பாடல்

*'கமழ்நெய் உண்ணிய கலன்நுழை எறும்பு*
*விழுந்தே அதனுள் வீய்ந்தாங்கு உலகில்*
*பொருள்தேர் மாந்தர்அப் பொருட்கே அழுந்தி*
*முழுது வாழ்நாளும் முழுகுவர்*
*அளிதோதானே அறிவிலர் வாழ்வே.*

இதே வருத்தத்தை இன்னொரு கோணத்தில் சொல்லும் பாடல் 'உலகியல் உளை' என்றொரு பாடல்.

*அறநூல் ஆய்ந்து என்? அருங்குறள் கற்பின் என்?*
*முறைதேர் சான்றோர் மொழிபல கேட்டு என்?*
*கைப்பொருள் குவித்தோர் பொய்ப்பது காணின் என்?*
*மெய்ப்பொருள் இயற்கை வியன்புலம் தேரின் என்?*
*பேழ்வாய் உழுவை புறந்திரி வெற்பின்*
*ஆழ்கயம் படியும் ஆவலின் தளிநடந்து*
*உளைச்சேற்று அழுந்திய வேழம்போல*
*உலகியற்கு அழுந்திய உள்ளம்*
*விலகியாங்கு எழுதல் அம்மவோ, அரிதே!*

ஒரு பாடலில் எறும்பென்றும் இன்னொரு பாடலில் யானையென்றும் சொல்லப்படும் உவமைகள் முக்கியமானவை. எளிய மனிதர்களுக்கு எறும்பு உவமை. படித்த பெரிய மனிதர்களுக்கு யானை உவமை. எறும்பு உணவைத் தேடிச் சென்று நெய்க்கலத்துக்குள் விழுகிறது. யானை தொலைவில் தெரியும் குளத்தில் இறங்கி ஆடிக்களிக்கும் ஆசையில் முன்பின் யோசனையின்றி நடந்து சென்று சேற்றுக்குள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. இரண்டுமே அனுபவ உண்மைகள். எனினும் தங்கப்பா தன் அருமையான சொல்லாட்சியால் அவற்றை அழுத்தமாகப் பதியவைக்கிறார்.

'கார்கால மகிழ்ச்சி' பாடலில் தும்பிகள் வருகை பற்றிய சித்தரிப்பு இடம்பெறுகிறது. இருள் விலகாத காலை நேரத்தில் பார்க்க நேர்ந்த தும்பிகளைப்பற்றியும் அவை உட்கார்ந்து பறந்து சென்ற தருணங்களைப் பற்றியும் காட்சிகள் மாறும் அதே வேகத்தோடு சொற்களைக் குவித்து பாடலாக மாற்றுகிறார் தங்கப்பா. அப்போதுதான் அபூர்வமானதொரு உவமை அப்பாடலில் வந்து விழுகிறது.

*பொன்செய் உலைக்களத்தில் - ஒரு*
*பொட்டு தெறித்து சுழன்றதுபோல*
*தன் சிறகும் உடம்பும் - மின்னி*
*தகதக என்று பளிச்சிடவே*

தும்பி சுழலும் வேகத்தில் சொற்களும் சுழலும்போது ஒரு வாசகனாக என் மனம் கொள்ளும் பரவசத்துக்கு அளவில்லை. நூறு சதவீதம் தெளிவாகப் பிடிக்கப்பட்ட ஒரு படத்தைப்போல ஒவ்வொரு முறையும் காட்சிகளை மிகவும் தெளிவாக தன் பாடல்களின் முன்வைப்பவராக இருக்கிறார் தங்கப்பா. ஒன்றைப் பலவாகப் பார்க்கத் தெரிந்தவனும் சொல்லத் தெரிந்தவனுமே பாவலன். அந்த மாயக்கலையிலும் அவர் வல்லவராகவே இருக்கிறார்.

அறுபதுகள் முதல் எண்பதுகள் வரையில் அவர் உள்ளார்ந்த எழுச்சியுடன் பாடல்களை எழுதிய வேகத்தில் அடுத்துவந்த ஆண்டுகளில் படைப் பாக்கத்தில் அவர் முயற்சி செய்யவில்லை. கடந்த நாற்பதாண்டுகளில் அவர் ஆர்வம் படைப்பாக்கத்தைக் கடந்து மொழிபெயர்ப்பு, தமிழ்மொழிக்காக உழைத்தல், தமிழின மேம்பாட்டுக்காக செயல்படுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என விரிந்துசெல்லத் தொடங்கியது.

காலத்துக்கு ஏற்றபடி புதுப்பிக்கப்பட்டால் மரபுப்பாடல் வடிவத்தில் எதிர்காலத்தில் படைப் பிலக்கியச் சாதனைகளை நிகழ்த்தமுடியும் என்னும் தங்கப்பாவின் நம்பிக்கையைத் தக்கவைக்கும் விதமாக படைப்புகள் உருவாகவில்லை. படைப்பு முயற்சிகளை அவரே நிறுத்திவிட்டது தமிழின் தீயூழ்.

பண்டிதத்தனத்தை அகற்றி மரபுப்பாடல் வழிக்கான நீரோட்டத்தை தங்கப்பாவே தொடங்கி வைத்தார். அந்தப் பெருமை அவருக்கு எப்போதும் உண்டு. ஏறத்தாழ பன்னிரண்டாயிரம் வரிகள் அளவுக்கான பாடல்கள் நூல்வடிவில் இப்போது தொகுக்கப்பட்டுள்ளன. தொகுக்கப்படாத பாடல்களும் அதே அளவில் இருக்கக்கூடும். இரண்டையும் இணைத்துக்கொண்டால் ஏறத்தாழ இருபத்தைந்தாயிரம் வரிகள். தமிழிலக்கிய வரலாற்றில் அவர் மிகமுக்கியமான ஒரு சாதனை யாளராகவே எப்போதும் குறிப்பிடப்படுவார்.

'பொன்செய் உலைக்களம்' என்னும் படிமத்தை இன்னொருமுறை நினைத்துக்கொள்ளலாம். பாடலிலிருந்து இந்தச் சொற்களை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து, ஒரு மந்திரத்தைப்போல மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்க்கும்போது நம் மனத்துக்குள் ஒரு காட்சி விரிவதை உணரமுடியும். அந்த உலைக்களத்தை கிட்டத்தட்ட நம் மனமே வடிவமைத்துவிடுவதை உணரலாம். அது தினந்தினமும் அழகுமிக்க தங்க ஆபரணங்களை உருவாக்கும் எரியுலை. ஒரு காலத்தில், அந்த உலையிலிருந்து எழும் ஆபரணமாக இருக்க தங்கப்பா விரும்பியிருக்கக்கூடும். ஆனால் அறுபதாண்டு கால இலக்கிய வாழ்க்கை அவரை உலைக்களமாக சமைத்துவிட்டது.

●

## வாசகர் குரல்

சென்ற செப்டம்பர் மாத உங்கள் நூலகம் மிக சிறப்பாக இருந்தது. ஜனநாயகவாதிகளின் குரல்வளை நெரிக்கப்படுவதை எதிர்த்து அருந்ததி ராய் மற்றும் ஆனந்த் டெல்டும்டெ ஆகியோரின் கட்டுரைகள் இக்காலத்திற்கான தேவையானதொரு தருணத்தில் வெளிவந்துள்ளது. உங்கள் நூலகம் ஆசிரியர் குழுவினருக்கு பாராட்டுகள்.

- **ஆர்.ஜெயப்பிரகாஷ்,** மானாமதுரை

செப்டம்பரில் வெளிவந்த இதழில் இடம் பெற்றிருந்த கட்டுரைகள் அனைத்தும் முக்கியத்துவ மிக்கவையாக இருந்தன. வழக்கமான இதழைவிட சென்ற இதழ் கூடுதல் கனத்தோடும் சிறப்பாகவும் இருந்தது. அ.மார்க்ஸ் அவர்கள் தொடர்ந்து எழுதிவரும் அரவிந்தரைப் பற்றிய கட்டுரை புதிய பல பார்வைகளை முன்வைக்கும் விதமாக உள்ளது. அதேபோல டாக்டர் நரேந்திரன் அவர்கள் எழுதிவரும் மருத்துவம் தொடர்பான கட்டுரைகள் பாதுகாக்கப்பட் வேண்டியவையாகும். தமிழ் மருத்துவம் பற்றி எவரும் எழுதாத விஷயங்கள் அக்கட்டுரைகளில் காணப்படுவது மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

- **எம்.எம்.நந்தினி,** ஆசிரியர், கபிஸ்தலம்

கடந்த உங்கள் நூலகம் இதழ் அருமை. அரசியல் கட்டுரைகள் அனைத்தும் புதிய தகவல்களைக் கொண்டிருந்தன. குறிப்பாக அருந்ததி ராயின் கட்டுரை அனைவரும் படிக்கவேண்டிய கட்டுரையாகும். பெரியாரைப் பற்றி அவரே எழுதியிருந்த தகவல்களைப் படிக்கும்போது ஆச்சரியமாக இருந்தது. அனைத்து கட்டுரைகளும் மிகவும் சிறப்பாக இருந்தன.

- **க.ராஜேந்திரன்,** சென்னை

ஆ.சிவசுப்பிரமணியன் அய்யா அவர்கள் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வரும் ஆங்கில நூல்கள் அனைத்தும் மிகமிக சிறப்பானவையாக உள்ளன. வாங்கிப் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் விதமாக உள்ளன. அவரது நூல் அறிமுகம் தமிழ் வாசகர்களுக்கு புதிய சாளரங்களைத் திறந்து வைக்கின்றன.

- **எஸ்.இளங்கோவன்,** மதுரை


**அறிவிப்பு**

**ஆண்டு சந்தா ₹ 360/-**

**மாணவர்களுக்கான சிறப்பு சந்தா ₹ 300/-**

**ஆயுள் சந்தா ₹ 3000/-**

உங்கள் நூலகம் மாத இதழுக்கு இதுவரை சந்தா புதுப்பிக்காதவர்கள் நியூ செஞ்சுரி புத்தக நிறுவன அனைத்து விற்பனை மையங்களிலும் புதுப்பித்துக் கொள்ளலாம்.

சந்தா தொகையை New Century Reader's Sangam என்ற பெயரில் அனுப்பலாம்
New Century Readers Sangam
Central Bank of India, Ambattur
A/C No. 1035249018 | IFSC : CBINO282161

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி
**நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600098.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410, 48601884

# நியூ செஞ்சுரியின் மார்க்சிய நூல்கள்




₹ 125/-

## அரசும் புரட்சியும்

அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்

**வி.இ. லெனின்**

அரசும் புரட்சியும் என்னும் இந்நூல் சோவியத் புரட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் வெளிவந்தது. ஒரு நூற்றாண்டு கடந்தும் திரும்பத் திரும்ப வாசிக்கப்படுகின்ற சகாப்தம் படைத்த நூல்களில் இதுவும் ஒன்று.

## கூலி விலை லாபம்

**கார்ல் மார்க்ஸ்**

மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் அடித்தளங்களில் ஒன்றான உபரி மதிப்பு கோட்பாட்டை மார்க்ஸ் முதன்முதலாக கூலி விலை லாபம் என்ற இந்நூலில் எடுத்துக் கூறினார்.




₹ 60/-

## கூலியுழைப்பும் மூலதனமும்

**கார்ல் மார்க்ஸ், தமிழில்: ரா.கிருஷ்ணையா**




₹ 45/-

இந்த நூலில், மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள் தெரியாதவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம், கூலியுழைப்பிற்கும் மூலதனத்திற்கும், தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான உறவை அடிப்படையாகக் கொண்ட இச்சமூகத்தைத் திறந்து காட்டுகிறார்.

## மார்க்ஸிய அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்

**எல்.லியான்டியாவ்,** தமிழில் **தா.பாண்டியன்**

மார்க்ஸிய அரசியல் பொருளாதார இயல். இந்த அறிவு இயலின் அடிப்படைகளை ஆழமாகவும் எளிமையாகவும் எடுத்துக் கூறுகின்றது இந்த நூல்.




₹ 105/-




₹ 70/-

## கம்யூனிஸ்டு அகிலம்

வரலாற்று சுருக்கம்

அ. சோபலெவ், கி. ஷிரினியா, ஃபி. ஃபீர்சவ், **தமிழில் ரா. கிருஷ்ணையா**

கம்யூனிஸ்டு அகிலம் 1919 முதல் 1943 வரை செயல்பட்டது. இந்தக் காலத்தில் உலகப் புரட்சி இயக்கங்கள் முகம் கொடுத்த சிக்கல்கள், அவை குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய ஆழமான சித்திரத்தை இந்நூல் வழங்குகின்றது.

# வண்ணமும் நடையியலும்

## ந.முருகேசபாண்டியன்

தகவல் பரிமாற்றக் கருவியான மொழியானது மனிதனைச் சமூகத்துடன் இணைக்கும் நுட்பமாக வினையாற்றுகிறது. மொழி என்பது முன்னர் நடைபெற்ற சம்பவங்களின் விளைவாக நினைவுகளாக விரிவதன்மூலம் சமூகத்தின் தொடர்ச்சியைச் சாத்தியப்படுத்துகிறது. ஒரு சமூகத்தின் அனைத்து விதமான செயற்பாடுகளும் மொழி வழியாகப் புலன்களுக்குள் ஊடுருவுகின்றன. மொழி என்பது தனிப்பட்ட உடலுக்குள் நினைவாகவும், இரு உடல்களுக்கிடையில் எதிரெதிர் செயலாகவும் உள்ளது. இந்நிலையில் மொழி எப்படி பொருள் கொள்ளப் படுகிறது என்பது முக்கியமான பிரச்சினை. ஒரு கவிதை வாசிப்பினில் வரையறுக்கப்பட்ட ஒற்றை அர்த்தம் தருவதில்லை. ஒவ்வொரு மனித உடலும் அனுபவங்கள்மூலம் தனக்கென்று தனித்த மொழி அமைப்பைக் கொண்டிருப்பதே ஒரு கவிதைக்கு வேறுபட்ட அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. இத்தகைய மொழி அமைப்பைப் பொது அறிதலுக்குள் கொண்டுவர இலக்கண நூல்கள் பெரிதும் முயலுகின்றன.

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் மொழியைத் தரப்படுத்தவும், வெளியே இருந்து வருகிறவருக்கு மொழியின் நுட்பங்களை அறிமுகப்படுத்தவும் முயலுகிறது. அதேவேளையில் ஒரு குறிப்பிட்ட பாடலைப் பொருள் கொள்வதற்கான முறையியலை உருவாக்கவும், அதனைப் பிற குழுக்களிடையே பகிர்ந்து கொள்வதற்கான வெளியை உருவாக்கிடவும் பொருளதிகாரம் பயன்பட்டுள்ளது. திணைசார் கோட்பாட்டு வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தந்துள்ள பொருளதிகாரத்தில் செய்யுளியல் இடம் பெற்றது ஆய்விற்குரியது. தொல்காப்பியரின் கவிதையியல் சார்ந்த விமர்சன அணுகுமுறை செய்யுளியலில் பதிவாகியுள்ளது என வரையறுக்கலாம். பண்டைக்காலத்தில் செய்யுள்கள் வழியாகவே தங்கள் கருத்தைப் புலவர்கள் பதிவு செய்தனர். எனவே செய்யுளுக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியர் தொகுத்து உரைத்துள்ளார். அவருடைய இலக்கண வரையறை செய்யுள் பற்றிய தொழில்நுட்பத்தை விளக்க முயலுகிறது.

செய்யுள் என்றும் வழக்கும் என்றும் தொல்காப்பியரால் குறிக்கப்பட்டவை எல்லாம் பேச்சு மொழியும் ஆய்விற்குட்படுத்தப்பட்டதையே குறிக்கிறது. இவ்விரண்டிலும் சுட்டப்பெறும் வேறுபாடுகள் நடையியல் பற்றிய ஆய்விற்கு அடித்தளமாக விளங்குகின்றன. தமிழ் மரபின் நடையியல் பற்றிய கருத்தியல்கள், தொல்காப்பியரின் செய்யுளியலில் இருந்து தொடங்குவதாக ஜெ.நீதிவாணன் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. செய்யுளுக்கும் வழக்குக்கும் இடையிலான வேறுபாடுகளுக்குக் காரணம் உருவம் - உள்ளடக்கம் ஆகிய இரண்டிற்குமிடையிலான உறவுதான்.

### நடையியல் போக்குகள்

படைப்பின் சிறப்பினை அடையாளப்படுத்தவும் படைப்பாளியின் தனித்துவத்தைக் கண்டறியவும் நடை பெரிதும் பயன்படுகிறது. ஒவ்வொரு படைப்பாளிக்கும் சூழல் சார்ந்தும், சொற்களஞ்சியம் சார்ந்தும் தனிப்பட்ட நடை உருவாகிறது. ஒரே ஊரில் வாசிக்கின்ற ஒத்த கருத்துடைய இரு படைப்பாளர்களின் எழுத்து நடைகளும் வேறுபடுகின்றன. நடைக்கேற்றவாறு படைப்புகளும் மாறுபடுகின்றன. ஒரு படைப்பின் அழகு என்பது பெரிதும் நடை சார்ந்துள்ளது. படைப்பாளியின் மொழிப் பயன்பாடுதான் வாசகரைக் கவர்வதாக உள்ளது. படைப்பாளியை அடையாளங்கண்டு படைப்பினை ரசிப்பதற்கு மொழிநடை பயன்படுகிறது. மொழியினால் உருவாக்கப்படும் கருத்துக்கும் நடைக்குமான நெருங்கிய உறவு எப்படி ஏற்படுகிறது என்பது ஆய்விற்குரியது.

இலக்கியப் படைப்புக் குறித்த திறனாய்வு ஒருபுறம் எனில், படைப்பு வெளிப்படும் மொழி சார்ந்த விமர்சனம் இன்னொருபுறம் நடைபெறுகின்றன. இவ்விரு விமர்சனப் போக்குகளையும் ஒருங்கிணைத்துச் செய்யப்படும் செயல் நடையியலுக்கு அடிப்படையாக உள்ளது. இலக்கியத் திறனாய்வும் மொழியியலும் ஒன்றையொன்று எதிர்கொண்டபோது உருவான புதிய துறை நடையியல், மொழியியல் அணுகுமுறையில் உருவமும் திறனாய்வு அணுகுமுறையில் உள்ளடக்கமும் முதன்மையிடம் பெறுகின்றன. நடையியல் சார்ந்த ஆய்வுகள் ஒருவகையில் அறிவியல் போக்கினை முதன்மைப்படுத்துகின்றன.

### தமிழ் மரபில் நடையியல்

தொல்காப்பியரின் நடையியல் கருத்துகள் செய்யுளியல் இயலில் வெளிப்பட்டுள்ளது.

பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள செய்யுளியல் இயலின் முதல் நூற்பா நடையியல் கோட்பாட்டினை விளக்குவதாக ஜெ.நீதிவாணன் குறிப்பிடுகிறார். கருத்துகள் எவ்வாறு வடிவத்துடன் ஒருங்கிணைந்து பொருளைப் புலப்படுத்துகின்றன என்பதைச் செய்யுளை அடிப்படையாகக்கொண்டு செய்யுளியல் விளக்குகிறது.

செய்யுளியலின் முதல் நூற்பாவில் செய்யுளுக்கு உரிய முப்பத்து நான்கு உறுப்புகள் குறிப்பிடப் பட்டுள்ளன. அவை செய்யுளின் மொழி சார்ந்த கட்டமைப்பை விளக்க முயலுகின்றன. அவற்றுள் 'ஆறுதலை யிட்ட அந்நாலைந்தும்' என அவர் குறிப்பிடும் முன்னைய இருபத்தாறும் தனிநிலைச் செய்யுளுக்கே உரியன என்றும் பின்னைய எட்டும் தொடர்நிலைச் செய்யுளுக்கு உரியன என்றும் நச்சினார்க்கினியர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள இருபத்தாறு உறுப்புகளும் செய்யுளின் வடிவம், உள்ளடக்கம் உருவாக்குவதற்கு அடிப்படையானவையாக உள்ளன. ஒரு குறிப்பிட்ட பொருளை எவ்வாறெல்லாம் பல்வேறு வடிவங்களில் விளக்க முடியுமென்பதை ஒவ்வொரு உறுப்பின் விளக்கங்களும் சுட்டுகின்றன. கவிஞரின் கற்பனைத் திறனுக்கேற்ப வடிவ உறுப்புகள் நெகிழ்ச்சியாக இருப்பது படைப்பினுக்கு வளம் சேர்க்கின்றன.

## வண்ணம்

வாய்மொழி மரபு செல்வாக்குடன் விளங்கிய காலகட்டத்தில் பாடல்கள் இசையுடன் பாடப் பெற்றன. பாணர் மரபில் பாணர்கள் யாழினை மீட்டிப் பாடல்கள் பாடிய நிகழ்வுகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. ஓலைச் சுவடிகளில் பாடல்கள் எழுதப்பெற்ற பின்னரும் செய்யுள்களை ஓசையுடன் பாடும் மரபு தொடர்ந்தது. புதிதாகச் செய்யுள் எழுதும்போது புலவரின் மனதில் தோன்றும் சந்தம் அல்லது ஓசை படைப்பாக்கத்தினுக்கு உதவியது. அகவல் பா இன்ன ஓசையுடன்தான் பாடப்பெற வேண்டும் என்ற விதி பாடலை மனனம் செய்வதற்கு அடிப்படையாக விளங்கியது. செய்யுளை ஓசையுடன் பாடும் மரபு அழிந்துவிட்ட இன்றைய சூழலில் தொல்காப்பியர் குறிப்பிடும் பல கலைச்சொற்களின் பொருள்களை முழுமையாக அறிய இயலவில்லை. செய்யுள் உறுப்பாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் வண்ணம் ஓசையுடன் தொடர்புடையது. எனினும் வண்ணம் என்ற சொல்லுக்கான நேர்பொருளை வரையறுப்பது சிரமமானது.

'வண்ணந் தானே நாலைந் தென்ப' எனச் செய்யுளியலில் குறிப்பிடும் தொல்காப்பியர், வண்ணம் என்றால் என்னவென விளக்கவில்லை. அவருடைய காலத்தில் வண்ணம் என்ற சொல் எல்லோராலும் எளிதில் விளங்கிக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்திய உரையாசிரியர்கள் வண்ணம் என்ற சொல்லுக்கு விளக்கம் அளித்துள்ளனர். பேராசிரியர் 'சந்த வேறுபாடு' என்றும், நச்சினார்க்கினியர் 'பாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம்' என்றும் விளக்கி யுள்ளனர். வண்ணங்களின் வகைகளை ஆராயும்போது எல்லா இடங்களிலும் வெவ்வேறு அளவுகோள்களைக் கொண்டவை என அறிய முடிகிறது.

## தொல்காப்பியர் சுட்டும் வண்ணங்கள்

தொல்காப்பியர் வகைப்படுத்தும் வண்ணங்கள் பின்வருமாறு:

*பாஅ வண்ணம் தாஅ வண்ணம்*
*வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்*
*இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்*
*நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்*
*சித்திர வண்ணம் நலிபு வண்ணம்*
*அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்*
*ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்*
*எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்*
*தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்*
*உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று*
*ஆங்கென மொழிப அறிந்திசி னோரே*

(தொல்காப்பியம், செய்யுளியல். 205)

இருபது வகையான வண்ணங்களை வேறுபடுத்தும் தொல்காப்பியருடைய செயலின்மூலம் அவருடைய காலத்தில் வண்ணம் பற்றியும் செய்யுள் பற்றியும் பெரிய அளவில் பேச்சுகள் நிலவின என அறிய முடிகிறது. ஒவ்வொரு வண்ணத்திற்கும் விளக்க மளித்ததுடன் எடுத்துக்காட்டுப் பாடல்களையும் உரையாசிரியர்கள் தந்துள்ளனர். அவை வண்ணம் பற்றிய புரிதலுக்கு வழிகாட்டிகளாக உள்ளன. 'கவிதையின் நடையியல்பு அல்லது சொல் நிலை அழகு குறித்த சிந்தனைகளை வண்ணங்கள் விவரிக்கின்றன 'என்கிறார் தமிழவன். 'வண்ணம் எழுத்துகளின் அடிப்படையில் அதாவது வர்ணம் அடிப்படையில் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும்' எனச் சுந்தரமூர்த்தி குறிப்பிடுகிறார். மேலும் 'ஒரெழுத்தின் பயிற்சி மிகுதி, ஒரு குறிப்பிட்ட ஓசையின் பெருக்கம், ஒரு தொடர்புடையதாக இருக்கலாம்' சொல், எண், சீர், அல்லது தொடை பயின்று வரல். ஒரு பொருண்மையின் முடிவு, முடியாமை என்பன வண்ணத்திற்கு அடிப்படையாயின் என்று கூறுவதால் நடையியலில் அமையும் திட்டப்பாங்குகள் என்னும் கருத்தும் இதனோடு என்ற சுந்தரமூர்த்தியின் விளக்கம், வண்ணம் என்பது நடையியலில் அமையும் என்று குறிக்கிறது.

### பாஅ வண்ணம்

*பாஅ வண்ணம்*
*சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்*

(தொல்காப்பியம்,செய்யுளியல்.206)

சொற் சீரடிகளை உடையதாகி இலக்கண நூலில் பா வண்ணம் பயின்று வரும்.

எ-கா: அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு

### தாஅ வண்ணம்

*தாஅ வண்ணம்*
*இடையிட்டு வந்த எதுகைத் தாகும்*

(தொல்காப்பியம்,செய்யுளியல்.207)

தா வண்ணம் என்பது எதுகை இடையிட்டு அமையத் தொடுக்கப்படுவதாகும்.

எ-கா : **உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை**

(ஐங்குறுநூறு ப:456)

*இன்னும் அதைப் பற்றியும் இதைப் பற்றியும்*
*பேசிக் கொண்டு நின்றோம்*

(என்பதாய் இருக்கிறது,ப.76)

### வல்லிசை வண்ணம்

வல்லெழுத்து மிக்குப் பயின்று வருவது வல்லிசை வண்ணம் ஆகும்.

*வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே*

(தொல்காப்பியம்,செய்யுளியல்.208)

எ-கா: *முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்*

(பட்டினப்பாலை : 218)

*கற்க கசடறக் கற்பவை கற்றபின*
*நிற்க அதற்குத் தக*

(திருக்குறள்:391)

### மெல்லிசை வண்ணம்

மெல்லிசை மிகுந்து வருவது மெல்லிசை வண்ணம் ஆகும்.

*மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே*

(தொல்காப்பியம்,செய்யுளியல்.209)

எ-கா:

*பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்*
*செஞ்செவிய கஞ்சணிகர் சீறடி யளாகி*
*அஞ்சொலிள மஞ்ஞையென யன்னமென வந்தாள்*
*வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்*

(கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சூர்ப்பனகைப்படலம் : 24)

*நன்னுதல் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும்*

(ஐங்குறுநூறு:230)

### இயைபு வண்ணம்

இடையெழுத்து மிகுந்து வருவது இயைபு வண்ணம் ஆகும்.

*இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே*

(தொல்காப்பியம், செய்யுளியல்.210)

எ - கா: *வழியினில் இருளில்*
*ஒளியினுக் கேங்கும்*

(சுட்டு விரல் ,ப.124)

### அளபெடை வண்ணம்

அளபெடை பயின்று வருதலால் அளபெடை வண்ணம் எனப்பட்டது.

*அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்*

(தொல்காப்பியம், செய்யுளியல்.211)

எ-கா: *மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்*

(அகநானூறு:99)

*சட்டையுடன் பார்த்தால்*
*என்னடா என்பார்கள்*

(இவர்கள் வாழ்ந்தது, ப.18)

### நெடுஞ்சீர் வண்ணம்

நெட்டெழுத்துப் பயின்று வருதல் நெடுஞ்சீர் வண்ணம் எனப்படும்

*நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்*

(தொல்காப்பியம், செய்யுளியல். 212)

எ-கா: மாவா ராதே மாவா ராதே

(புறநானூறு.273)

மானாட மழுவாட
மயிலாட மயிராட (ஒரு முக்கிய அறிவிப்பு, ப.78 )

### குறுஞ்சீர் வண்ணம்

குற்றெழுத்து மிகுந்து வருதல் குறுஞ்சீர் வண்ணம் ஆகும்.

*குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்*

(தொல்காப்பியம்,செய்யுளியல். 213)

எ.கா: **குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி**

(அக்நானூறு: 4)

### சித்திர வண்ணம்

நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒப்ப விரவி வருவது சித்திர வண்ணம் ஆகும். பல வண்ணங்கள் கலந்துவரும் தன்மையுடையது.

*நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே*

(தொல்காப்பியம்,செய்யுளியல்.214)

எ-கா: ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்
(குறுந்தொகை:231)

## நலிபு வண்ணம்

நலிபு வண்ணத்தில் ஆய்தம் பயின்று வரும். ஆய்தம் நலிந்து கூறும் ஓசையாதலால் ஆய்தம் இடம் பெற்ற செய்யுள் நலிபு வண்ணத்திற்குச் சான்றானது.

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்**

(தொல்காப்பியம்,செய்யுளியல்.215)

எ - கா:

**அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்** (திருக்குறள்:178)

## அகப்பாட்டு வண்ணம்

அகப்பாட்டு வண்ணம் என்பது பாட்டின் முடிபினை விளக்க வரும் ஈற்றசை ஏகாரத்தால் முடியாது, இடையடிகள் போன்று முடியாத தன்மையினால் முடிந்து நிற்பதாகும்.

**அகப்பாட்டு வண்ணம் முடியாத்தன்மையின்**
**முடிந்ததன் மேற்றே**
(தொல்காப்பியம்,செய்யுளியல்.216)

எ-கா: **உண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்**
(ஐங்குறுநுறு:21)

**சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ**
(அகநானூறு. 46)

**புத்தனுக்காகப்**
**பொன்னிழல் விரிக்கும்**
**போதிகள் ஒரு பக்கம்**
**சித்தன் ஏசுவின்**
**செம்புனல் குடிக்கும்**
**சிலுவைகள் ஒருபுறம்** (சுட்டு விரல்.ப.125)

## புறப்பாட்டு வண்ணம்

புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியாதாகி வரும். அதாவது பாட்டின் முடிபினை உணர்த்தும் இறுதியடி புறத்தே நிற்கவும் அதற்கு முன் உள்ள இடையடி முடிந்தது போன்று நிற்பதாகும்.

**புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியா**
**தாகும்**
(தொல்காப்பியம்,செய்யுளியல்.217)

எ-கா: **இன்னா வைகல் வாரா முன்னே**
**செய்ந்நீ முன்னிய வினையே**
**முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே**
(புறநானூறு: 363)

**எல்லா நாய்களுக்கும்**
**வாலாட்டத் தெரியும்**
**எல்லா நாய்களுக்கும்**
**குரைக்கவும் தெரியும்** (கூக்குரல்.ப.27)

இக்கவிதையில் முதலிரு அடிகள் முடிந்தது போன்று உள்ளன.

ஆனால் அடுத்த இரு அடிகளில் கவிதை மீண்டும் தொடர்கின்றது.

## ஒழுகு வண்ணம்

ஓசையால் ஒழுகிக்கிடப்பது ஒழுகு வண்ணம் ஆகும்.

**ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்**
(தொல்காப்பியம்,செய்யுளியல்.218)

எ-கா: **யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா**
(புறநானூறு)

## ஒரூஉ வண்ணம்

நீங்கின தொடையாகி அமைந்தது ஒரூஉ வண்ணம் ஆகும் ஆற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதொன்றனை அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉ வண்ணம் எனப் பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

**ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும்**
(தொல்காப்பியம்,செய்யுளியல்.219)

எ-கா: **சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே**
**பெரியகட் பெறினே**
(புறநானூறு.235)

**யானே யீண்டை யேனே யென்னலனே**
**யானா நோயொடு கான லஃதே**
**துறைவன் றம்மூ ரானே**
**மறையல ராகி மன்றத் தஃதே** (புறநானூறு.235)

## எண்ணு வண்ணம்

எண்ணுப் பயின்று வருவது எண்ணு வண்ணமாகும். எண்ணுதற் பொருளில் வரும் ஓசைத்திறமாகும் என உரையாசிரியர் விளக்குகின்றனர். எண் என்னும் ணகர வீற்றுப் பெயர், உகரச் சாரியை பெற்று எண்ணு என வழங்கப்பெற்றது.

**எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்**

(தொல்காப்பியம்,செய்யுளியல்.220)

எ-கா: **நுதலுந் தோளும் திதலை அல்குலும்**
(அகநானூறு:119)

*நிலம்நீர் வளிவிசும் பென்ற நான்கின்*
*அளப்பரியையே*
*நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்*
*ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை*
(பதிற்றுப்பத்து.14)

## அகைப்பு எண்ணம்

அகைப்பு வண்ணமாவது விட்டுவிட்டுச் சொல்லும் ஓசையுடையது. ஒரு வழி நெடில் பயின்றும் ஒரு வழிக் குறில் பயின்றும் வரும்.

**அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்**

(தொல்காப்பியம்,செய்யுளியல்.221)

எ.கா. **வாரா ராயினும் வரினு மவர்நமக்**
**கியாரா கியரோ தோழி**
(குறுந்தொகை.110)

**நரசிம்மர் இலை மேல் கொஞ்சம்**
**வராகர் மேல் கொஞ்சம்**
**இராமர் மேல் வாமனன் மேல்**
**வெண்புறா பறந்திறங்கி.**
(மீண்டும் அவர்கள்.ப.110)

## தூங்கல் வண்ணம்

தூங்கல் வண்ணம் தூங்கலோசைத்தாகி வரும். இதில் வஞ்சிப்பாவிற்குரிய வஞ்சியுரிச்சீர் பயின்று வரும்.

**தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்**
(தொல்காப்பியம்,செய்யுளியல்.222)

எ-கா : **வசையில்புகழ் வயங்குவெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும்**
(பட்டினப்பாலை.1)

## ஏந்தல் வண்ணம்

ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லின் சொல்லினாலே சொல்லப்படும் பொருள் சிறப்பதாகும். ஏந்தல் என்பது மிகுதல் எனப் பொருள்படும். ஒரு சொல்லே அடுத்தடுத்து மிகுந்து அடுக்கி வருதலின் ஏந்தல் என்னும் பெயர் பெற்றது.

**ஏந்தல் வண்ணம் சொல்லிய சொல்லிற்**
**சொல்லியது சிறக்கும்**
(தொல்காப்பியம், செய்யுளியல்.223)

எ-கா: **நன்றி மறப்பது நன்றுஅன்று நன்றுஅல்லது**
**அன்றே மறப்பது நன்று** (திருக்குறள்.108)

## உருட்டு வண்ணம்

உருட்டிச் சொல்லப்படுவது அராகமாகலின் அராகத் தொடுப்பது உருட்டு வண்ணமாகுமென விளக்கியுள்ளார் பேராசிரியர். நெகிழாது உருண்ட ஓசையாகலின் அது உருட்டு வண்ணம் எனப் பட்டது.

**உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்**
(தொல்காப்பியம்,செய்யுளியல்.224)

எ-கா : **உருமுரறு கருவிய பெருமழை தலைஇய**
(அகநானூறு.158)

## முடுகு வண்ணம்

நாற்சீரடியின்மிக்கு ஓடி உருட்டு வண்ணத்தை யொத்து அராகந் தொடுத்து வருவது முடுகு வண்ணம் எனப்படும்.

**முடுகு வண்ண முடிவறி யாமல்**
**அடியிறந் தொழுகி அதனோர் அற்றே**
(தொல்காப்பியம், செய்யுளியல்.225)

எ-கா; **நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ**

செய்யுள் இயற்றும் புலவர்கள் பின்பற்றிய நடையியல் நெறிமுறைகள் குறித்த தொல்காப்பியரின் விளக்கங்கள், ஒருநிலையில் செய்யுளைப் புரிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. அவருடைய காலத்தில் வழக்கில் இருந்த வண்ணங்கள் பற்றி இன்னும் ஆராய வேண்டியுள்ளது. கலைச்சொல் அளவில் புரிதல் ஏற்படும்போதுதான் நடையியல் குறித்துத் தெளிவான பார்வை ஏற்படும். எனினும் பண்டைத்தமிழரின் நடையியல் பற்றிய சிந்தனைப் போக்கினுக்குச் சான்றாக வண்ணங்கள் விளங்குகின்றன.

## உதவிய நூல்கள்


1. வெள்ளைவாரணன், க(உ-ஆ). தொல்காப்பியம்: செய்யுளியல் உரைவளம். மதுரை:ம.கா.பல்கலைக்கழகப் பதிப்புத்துறை,1989.
2. நீதிவாணன், ஜெ. நடையியல், மதுரை: தெ.பொ.மீ.அறக்கட்டளை, 2001.
3. பூந்துறயான். தொல்காப்பிய நோக்கில் புதுக்கவிதை. கள்ளிப்பட்டி: தமிழியல் ஆய்வு அறக்கட்டளை, 2000.
4. சுந்தரமூர்த்தி,கு. வண்ணத்தியல்பு
5. இன்குலாப்.சூக்குரல்.சிவகங்கை: அன்னம்,1994.
6. அப்துல் ரகுமான்.சுட்டுவிரல்.சிவகங்கை: அன்னம்,1992.
7. புவியரசு. ஒரு முக்கிய அறிவிப்பு. கோவை : விஜயா பதிப்பகம்,1988.
8. இலக்குமிகுமாரன் ஞானதிரவியம். என்பதாய் இருக்கிறது. சென்னை: சிந்து பதிப்பகம்,1994.
9. பழமலய். இவர்கள் வாழ்ந்தது. சென்னை : தாமரைச்செல்வி பதிப்பகம்,1994.
10. பத்துப்பாட்டு
11. குறுந்தொகை
12. அகநானூறு
13. புறநானூறு
14. ஐங்குறுநூறு
15. பதிற்றுப்பத்து
16. திருக்குறள்
17. கம்பராமாயணம்

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின்
# வெ.இறையன்பு நூல்கள்




போர்த்தொழில் பழகு
விலை ₹ 250/-




பத்தாயிரம் மைல் பயணம்
விலை ₹ 265/-




வையத் தலைமைகொள்!
விலை ₹ 399/-






சிக்கனம்
விலை ₹ 50/-




சுத்தம்
விலை ₹ 50/-




தாமதம்
விலை ₹ 50/-




தவம்
விலை ₹ 50/-




தூக்கம்
விலை ₹ 50/-




உடல்
விலை ₹ 50/-




சேமிப்பு
விலை ₹ 50/-




பிரிவு
விலை ₹ 50/-




கல்லூரி வாழ்க்கை
விலை ₹ 50/-




நினைவுகள்
விலை ₹ 50/-



# ஸ்ரீ அரவிந்தரும் மகாத்மா காந்தியும்

**அ.மார்க்ஸ்**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

### 6. "சநாதன தர்மத்தை மீட்டெடுப்பதே விடுதலை" - அரவிந்தர்

இந்திய தேசியம், இந்துத்துவ அரசியல் ஆகியவற்றின் உருவாக்கத்தைப் புரிந்துகொள்ள நாம் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தொடங்க வேண்டும். இந்துத்துவத்தின் வரலாறு 1925ல் ஆர்.எஸ்.எஸ்சின் உருவாக்கத்தோடு தொடங்குவதாகக் கருதுவது அபத்தம். குறைந்தபட்சம் 19ம் நூற்றாண்டிலிருந்து தயானந்த சரஸ்வதி, அரவிந்தர், விவேகாநந்தர் ஆகியோரிடமிருந்து அதைத் தொடங்க வேண்டும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றை நாம் 1857 லிருந்து தொடங்கினாலும், அதிலொரு பண்புமாற்றம் 1905ல் உருவாகிறது. காந்தியின் வருகையோடு மீண்டும் ஒரு பண்புமாற்றம் 1918 வாக்கில் உருவாகிறது. 1905ல் உருவான சுதந்திர வேட்கை என்பது வெள்ளையர் ஆட்சியைத் தனிமனித பயங்கரவாதம், ஆயுதப் போராட்டம் ஆகியவற்றின் ஊடாக அச்சுறுத்தி முடிவுக்குக் கொண்டுவருவது என்கிற நிலையை எடுத்ததைப் பார்த்தோம். காந்தி களத்தில் நுழையும்வரை வெகு மக்கள் அணிதிரட்டல் என்பது முதன்மைப் படுத்தப்படவில்லை.

இந்தியர் என்போர் யார், சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்களின் நிலை என்ன, முதலான கேள்விகள் எல்லாம் அப்போது. உருவாகவே இல்லை. முஸ்லிம்களுக்கு ஒரு தனிநாடு என்பதும் அப்போது விவாதத்திற்குரிய பொருளாகவில்லை. முக்கிய எதிரி வெள்ளையர்கள், அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதுதான் அப்போது மேலெழுந்திருந்த உணர்வு. முஸ்லிம்கள் எதிரிகளாகக் கட்டமைக்கப் படுவது இக்காலகட்டத்தில் தொடங்கப்படவில்லை

ஆயினும் இந்துக்களின் எழுச்சி என்பதனூடாகவே வெள்ளையர்களிடமிருந்து ஆட்சி அதிகாரத்தை வென்றெடுக்க வேண்டும் என்கிற உணர்வு மேலெழுந்திருந்தது.

சீரழிந்து கிடக்கும் இந்துக்களின் ஆண்மையையும் சத்திரிய வீரத்தையும் மீட்டெடுக்க வேண்டும் என்கிற கருத்தை ஒரு கோட்பாடாக முன்வைத்ததில் விவேகாநந்தர், அரவிந்தர் ஆகியோரின் பங்கு முக்கியமானது. விவேகாநந்தரின் புகழ்பெற்ற "மாட்டுக் கறி, திரண்ட சதைத் திரட்சி, பகவத்கீதை (Beef, Biceps and Gita)" என்கிற எழுச்சி உரைகளை நாம் அவ்வளவு எளிதாக மறந்துவிட இயலாது. முஸ்லிம்களை எதிராக நிறுத்தும் நிலை அக்காலத்தில் தொடங்கவில்லை என்றாலும் புதிய இந்திய எழுச்சி என்பது இந்துக்கள், இந்துமதம், சத்திரிய வீரம், பகவத் கீதை என்கிற வடிவங்களின் ஊடாகவே அடையாளப் படுத்தப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த முதற்கட்ட எழுச்சியின் அத்தனை கூறுகளுடன் இறுதிவரை எந்த மாற்றங்களும் இன்றி வாழ்ந்து மறைந்தவர்தான் ஸ்ரீ அரவிந்தர். ஆங்கிலேய நாகரிகத்தில் அமிழ்ந்திருந்த ஒரு மிகப் பெரிய குடும்பத்தில் பிறந்தவர் அவர். சிறு வயதில் வங்கமொழி அறியாமலே வளர்க்கப்பட்டவர். கிரேக்கம், ஆங்கிலம், ஃப்ரெஞ்ச் மொழிகளினூடாகவே அவரது இளம் வயதுக் கல்வி முழுமையும் அமைந்தது. பிரிட்டனில்தான் அவர் ஐ.சி.எஸ் வரை படித்தார். கேம்ப்ரிட்ஜில் படிக்கும்போது அவருக்கு ஃப்ரெஞ்ச் வீராங்கனை ஜோன் ஆஃப் ஆர்க், இத்தாலிய தேசியவாதி மாஜினி ஆகியோரில் ஆர்வம் மேலிட்டது. இந்தியன் மஜ்லிஸ் அமைப்பின் செயலராக இருந்த அவர், 1883ல் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டபோது "தாமரையும் குறுவாளும் (Lotus and Dagger)" எனும் இரகசிய அமைப்பில் இணைந்திருந்தார்.

பரோடாவில் அவர் மன்னரின் பணியில் இருந்தது, பின் 1905ல் வங்கம் வந்து 1906ல் அங்கிருந்த தேசியக் கல்லூரியில் முதல்வரானது முதலியவற்றை அறிவோம். தனது எழுத்துப் பணிகளினூடாக இளைஞர்களைத் திரட்டுவது என்பது இக்கால கட்டத்தில் அவரது செயல்பாடாக இருந்தது. தீவிர மத உணர்வுடன் கூடிய ஒரு தேசியத்தை முன்வைத்து இயங்கிய அவர் அனுஷீலன் சமிதியை உருவாக்கி, "சுதேசிக் கொள்ளை (Swadeshi Dacoity)" என அக்காலத்தில் அழைக்கப்பட்ட கொள்ளை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வெடிகுண்டுகள் உற்பத்தி செய்தல், வெள்ளை அதிகாரிகளைக் கொல்லுதல் என்பதாக அவரது அமைப்பு நடவடிக்கைகள் அப்போது அமைந்தன.

அலிப்பூர் சதி வழக்கில் ஓராண்டு சிறைவாசத்திற்குப் பின் விடுதலை பெற்று வந்த அவர் உத்தர்பாராவில் உரை ஆற்றும்போது மரண தண்டனை விதிக்கப்பட்ட அவரது தம்பி உட்பட 32 இளைஞர்கள் சிறையில் இருந்தனர். அந்த உரையில் அவர், "தேசியம் என்பது என்னைப் பொருத்த மட்டில் அரசியல் அல்ல. அதுவே என் மதம், வேதம், நம்பிக்கை என முன்பு சொன்னேன். இன்றும் அதையே ஒரு சிறிய மாற்றத்துடன் திருப்பிச் சொல்கிறேன். சநாதன தர்மம்தான் எங்களின் தேசியம். இந்து தேசம் என்பது சநாதன தர்மத்தோடு பிறந்தது. அதோடுதான் அது வளர்ந்து வருகிறது... சனாதன தர்மம்! அதுவே எம் தேசியம்" என்றார். (Karmayogin, Early Political Writtings - 2, page 10)

சனாதன தர்மம் என அரவிந்தர் எதைச் சொல்கிறார்? 1883ல் அவர் அதற்கு ஒரு விளக்கம் கூறியிருந்தார். "அடிமைத்தனத்தின் ஊடாக இந்தியர்கள் பலவீனமானவர்களாகவும், கோழைகளாகவும், சுயநலமிகளாகவும் ஆகி விட்டனர். நான்கு வருண வைதீக நிறுவனத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதன் ஊடாகத்தான் உண்மையான தேசபக்தி உடைய வர்களாக அவர்கள் ஆக முடியும். நால் வருணம் என்பது நான்கு சாதிகள் என்பதாகத் தவறாகச் சொல்லப்படுகிறது. அது ஒரு குறியீடு" என்பதுதான் அவர் அன்று சொன்ன விளக்கம் (India's Rebirth, Page 120-121).

இந்த நால் வருண அமைப்பில் சத்திரியர் என்போரே ஆண்மை மற்றும் வீரத்தின் குறியீடு. அரசியல் என்பது சத்திரியர்களுக்கானது. பிராமணர்கள் துறவெனும் புனித நிலையினர். செழிப்பும் கொடையும் வைசியர்களுக்கு உரித்தானது. பணிவு, திருப்தி, ஊழியம் முதலியன சத்திரியர்களின் பண்பு. இந்தச் சத்திரிய மாண்பை இந்தியர்கள் மீட்டெடுப்பதே இந்தியா விடுதலை பெறுவதற்கான ஒரே வழி - இதுதான் தேச விடுதலை குறித்த அரவிந்தரின் விளக்கம்.

சத்திரிய வீரம் என்பதை எப்படிப் புரிந்து கொள்வது? அர்ஜுனன்தான் அதன் அடையாளம். வலிமையான எதிரியைப் போரிட்டு வீழ்த்தியவன். ஆனால் அர்ஜுனனும் கூட போருக்கு முன் எதிரே நிற்பது தன் ரத்த உறவுகள் என்பதைக் கண்டு ஒரு கணம் 'க்ரிபயாவிஸ்தத்தில்' (இரக்கம்) ஆழ்ந்தான். ஆனால் சத்திரிய வீரத்தில் இந்த இரக்கம் அநுதாபம் என்கிற கிருமிகள் புகுந்துவிடக் கூடாது என்கிறார் அரவிந்தர்.

எதிரியை நிர்மூலமாக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட சத்திரிய வீரத்தில் எள்ளளவும் இரக்கத்திற்கும், அனுதாபத்திற்கும் இடமில்லை என்கிற அவரின் விளக்கத்திற்கு அவரே சிறந்த எடுத்துக்காட்டாக நம்முன் அமைவதை இங்கு குறிப்பிட வேண்டும். நீதிபதி கிங்ஸ்ஃபோர்டைக் கொல்லச் சென்றவர்கள் தவறி இரண்டு தாயும் மகளுமான அப்பாவிப் பெண்களைக் கொல்ல நேர்ந்தது குறித்தோ, தன்னை சிறையிலிருந்து தப்புவிப்பதற்காக இருவர் தங்கள் உயிரைப் பகரம் வைத்து ஒரு சக கைதியைக் கொன்றது பற்றியோ தன் குறிப்புகள் எதிலும் சற்றேனும் மனக் கிலேசத்தைக் காட்டாதவர் அல்லவா

அரவிந்தர். சத்திரிய வீரத்துக்கு இதுவே இலக்கணம். தனது கீதை குறித்த விளக்கங்களில் அவர் சத்திரியம் என்பதன் ஊடாக எல்லாவிதமான வன்முறைகளையும் அவர் நியாயப்படுத்துவதைக் காண முடியும்.

தமது வன்முறைப் பாதைக்கான மாதிரிகளை இந்துத்துவவாதிகள், அன்று பாசிசம் திரட்சி அடைந்து கொண்டிருந்த ஜெர்மனி (இட்லர்), இத்தாலி (மாஜினி / முசோலினி) ஆகிய நாடுகளில் தேடியதை அறிவோம். அரவிந்தர் ஜப்பானின் "சாமுராய்" முறையில் தனது சத்திரிய அடையாளத்துக்கு இணை தேடுகிறார். Bourgeoisie and Samurai எனும் கட்டுரையில் ஜப்பானியர்கள் முன்னேறுவதற்குத் தங்களின் பாரம்பரியமான சாமுராய் முறையைக் கைவிடாததும், இந்தியர்கள் வீழ்ந்து கிடப்பதற்கு அவர்கள் தம் சத்திரிய வீரத்தைக் கைவிட்டதும் தான் காரணங்கள் என்கிறார்.

அரவிந்தர் வன்முறையை நியாயப்படுத்திப் பேசுவதற்கு இன்னும் ஏராளமான எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். அவரைப் பொருத்த மட்டில் வன்முறை என்பது தன்னளவில் தீய ஒன்றல்ல. அநீதிக்கு எதிரான வன்முறை என்பது வன்முறையே அல்ல. அங்கே அதுவே நன்முறை. அதில் சில தவறுகள் நடக்கலாம். அதெல்லாம் பொருட்டே இல்லை. அஹிம்சை என்ற பெயரிலோ, இல்லை அமைதி, ஒழுங்கு, இரக்கம் என்கிற பெயர்களிலோ அநீதிக்கு எதிராக அமைதி காப்பதுதான் ஏற்க இயலாத ஒன்று. அப்படியான சந்தர்ப்பங்களில் உலகம் போற்றும் எல்லா சர்வதர்மங்களையும் புறக்கணித்து, நீ எல்லாம் வல்லவனிடம் சரணடைந்து கையில் காண்டீபத்தை எடு என்பதுதான் கீதாரகசியம் என விளக்குபவைதான் அரவிந்தரின் கீதை பற்றிய கட்டுரைகள்.

## 7. ஆரியப் பண்புகளை மீட்டெடுக்கச் சொன்ன அரவிந்தர்

அழிவில்லாமல் ஆக்கமில்லை என்பதுதான் அரவிந்தம். வாழ்வு என்பது சுயமாக உன்னை ஆக்கிக்கொள்ளுதல் (self feeding); பிற உயிரை செரித்துக் கொள்ளுதல் (devouring of other life) என்றார் அரவிந்தர் (India's Rebirth, page 123). வன்முறை என்பது ருத்ரனுக்கு மானுடம் செலுத்த வேண்டிய கடன். அமைதியும் நல்லிருப்பும் தான் விஷ்ணுவின் சட்டம் / நெறி (law) எனில் வன்முறையின் துணையுடன்தான் அதைச் செயல்படுத்த இயலும் (அதே நூல், பக்.144). சத்திரியரின் வில், அம்பு ஆகியவற்றின் துணையோடு தானே பண்டைய ரிஷிகள் தம் யாகங்களை நிறைவேற்ற முடிந்தது.

பற்றறுத்தல், துறவு என்பன இறைவனை அடையும் வழிகளில் ஒன்று என்றபோதிலும் கீதை செயலையே முதன்மைப் படுத்தியது. கர்மயோகத்திற்கு அப்புறம்தான் ஞானயோகமும் பக்தியோகமும். போர், அழிவு, வன்முறை ஆகியவற்றை உள்ளடக்கியதே 'செயல்' என்பதற்கான வரையறை. அதுவே 'நிஷ்காம கர்மம்' எனப்படுவது. அறிவுச் செயல்பாடாயினும், சமூக, அரசியல் செயல்பாடுகளாயினும், நெறியுடன் கூடிய வாழ்வை வாழ்வதாயினும் போராட்டமின்றி முன்நகர்வு சாத்தியமில்லை. என்ன இருந்து கொண்டிருக்கிறது என்பதற்கும் என்ன இருப்பை உறுதிசெய்துகொள்ள முயன்றுகொண்டுள்ளது என்பதற்குமான போராட்டமே வாழ்க்கை.

அஹிம்சை எனும் செயலின்மையை முன்னிறுத்துவது என்பது எல்லாவிதமான நல்லவற்றையும் தகர்த்து, நசுக்கி, அழித்து துவம்சம் செய்கிற அசுர சக்திகளுக்குத் துணை போவதுதான் என்றார் அரவிந்தார், தாமச குணம் அழிவிற்கே இட்டுச் செல்லும். இந்து மதம் கருணையின் அடையாளமான துர்க்கையை மட்டும் வணங்கவில்லை. இரத்தக் கறைபடிந்த, கொடூரமான அழிவு நடனத்தை ஆடிக் கொண்டிருக்கும் துர்க்கையையும் அது வழிபடுகிறது (Essays on Gita, page 66).

அரவிந்தரும் காந்தியும் சந்திக்கவே இயலாத புள்ளி இதுதான். அஹிம்சை என்பதற்குப் "போராட்டமற்றத் தாமச குணத்தின் ஊடான செயலற்ற பணிவு" என்பதாக ஒரு விளக்கத்தை அளித்துப் பின் அதை ஏற்க இயலாது என்கிறார் அரவிந்தர். ஆனால் காந்தி முன்வைத்த அஹிம்சை என்பது செயலற்ற நிலை அல்ல. அது தீவிரமான செயல்பாடுகளுடன் கூடிய ஒன்று. 'ஹிம்சை' இன்றிச் செயல்பாடுகள் சாத்தியமே இல்லை என்கிற கருத்தைத்தான் காந்தி ஏற்கவில்லை. ஆனால அரவிந்தருக்கோ ஹிம்சை இன்றிச் செயல்பாடுகளே இல்லை. காந்திக்கும் அரவிந்தருக்கும் அணுகுமுறையில் உள்ள வேறுபாடு குறித்துச் சற்றுப் பின் பார்க்கலாம். இங்கு அரவிந்தரைத் தொடர்வோம்.

அரவிந்தரைப் பொருத்தமட்டில் அசுர குணத்திற்கும் தேவ குணத்திற்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை. கடுமை, உறுதி, எதிரிகளை அழிப்பதில் இன்பம், சொத்துகளைக் குவித்தல், அநீதியான இன்பத் துய்ப்புக்கள் ஆகியவற்றையே அசுரப் பண்புகள் என்னும் அரவிந்தர், அத்தகைய அசுரப் பண்புகளை சுய நலத்திற்காகவும், சுய போகத்திற்காகவும், சுய புகழுக்கும் பெருமைக்காகவும் மேற்கொள்ளுகிற 'ராஜச'ப் பண்புகளை உடையவனை அசுரன் என வரையறுக்கும் அரவிந்தர், அப்படியான பேராசை, தந்திரம் ஆகியவற்றிற்கு ஆட்படாமல் சுய கட்டுப்பாட்டுடனும், தியாக உணர்வுடனும் அவற்றை மேற்கொள்ளும்போது அது "தேவ" குணமாகிறது என்கிறார் (Essays on Gita, 277,278). ஆக செயலல்ல நோக்கமே அசுரத்தன்மையையும், தேவத் தன்மையையும் வேறுபடுத்துகிறது.. வன்முறை என்றாலே அது சத்திரியப் பண்புதான். உயரிய நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் வன்முறை தேவகுணத்தின் பாற்பட்டது. உயரிய நோக்கமும்,

கட்டுப்பாடும் இன்றி மேற்கொள்ளப்படும் வன்முறை அசுரத்துவம் ஆகிறது.

அரவிந்தர் அழுத்தம் கொடுக்கும் இன்னொரு கருத்தாக்கம் 'ஆண்மை'. காந்தியும் அரவிந்தரும் வேறுபடும் இன்னொரு முக்கிய புள்ளி இது. காந்தி ஆய்வாளர்கள் காந்தியையும் அவரது அரசியலையும் பெண்மைத் தன்மையுடன் பொருத்திச் சொல்வர் (Kiran Saxena, Gandhy's Feminist Politics, Gender Equality and Patriarchal Values).

அரவிந்தரைப் பொருத்தமட்டில், இந்தியர்கள் அடிமைகளாக இருக்க நேர்ந்ததன் அடிப்படை அவர்கள் தங்கள் ஆண்மைப் பண்பை (manlyness) இழந்ததுதான் என்பது அவரது உறுதியான நம்பிக்கை. நண்பர்களைப் பாதுகாத்தல், எதிரிகளை அழித்தல் என்பது ஆண்மையின் சிறப்பு. அத்தகைய ஆண்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த நம் முன்னோர்கள்தான் ஆரியர்கள் என்பார் அறவிந்தர். எல்லாவிதமான மேன்மையான பண்புகளுக்கும் அடையாளமாக 'ஆர்ய' எனும் கருத்தாக்கம் இக்காலகட்டத்தில் முன்வைக்கப் பட்டதற்கு நம் பாரதி ஒரு எடுத்துக்காட்டு. அஷிஷ் நந்தி போன்றோரும் இதைச் சுட்டிக் காட்டுவதைக் காணமுடியும் (Intimate Enemy).

அரவிந்தரைப் பொருத்தமட்டில் ஆர்ய என்பது ஒரு இனம் அல்லது மொழி சார்ந்த கருத்தாக்கம் அல்ல. மேன்மைக்குரிய பண்புகளின் அடையாளமாகவே வேதங்களில் அது வெளிப்படுகிறது என்பது அவர் கருத்து. ஆனால் இந்த ஆரிய மேன்மைப் பண்புகளை இழந்து நிற்பதே, இந்தியர்கள் இப்போது இப்படி அடிமைப்பட்டுக் கிடப்பதற்கான அடிப்படை என்கிறார். மீண்டும் இந்த ஆரியத் தன்மையை மறு உருவாக்கம் (Re-Aryanisation) செய்வது என்பது அவர் முன்வைக்கும் திட்டங்களில் ஒன்று.

ஆனால் ஆரியர்கள் என்போர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தோர் என்பதும் அவர்களின் பரவல் என்பது மேலைத் தேசங்களில் மிகுதியாக இருந்தது என்பதும் அக்காலத்தில் பெரிதும் பேசப்பட்ட ஒன்று. இதை எப்படி அரவிந்தர் எதிர்கொண்டார்?

அரவிந்தரைப் பொருத்தமட்டில் அது பிரச்சினை இல்லை. அதுவே ஒருவகையில் நல்லதும் கூட. ஏனெனில் "இந்தியர்கள் என்போர் மேலைத் தேயப் பண்புகளைத் தம் இரத்தத்தில் கொண்டோர் (men with Occidental Impulses in our blood)" (On Nationalism, p.55) என்பது அவர் கருத்து. ஆக ஆரியத் தமை என்பது இந்தியர்களின் இயல்பு. சரி, இடைக்காலத்தில் இழந்த இந்த ஆரியத் தன்மையை அவர்கள் எப்படி மீட்டெடுப்பது?.

மீண்டும் ஆரியத் தன்மையைப் பெறுவதற்கு ஐரோப்பிய விஞ்ஞானத்தில் நாம் சிறந்து விளங்குவது அவசியம் எனக் கூறும் அரவிந்தர், "அர்ஜுனன் காண்டீபத்தைக் கைக்கொண்டது போல மேலை அறிவு மற்றும் விஞ்ஞானத்தின் கொடைகளாக உள்ள வியத்தகு ஆயுதங்களை (நாம்) கைக்கொள்ள வேண்டும்" (On Nationalism, page 72) என்கிறார்.

இப்படிச் சத்திரியத் தன்மை, ஆண்மை, ஆரியமயமாதல், ஐரோப்பிய அறிவியல் ஆகிய அனைத்தையும் ஒரே தொடர்நிலையின் கண்ணிகளாக முன்வைத்தார் அரவிந்தர் (Jyotirmaya Sharma, Hindutva, p.61). இந்த அனைத்து அம்சங்களிலுமே காந்தியும் அரவிந்தரும் எதிர் எதிர் நிலையில் நின்றதை விளக்க வேண்டியதில்லை.

முதற்கட்ட தேசியவாதிகளின் எல்லாப் பண்பு களையும் அதன் உச்ச வடிவில் அரவிந்தரிடம் காண முடியும். பங்கிம் சந்திர சட்டர்ஜியின் 'வந்தேமாதரம்' அவர்கள் எல்லோரையும் ஈர்த்தது போலவே அரவிந்தரையும் ஈர்த்தது. பங்கிம் சந்திரரின் 'வந்தேமாதரத்தை'யும், தாகூரின் 'ஜனகணமன' வையும் ஒப்பிட்டு முன்னது எப்படி இந்துமதக் குறியீடுகளை இந்தியா என்கிற தேசத்தின் அடையாளங்களாக்கு கின்றது என்பதை நான் விரிவாக விளக்கியுள்ளேன் (பேசாப் பொருளைப் பேசத் துணிந்தேன்). தேசத்தையும் மதத்தையும், தேசபக்தியையும் தெய்வபக்தியையும் இப்படிப் பிரிக்க இயலாமல் ஒன்றாக்கி மத, சாதி, இன, மொழி அடிப்படையிலான எல்லா ஒடுக்கு முறைகளையும் நியாயப்படுத்துவதைக் கண்டுதான் பெரியார் ஈ.வே.ரா அவர்கள், "தேசாபிமானம், பாஷாபி மானம், குலாபிமானம்" ஆகியவற்றைக் கடுமையாகக் கண்டித்தார். அவற்றை அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்றார்.

## 8. ஒரு மகரிஷி இந்துத்துவாவின் கொள்கை பரப்புச் செயலாளராக மாறிய கதை

ஏற்கனவே சொன்ன ஒன்றை நினைவுபடுத்தி மேலே செல்கிறேன். 1905ஐ ஒட்டி எழுந்த தேசியத்தைப் பொருத்தமட்டில் இந்து அடையாளத்துடன் கூடிய தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பு என்கிற மட்டத்திலேயே அது இருந்தது. தேசியத்தின் அடையாளமாக அது அப்போது முஸ்லிம் எதிர்ப்பை முதன்மைப் படுத்தவில்லை.

அரவிந்தரைப் பொருத்தமட்டில் உலகளவில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பிரிட்டிஷ் மற்றும் மேலை விரிவாக்கத்திற்கு எதிரான எல்லாவிதமான அடையாள உறுதியாக்கங்களையும் அவர் ஆதரிக்கும் நிலையிலேயே இருந்தார். அந்த வகையில் அன்று அவர் உலக அளவில் உருவாகிக் கொண்டிருந்த தேசங் கடந்த இஸ்லாமிய ஒற்றுமை (Pan - Islamism) என்கிற உணர்வை ஆதரித்தார். தேசிய உணர்வின் ஒரு தீவிர வெளிப்பாடாக அவர் அதைக் கண்டார்.

அதே நேரத்தில் அவர் அப்போது உருவாகியிருந்த முஸ்லிம்களுக்கான தனி வாக்காளர் தொகுதி என்கிற கருத்தைத் தீவிரமாக எதிர்த்தார் என்பது குறிப்பிடத்

தக்கது. அது முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் ஒரு நிரந்தரப் பிளவை ஏற்படுத்தும் என்றும் அது ஒற்றை இந்திய தேச உருவாக்கத்திற்கு எதிராக இருக்கும் என்றும் அவர் கருதினார்.

இக்கால கட்டத்தில் முஸ்லிம்கள் தொடர்பான அவரது அணுகல் முறை சிக்கலான ஒன்று. பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பதற்காக இந்து அடையாள உருவாக்கத்தில் அவர் எந்தச் சமரசத்திற்கும் தயாராக இல்லை. முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமான உறவு எத்தகையதாக இருக்க வேண்டும் என்கிற தேர்வு முஸ்லிம்களின் கையில்தான் உள்ளது என அவர்களை நோக்கிச் சொன்னார் அரவிந்தர். "அது ஒரு சகோதரனின் இறுக்கமான அணைப்பு என்கிற அளவிலும் இருக்கலாம். அல்லது ஒரு மல்யுத்தக்காரனின் எள்ளளவும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லாத இரும்புப் பிடியாகவும் இருக்கலாம்" (On Nationalism, page 309) என்றார்.

அதாவது எதற்கும் தயார் என்பது பொருள். வலிமையாக உள்ளவர்களின் வலிமை என்பது அவர்களைச் சமரசம் பேசுவதற்குத் தகுதி உடையவர்களாக ஆக்குகிறது என்கிற கருத்தை வெளிப்படுத்திய அவர், "முஸ்லிம்களை முகஸ்துதி செய்வதோ, பலவீனமாகவும் கோழைத்தனத்துடனும் அணுகுவதோ தேவையில்லை" என்றார். "அவனிடமும் கூட நாராயணன் குடி இருக்கக் கூடும். அவனுக்கும் கூட நம் அன்னை அவளது இதயத்தில் ஒரு நிரந்தர இடம் அளித்திருக்கக் கூடும்" என்றார். (On Natiolaism, page 390). இன்னும் சிறந்த புரிதலுக்கு உதவும் வகையில் இறைத்தூதர் மற்றும் இஸ்லாம் குறித்து "நமக்கு" (இந்துக்களுக்கு) இன்னும் நன்றாக விளக்க வேண்டும் என்றார்.

இந்தக் காலகட்டத்தில் இந்திய தேசிய உருவாக்கத்திற்கு இந்து தேசியத்தை ஒரு முன் நிபந்தனையாக முன்வைக்கும் லாலா லஜபதி ராயின் கருத்தை அரவிந்தர் கடுமையாக மறுத்தது குறிப்பிடத் தக்கது (அதே நூல் பக்.483).

"முஸ்லிம் ஆட்சி என்பது இந்திய ஒற்றுமையையும் சகிப்புத் தன்மையையும் ஆதரித்து வளர்த்த நிலை போய் அது முகமதிய ஆதிக்கமாக உருவெடுத்த போது தேசிய உறுதியாக்கம் என்பது நமது குறிக்கோளாக இருந்தது, முகமதிய ஆதிக்கத்தைத் தூக்கி எறிவது நமக்குத் தேவையாக இருந்தது. சிவாஜி, ராம்தாஸ் ஆகியோரின் அந்தக் காலகட்டத்தில் இந்து தேசியத்திற்கு ஒரு தேவை இருந்தது" (அதே நூல், பக்.53).

என்று அவர் கூறுவதை வாசிக்கும்போது இன்று அப்படியான ஒரு சூழல் இல்லை என அரவிந்தர் கூறுவது நமக்குப் புரிகிறது. இன்று நமக்குப் பொது எதிரியாக வெள்ளை ஆதிக்கம் உள்ளது என்பதே அதன் உட்கிடை.

எனினும் அரவிந்தரின் இது குறித்த கருத்துக்கள் தெளிவாகப் பொருள் கொள்ளும்படியாக இல்லை. தொடர்ந்து அவர் இந்து தேசியம் காப்பாற்றப்பட வேண்டுமானால் புவியியல் ரீதியான தனி தேசம் ஒன்று அதற்கு வேண்டும் என்கிறார். மகாராஷ்டிரமும், ராஜஸ்தானும் அப்படியான இந்துக்களுக்கான தனித்த புவிப்பகுதியாக பிடிட்டிஷ் ஆட்சிக்கு முன் இருந்தன. இப்போது ஒரே நாட்டுக்குள் அவை கொண்டுவரப் பட்டுவிட்டன. புவியியல் ரீதியாகவும், இன ரீதியாகவும் ஒரு தனிப் புவிப் பகுதி என்கிற முன் நிபந்தனையை இந்து தேசியம் இழந்து நிற்கிறது என அரவிந்தர் கூறுவதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்துக்களுக்கான தனிப் புவிப்பகுதி ஒன்றில்லை என்பதால் இனி இந்து தேசியம் என ஒன்று சாத்தியமில்லை என அவர் சொல்லுகிறாரா? அப்படி அவர் சொன்னால் நமக்கும் அது பெரு மகிழ்ச்சிதான். ஆனால் அந்தப் பார்வையையும் நிலைபாட்டையும் அவர் அதற்குப் பின் தொடரவில்லை.

'முகமதியர்கள் தமது தனித்துவத்திற்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர். தம்மை முதலில் இந்தியர்கள், அப்புறம்தான் முஸ்லிம்கள் என அவர்கள் ஏற்பதில்லை. பொதுவான பிறப்பு, இரத்தம் எல்லாம் இருந்தும் அவர்கள் நம்மோடு அடையாளப்படுத்திக் கொள்வதைக் காட்டிலும் முகமதிய தேசங்களுடனேயே தம்மை இனம் காண்கின்றனர்" என அடுத்த கணமே குற்றம் சாட்டுகிறார் (அதேநூல் பக்.484).

இந்து தேசியம் என்பது சாத்தியமில்லை எனச் சற்று முன் சொன்ன அவர் அடுத்த கணம் இப்படித் திசை மாறுகிறார்.

"எனவே நமது குறிக்கோள் இந்தியத் தேசியம்தான். அது தன் ஆன்மாவிலும், பாரம்பரியங்களிலும் அதிக அளவில் இந்துத் தன்மையுடன் அமையும். ஏனெனில் இந்துதான் இந்த நிலத்தையும் மக்களையும் உருவாக்கியவன். கண்ணுக்குப் புலப்படாத அவனது ஆண்மை, வீரியம் ஆகியவற்றின் ஊடாக பழம் பெருமைகள், பண்பாட்டுச் சிறப்புகள் என அதன் தொடர்ச்சிக்குக் காரணமானவன்.

ஆனால் அதே நேரத்தில் முஸ்லிமையும், அவனது பண்பாட்டையும், பாரம்பரியங்களையும் தனக்குள் உட்கவர்ந்து கொள்ளுமளவிற்கு இந்திய தேசியம் அகற்சி உடையது" என்கிறார் (அதே நூல். பக்.484).

ஆர்.எஸ்.எஸ்சுடைய இணைய தளத்தில் "சங்கமே எனது ஆன்மா" என வாஜ்பேயி எழுதியுள்ள கட்டுரை ஒன்று உண்டு. அதில் அவர் இஸ்லாமியர் குறித்த ஆர்.எஸ்.எஸ் அணுகுமுறையை விளக்குவார். இஸ்லாமியரை மறுத்து ஒதுக்குவதோ (திரஸ்காரம்), இல்லை அவர்களுக்குச் சலுகைகள் அளித்து திருப்தி செய்வதோ (புரஸ்காரம்) ஆர்.எஸ்.எஸ்சின் அணுகல் முறை.இல்லை எனவும், இஸ்லாமியரை மாற்றிச்

*செரித்துக்கொள்ளுதலே (பரிஸ்காரம்) அதன் அணுகுமுறை எனவும் அதில் குறிப்பிடுவார். (அ.மார்க்ஸ், இந்துத்துவத்தின் பன்முகங்கள், பக்.81).*

*அங்கு சுற்றி, இங்கு சுற்றிக் கிட்டத்தட்ட இதே கருத்துக்குத்தான் அரவிந்தரும் வருகிறார். ஒரு கட்டத்தில் (1923) அவர் முஸ்லிம்களை எச்சரிக்கவும் தயங்குவதில்லை:*

"உண்மைகளை மறைப்பதில் பயனில்லை. ஒரு காலத்தில் இந்துக்கள் முஸ்லிம்களை எதிர்த்துப் போரிட வேண்டி வரலாம். அதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும். இந்து - முஸ்லிம் ஒற்றுமை என்பதன் பொருள் இந்துக்கள் முஸ்லிம்களுக்குப் பணிவது என்பதல்ல. ஒவ்வொரு முறையும் இந்துக்கள் தம் மென்மைப் பண்பின் விளைவாக விட்டுக் கொடுத்தே வந்துள்ளனர். சரியான தீர்வு என்பது இந்துக்கள் தம்மை அமைப்பாக்கிக் கொள்வதுதான். பின்பு இந்து - முஸ்லிம் ஒற்றுமை என்பது தானாகவே வரும். அதுவே பிரச்சினைக்குச் சரியான தீர்வு" (India's Rebirth, page164).

*1909 ல் அரவிந்தர் எதை மறுத்தாரோ அதை 1923ல் ஏற்கிறார். அப்போது இந்துக்களுக்கான தனி அரசியல் என்பதை ஏற்கவில்லை. அப்படிச் சொன்ன அவர் இந்து (மகா) சபாவைக் கண்டித்தார். இப்போது அவரும் அதே கருத்தை மொழிகிறார். சாவர்க்கரும் அப்படித்தானே 2009 க்கும் 2020 கும் இடையில் மாறினார். இடையில் என்ன நடந்தது? அதைப் பின்னர் பார்ப்போம்.*

*கூர்ந்து கவனித்தால் எப்போதுமே இவர்கள் முஸ்லிம்களை ஏற்கவில்லை என்பது விளங்கும். முஸ்லிம்கள் மற்ற மதத்தினரை சகித்துக் கொள்ள மாட்டார்கள் எனவும், இந்துக்கள் மதம் மாற்றாத நிலையில் முஸ்லிம்கள் மத மாற்றத்தைத் தொடர்வதால் அவர்களோடு ஒற்றுமை சாத்தியம் இல்லை எனவும் அப்போதே சொன்னவர்தான் அரவிந்தர்* (Indias Rebirth, page 165).

*1923ல் அவர் வெளிப்படையாகவும், கடுமையாகவும் முஸ்லிம் மதத்தை விமர்சித்தார்.* "இஸ்லாம் மதம் மற்றும் பண்பாடு ஆகியவற்றின் பங்களிப்பு உலகிற்கு ஏதுமில்லை" (India's Rebirth, page 166). *அதன் பண்பாடுகள் என்பன மற்றவற்றிலிருந்து பெறப்பட்டவையே. சொல்லிக்கொள்ளும்படியான தத்துவம், உயர் சிந்தனைகள் ஏதும் முஸ்லிம் மதத்தில் கிடையாது. இந்தோ - சார்செனிக் கட்டிடக் கலை, சில புதிய கவிதை மற்றும் கலை வடிவங்கள் ஆகியவற்றை இங்கு அறிமுகம் செய்ததுதான் இந்தியாவிற்கு இஸ்லாத்தின் பங்களிப்பு. அவர்களின் அரசியல் நிறுவனங்களைப் பொருத்தமட்டில் அவை எப்போதுமே அரைக் காட்டுமிராண்டித் தன்மை யானவைதாம். இஸ்லாம் தன் மதத்தில் சில மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் முஸ்லிம்களின் குணநலன்* (temparament) *மாற வேண்டும் என்றெல்லாம் அரவிந்தர் முஸ்லிம் மதத்தைக் கடுமையாக விமர்சித்தார்* (Indias Rebirth, page 167). *இந்தியாவால் இஸ்லாத்தை உட்செரித்துக் கொள்ள இயலுமா என்றொரு கேள்வி அவர்முன் வைக்கப்பட்டபோது,* "முடியும், ஆனால் அதற்கு முகமதிய மனநிலையில் ஒரு மாற்றம் வரவேண்டும்" *என்றார்* (Indias Rebirth, page 177)..

*முஸ்லிம்கள் குறித்த அரவிந்தரின் பார்வை குறித்து மிக விரிவாக ஆய்வு செய்துள்ள் பேரா. ஜ்யோதிர்மயா ஷர்மா,*

"*1934 வாக்கில் அரவிந்தரின் அணுகல்முறையில் இந்தியா என்பதும் இந்து என்பதும் ஒரே மாதிரியான பொருளுடைய சொற்களாகவே பாவிக்கப்பட்டன*" *என்பார் (முன் குறிப்பிட்ட நூல், பக்.63).*

*பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலில் இந்தியத் தாய் என்பது துர்க்கையின் வடிவத்தில் சித்திரிக்கப்பட்டுள்ள சில வரிகளை நீக்க வேண்டும் என்கிற சர்ச்சை எழுந்தபோது, "இந்துக்களை அவர்களின் பண்பாட்டைத் துறக்கச் சொல்கிறீர்களா?" என அரவிந்தர் கொந்தளித்ததைச் சுட்டிக்காட்டும் ஜ்யோதிர்மய் ஷர்மா,*

"தேசம் அவருக்கு அன்னை, அது துர்க்கையின் வடிவம். தேசியம் என்பது அவருக்கு மதம்; அவரைப் பொருத்த மட்டில் மதம் மட்டுமே தேசத்தின் அரசியலாக இருக்க முடியும். 1939 வாக்கில் இந்துக்கள் மற்றும் இந்துமதம் குறித்த அரவிந்தரின் கூற்றுக்கள் சாவர்க்கரின் 'இந்துத்துவா' கருத்தாக்கத்தை எதிரொலிப்பதாக இருந்தன. சட்டத்தின் ஆட்சி, பன்மைத்துவம், எல்லோருக்கும் குறைந்தபட்ச சுதந்திரத்தை உறுதி செய்தல் ஆகியவற்றுடன் கூடிய தாராள ஜனநாயக நாடு என்பதற்கான அடையாளம் அதில் ஏதும் இல்லை....''

''இந்துத்துவ அடையாள அரசியலின் எழுச்சிக்கு அரவிந்தரின் பங்களிப்பு யாருக்கும் குறைந்ததல்ல. சத்திரியத் தன்மை என்கிற அவரது கருத்தாக்கம் அசுரத்துவமாக வீழ்ச்சியுற்றது. சனாதன தர்மம் மற்றும் ஆரியத்துவத்தை மறு உயிர்ப்புச் செய்தல் முதலான அவரது கோட்பாடுகள் அரசியல் முழக்கங்களாக மாறின. மதம் என்பது அரசியலாக மாறியது. அதுவே இன்றைய ஒரே அரசியலாக உள்ளது என்றும் சொல்லலாம்..'' என முத்தாய்ப்பாகச் சொல்லி முடிப்பார்.

ஒரு மகரிஷி இந்துத்துவாவின் கொள்கை பரப்புச் செயலாளராக மாறிய கதை இதுதான்.

*(இந்தத் தொடரின் இப்பகுதியை எழுத பேரா. ஜ்யோதிர்மய ஷர்மாவின் "Hindutva: Exploring the Idea of Hindu Nationalism" எனும் நூல் பெரிதும் பயன்பட்டது.)*

●

# உலகின் மிக நீண்ட கதை

## ரோகிணி காயத்ரி




**குழந்தைகளுக்கான**
**ஆப்பிரிக்க பழங்கதைகள்**
**தமிழில் : எம். பாண்டியராஜன்**

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*

விலை : ₹ 165/-

கதை கேட்பதில் ஆர்வமில்லாத சிறார்கள் யாரும் உலகத்தில் இருப்பார்களா என்ன? அவர்களுக்கு சுவையான கதைகளைச் சொல்வதற்குத்தான் இக்காலத்தில் ஆட்கள் குறைந்துவிட்டனர். சுமார் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்புவரை பாட்டிமாரும் அம்மாமார்களும் படிக்காதவர்களாக இருந்தாலும் நிரம்பக் கதைகளைச் சொல்கிறவர்களாக இருந்தனர். குழந்தைகளுக்குக் கதைகளைச் சொல்லி உறங்கவைப்பது ஒரு வழக்கமாகவே அந்தக்காலங்களில் நடைமுறையில் இருந்தது. முதல்நாள் தூங்குவதற்கு முன்புவரை கேட்டிருந்த கதையின் தொடர்ச்சியை மறுநாள் சொல்லச் சொல்லி குழந்தைகள் அடம் பிடிப்பதும் மறுபடியும் அவர்கள் அக்கதைகளைச் சொல்வதும் இப்படியாக தினந்தினம் கதைகளைச் சொல்லிக் குழந்தைகளை உற்சாகப்படுத்துவதும் உறங்கவைப்பதும் பெரும்பாலான வீடுகளில் நடந்து வந்தவைதான். கதைசொல்லிகளின் தாத்தாக்களும் பாட்டிகளும் அவர்களுக்குச் சொன்ன கதைகளை தங்கள் சந்ததியினருக்கு வழிவழியாகச் சொல்லி வந்த காலம் நவீன விஞ்ஞான காலத்தில் தடைபட்டுப் போனது.

கதைசொல்லும் நாட்டார் மரபு இன்றைக்கு மங்கி மறைந்துவிட்டபோதிலும் அந்த இடைவெளியை நிரப்பும்வண்ணம் இன்றைய காலத்திற்கேற்றவாறு புதிதுபுதிதான வடிவங்களில் விஞ்ஞானக் கதைகள், விளையாட்டுக் கதைகள், விழிப்புணர்வுக் கதைகள், அறிஞர்களின் கதைகள் எனப் பல்வேறு எழுத்தாளர்கள் பல மொழிகளில் சிறார்களுக்கான கதைகளை எழுதிக்கொண்டு இருக்கிறார்கள். நம் காலத்துச் சிறார்களுக்கு அக்கதைகள் மகிழ்வூட்டுவதோடு அறிவுணர்ச்சியை அகலப்படுத்தவும் செய்கின்றன. தமிழில் சிறார்களுக்கான படைப்புகளை வெளியிடுவதற்கென்றே தனித்தனியான பதிப்பு நிறுவனங்களை பல பதிப்பகங்களும் உருவாக்கி சிறார் நூல்களை அதிகளவில் வெளியிட்டு வருகின்றன.

அந்தளவிற்கு சிறார் இலக்கியம் இன்றைய அவசியத் தேவைகளில் ஒன்றாக மாறியிருப்பதோடு சிறார்களும் பல கல்வி நிறுவனங்களும் அவற்றை வாங்கிப் பயன்பெற்று வருவதையும் காணமுடிகிறது.

புதிய வடிவங்களில் புதிய பாணிகளில் பலவிதமாக கதைகள் ஒருபுறம் வந்தாலும் இப்பிரபஞ்ச வெளியில் பன்னெடுங் காலமாக உலவிக்கொண்டிருக்கும் காக்கா கதை, நரி கதை, நாடோடிக் கதை, நாட்டுப்புறக்கதை, பேய்க்கதை, ராஜாராணி கதை, திருடன் கதை, தந்திரக்கதை, ஏமாற்றுக்கதை, சாகசக்கதை, அரண்மனைக்கதை, குதிரைவீரன் கதை, கடவுளர் கதை, நீதிக்கதை, புராணக்கதை, தேவதைக் கதை போன்ற லட்சக்கணக்கான கதைகளின் மேல் சிறார்களுக்கு இயல்பாக ஏற்படும் ஆர்வமும் விருப்பமும் அலாதியானவை. குழந்தைகளுக்கு பாட்டிமார்களின் அல்லது செவிவழிக் கதைகளின் மீதான லயிப்பும் சுவாரஸ்யமும் வற்றிப் போவதேயில்லை என்பதோடு அக்கதைகளுக்கான மவுசு இன்றைக்கும் இருக்கிறது என்பதை குழந்தைகளுடனான கதைவழி உரையாடல்களின் வாயிலாகப் புரிந்துகொள்ளமுடியும்.

அவ்வகையில் சமீபத்தில் வெளிவந்து கவனம் பெற்றுள்ள ஒரு சிறார் நூலை பார்க்கலாம்.

‘குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கப் பழங்கதைகள்‘ என்ற தலைப்பில் நெஸ்லிங் புக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. (இது சிறார்களுக்கான நூல்களை மட்டும் வெளியிடுவதற்காக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாகும்).

சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்புவரை சிறார் இலக்கியத்திற்காக சிரத்தையோடும் சீர்மையோடும் நூல்களை வெளியிட்டு வந்த சோவியத் ஒன்றியம் ஆங்கிலத்தில் வெளியிட்ட அற்புதமான நூல்களில் இதுவுமொன்றாகும். எஸ்.பி.ஸாக்ஸ் என்பவர் தொகுத்த இந்நூலை எம்.பாண்டியராஜன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இத்தொகுப்புக்கான முன்னுரையில்,

> “நூலைப் படிக்கத் தொடங்கியதுமே குழந்தையாக உணரமுடிந்தது. ஆப்பிரிக்காவாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி, குழந்தைகள் குழந்தைகள்தான். குழந்தைகளுக்கான கதைகளும்கூட அப்படித்தான். படிக்கும்போதே இந்தக் கதைகளில் பல கதைகள், ஏற்கனவே சில மாற்றங்களுடன், வெவ்வேறு வடிவங்களில் என்னுடைய அப்பத்தாவோ அம்மாவோ சொன்னவற்றையொட்டி இருந்தன.’’

என்று மொழிபெயர்ப்பாளர் குறிப்பிடுகிறார்.

இக்கதைகளை வாசிக்கிற ஒவ்வொருவரும் மேற்கண்ட வரிகளின் உண்மைத்தன்மையை கண்கூடாக உணரமுடியும்.

இத்தொகுப்பில் சிறிதும் பெரிதுமாக மொத்தம் **42** கதைகள் இடம் பெற்றுள்ளன. கதைகள் எப்படி எங்கிருந்து யாரிடமிருந்து தோன்றின என்று கதைகள் உருவான கதைகளைப் பற்றி உலகெங்கும் ஏராளமான கதைகள் உள்ளன. அவ்வகையில் ஆப்பிரிக்கக் கதைகள் எவ்வாறு உருவாகின என்பதைச் சொல்லும் சுவாரஸ்யமான கதை இதுதான்.

தான் வாழும் பகுதியிலுள்ள எக்கச்சக்கமான வீடுகளுக்குச் சென்றுவரும் ஒரு சுண்டெலி தான் பார்த்த பல விசயங்களிலிருந்து கதைகளை உருவாக்குகிறது. அக்கதைகளைத் தன் குழந்தைகளாக நினைத்து அவற்றிற்கு விதவிதமான வண்ணங்களில் சட்டைகளைப் போட்டுப் பார்த்து மகிழ்கிறது அந்த சுண்டெலி. அந்தக் கதைகள் சுண்டெலிக்கு ஒத்தாசையாக வீட்டுவேலைகளையெல்லாம் செய்து வந்தன. சுண்டெலி வசித்து வந்த பழையவீட்டின் கதவை ஒருநாள் செம்மறி ஆடு ஒன்று உடைத்துவிடுவதால் கதைகள் எல்லாம் வெளியே வந்துவிட்டன. அதாவது சுண்டெலியின் குழந்தைகள்தான் இப்பவும் கதைகளாக இப்பூமியில் உலவிக்கொண்டிருக்கின்றன.

இத்தொகுப்பிலுள்ள கதைகள் சிறார்கள் மிகவும் விரும்பிப் படிக்கும் வகையில் அமைந்துள்ளதோடு மட்டுமல்லாது பெரியவர்கள் படித்துவிட்டு தங்கள் குழந்தைகளுக்கு சுவையாகச் சொல்லும் விதமாகவும் எளிமையாக சொல்லப்பட்டுள்ளன. குழந்தைகள் மிகமிக விரும்பும் இனிமையான உலகமான விலங்குகளைச் சுற்றியே பெரும்பாலான கதைகள் அமைந்துள்ளன. நாய், பூனை, முயல், ஆடு, கோழிக்குஞ்சு போன்ற வீட்டுவளர்ப்புப் பிராணிகள் தொடர்பான கதைகள் இத்தொகுப்பில் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. அவற்றோடு பருந்து, தவளை, குரங்கு, கழுதை, முதலை, நரி, சிங்கம் போன்ற விலங்குகள் தொடர்பான கதைகளும் நிறைந்துள்ளன. பொதுவாக நாம் படித்திருக்கிற அல்லது கேட்டிருக்கிற விலங்குகள் கதைகளுக்கும் இத்தொகுப்பிலுள்ள கதைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. இக்கதைகள் அறிவுபூர்வமான எவற்றையும் முன்வைப்பதில்லை. நீதி போதிப்பதில்லை. குழந்தைகளின் மன உலகை குதூகலப்படுத்தவும் அவர்களது கற்பனைத்திறனுக்கு தீனி போடவும் மட்டுமே செய்கின்றன. இக்கதைகள். வழக்கமான சிறார் கதைகளில் காணப்படும் அறச் சிந்தனை, நீதி போதனை, குற்றத்திற்கான தண்டனை, நயவஞ்சகம், ஏமாற்று, பழிவாங்கல் போன்ற அம்சங்களை இக்கதைகள் முதன்மைப்படுத்தவில்லை என்பதே இவற்றின் சிறப்பம்சம் எனக் கூறலாம்.

பண்டைய நம்பிக்கைகள், பழங்காலத்தைய கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள இக்கதைகளை விஞ்ஞானப் பார்வையுடனோ கல்வியறிவுக் கண்கொண்டோ ஆராயாமல் குழந்தைகள் வாசித்தால் இவை கதைகள் என்ற வகையில் அவர்களின்

மனதிற்கு மிகவும் நெருக்கமான உணர்வைத் தருவதாக அமையும்.

உதாரணமாக, ‘பூனைகள் ஏன் சமையலறையில் பெண்களின் காலடியில் சுற்றிக்கொண்டு திரிகின்றன’ என்பதற்கான காரணத்தைச் சொல்வதாக அமைந்துள்ள இக்கதையைக் கூறலாம்.

முன்னொரு காலத்தில் வாழ்ந்த பூனையொன்று சிங்கம்தான் உலகத்திலேயே மிகுந்த பலசாலி என்று நினைத்துக்கொண்டிருந்தது. ஒருநாள் அந்த சிங்கத்தை ஒரு யானை கொன்றுவிட்டது. அன்றுமுதல் யானைதான் மிகுந்த பலசாலி என்று நம்பத் தொடங்கியது பூனை. அந்த யானையை ஒருநாள் ஒரு வேட்டைக்காரன் சுட்டுக்கொன்றுவிட்டான். அப்போது யானையை துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற மனிதன்தான் மிகுந்த பலசாலி என்று தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டது. வேட்டைக்காரனின் வீட்டுக்குச் சென்ற பூனை அவனிடமிருந்த துப்பாக்கியை அவனுடைய மனைவி வாங்கிச் செல்வதைப் பார்த்தது. யானையைக் கொன்றவனிடமிருந்து துப்பாக்கியை வாங்கிச் செல்லும் அவனது மனைவியே மிகப் பெரிய பலசாலி என்று நம்பி அந்தப் பெண்ணுடனேயே இருந்துவிடுவது என்று முடிவு செய்து அன்றிலிருந்து அடுப்பங்கரையிலேயே அவளோடு தங்கிவிட்டது.

இவ்விதமாக நம்பிக்கைகள் வாயிலாக அமைந்துள்ள கதைகள் இத்தொகுப்பில் நிறைய இடம் பெற்றுள்ளன. வெவ்வேறான காரணங்களை வெளிப்படுத்தும் வகையில் கீழுள்ள தலைப்பிலான கதைகள் ஒவ்வொன்றும் வித்தியாசமான மன உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. இவற்றை வாசிக்கும் சிறார்களுக்கு கற்பனை ஆற்றலையும் சிந்தனை வளத்தையும் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புகளை உருவாக்கித் தரவல்லன.

‘பருந்துகள் ஏன் கோழிக்குஞ்சுகளைத் தின்கின்றன?‘, ‘நாயும் கோழியும் எவ்வாறு வீட்டு விலங்குகளாயின?‘, ‘பச்சோந்தி ஏன் தலையை ஆட்டிக்கொண்டே இருக்கிறது?‘, ‘முதலை ஏன் கோழிகளைத் தின்பதில்லை?‘, ‘நாய் ஏன் மனிதனின் நண்பனாக இருக்கிறது?‘, ‘மழையும் நெருப்பும் எதிரிகளாக இருப்பது ஏன்?‘, ‘சூரியனும் சந்திரனும் ஏன் வானத்தில் வசிக்கின்றனர்?‘ ஆகிய கதைகள் புதியதான பல சிந்தனைகளை குழந்தைகள் மனதில் உருவாக்கும் விதமானவை.

கதையைப் படித்துவிட்டு இன்னொருவருக்கு சுவாரஸ்யமாகக் கதை சொல்வதற்கான வாய்ப்பான பல கதைகளில் ஒன்றாக ‘உலகின் மிக நீண்ட கதை‘ எனும் கதையைப் பார்க்கலாம்.

உலகின் நீண்ட கதையை யார் சொல்கிறார்களோ அவருக்கு பரிசுப் பொருட்கள் தருவதாக ஒரு நாட்டு அரசன் அறிவிக்கிறான். அரசனிடம் செல்லும் சிறுவனொருவன் தான் உலகின் நீண்ட கதையைச் சொல்வதாகச் சொல்லிவிட்டுத் தொடங்குகிறான்.

ஒரு ஊரில் பெருந்தீனிக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு எவ்வளவு சாப்பிட்டும் பசி அடங்கவேயில்லை. இதனைக் கேள்விப்பட்ட அந்நாட்டின் தலைவன் ‘அவனை என்னிடம் அழைத்து வாருங்கள், அவனுக்கு திருப்தியாக நான் சாப்பாடு போடுகிறேன்‘ என்று சொன்னான். அவனுக்காக பல்லாயிரக்கணக்கான பாத்திரங்களில் இறைச்சி. சூப், பழங்கள் எல்லாவற்றையும் கொண்டு வரச் சொல்லி அந்தப் பெருந்தீனிக்காரனிடம் கொடுத்தான். அவன் சாப்பிடத் தொடங்கினான், சாப்பிட்டான், சாப்பிட்டான் என்று கதையைச் சொன்னான் சிறுவன்.

கதையைக் கேட்ட அரசன் ‘அப்புறம் என்ன நடந்தது‘ என்று கேட்டான்.

‘சற்று பொறுங்கள் மன்னரே, இப்பொழுதுதானே முதல் பானையை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான், இன்னும் பல்லாயிரம் பானைகள் இருக்கின்றனவே‘ என்றான்.

இப்படியாக மன்னர் கேட்கும்போதெல்லாம் அவன் சாப்பிட்டான், சாப்பிட்டான், தண்ணீர் குடித்தான், சாப்பிட்டான் சாப்பிட்டான் என்றே சொல்லிக்கொண்டிருந்தான். அரசனுக்குப் புரிந்துவிட்டது. அவன் சாப்பிட்டு முடியும் வரை கதை முடியாது, எனவே இதுவே உலகின் மிக நீண்ட கதை என்று சொல்லி பரிசுகளை அச்சிறுவனுக்குக் கொடுத்தான் அரசன்.

உலகின் நீண்ட கதையைப் போலவே பொதுவில் எல்லாக் கதைகளுமே முடிவில்லாதவை. ஒரு கதை வேறொரு கதையாக மாறி அந்தக் கதை மறுபடியும் வேறொரு கதையாக மாறி மாறி உலகெங்கும் பயணித்துக்கொண்டே இருக்கின்றன. ஒரு கதை பிறந்த இடத்திலிருந்து பயணப்பட்டு திரும்பவும் புறப்பட்ட இடத்திற்கே வரும்போது முழுமுற்றாக மாறியிருந்தாலும் அப்போதும் அக்கதை இன்னும்பல கதைகளை உருவாக்குகிற இன்னொரு ஆதிக்கதைதான்.

சோவியத் குடியரசு உலக மக்களுக்கு வழங்கிய அருஞ்செல்வங்களில் குறிப்பிடத்தக்கதான புத்தகங்கள் கணக்கிலடங்காதவை. அவற்றின் வடிவமைப்பும் அச்சாக்கமும் அசாத்தியமானவை. இன்றைக்கு சந்தையில் கிடைக்க வாய்ப்பில்லாத அப்படியான ஒரு நூலைத் தேர்வு செய்து கதைகளுக்கேற்ற சித்திரங்களை பொருத்தமாக அங்கங்கே இணைத்து தரமான மொழிபெயர்ப்பில் அனைவரும் வாசிக்கும் வண்ணம் எளிமையான நடையில் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கியிருக்கும் மொழிபெயர்ப்பாளர் எம்.பாண்டியராஜன் மற்றும் நெஸ்லிங் பதிப்பகத்தாரை பாராட்டியே தீரவேண்டும். ●

# அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேசிய கருத்தரங்கம்



அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும் தஞ்சை - அனன்யா பதிப்பகமும் இணைந்து சி.எம். முத்துவின் படைப்புகள் என்னும் தலைப்பிலான தேசியக் கருத்தரங்கம் 14-09-2018 அன்று தமிழியல் துறையில் நடைபெற்றது.

தொடக்கவிழாவில் தமிழியல் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் அரங்க. பாரி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் வே. முருகேசன் அவர்கள் தலைமையுரை வழங்கினார். இந்திய மொழிப்புல முதன்மையர் பேராசிரியர் முனைவர் வி. திருவள்ளுவன் அவர்கள் முன்னிலை உரையாற்றினார். சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் சா. கந்தசாமி அவர்கள் கருத்துரை வழங்கினார். தமிழியல் துறை உதவிப் பேராசிரியரும் கருத்தரங்க ஒருங்கிணைப் பாளருமான முனைவர் சே. கல்பனா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் பேசிய மாண்பமை துணைவேந்தர் அவர்கள் தமிழ்மரபு சார் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், வாழும் எழுத்தாளர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வாழும் காலத்தே வழங்கவேண்டும், அதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செய்து உள்ளது என்று கூறியதுடன் சி.எம். முத்து அவர்களுக்கு படைப்பு சார்ந்த உதவிகள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

எழுத்தாளர் சா. கந்தசாமி அவர்கள் தமிழின் தொன்மை குறித்தும், படைப்புச் சூழலில் சி.எம். முத்து அவர்களின் படைப்புகள் பெறும் இடம் குறித்தும் பேசினார்கள்.

முனைவர் ந. முருகேசபாண்டியன், முனைவர் கி.இரா. சங்கரன், திரு. ஜி. சரவணன், முனைவர் க. அன்பழகன், திரு. குமரவேல், திரு. வியாகுலன், எழுத்தாளர் நா.விச்வநாதன் ஆகியோர் சி.எம்.முத்துவின் படைப்புகள் குறித்து ஆய்வுரை வழங்கினர்.

இக்கருத்தரங்கில் எழுத்தாளர் சி.எம். முத்து அவர்களும் கலந்துகொண்டார். பல்கலைக்கழகம் சார்பில் அவருக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப் பட்டது.




# இஸ்லாம் - ஓர் அறிமுகம்

**மவ்லானா வஹீதுத்தீன் கான்**

**தமிழில் - ச.நிசாமுதீன்**

மவ்லானா வஹீதுத்தீன் கான் ஆங்கிலத்தில் எழுதிய What is Islam என்ற நூலை 'இஸ்லாம் ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற காவல்துறைக் கண்காணிப்பாளரான ச.நிசாமுதீன் மொழிபெயர்த்துள்ளார். சகோதர சமயத்தவர்கள் இஸ்லாமைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டிருந்தாலும் இஸ்லாமியர்களுக்கும் பல புதிய செய்திகளை இந்நூல் வழங்குகிறது.

'அனைத்து ஒளிகளையும் படைத்த இறைவன், தானே அனைத்தையும் விட உயரிய பேரொளியாக இருக்கிறான். அவனே வானங்கள் மற்றும் பூமியின் ஒளியாக இருந்து தன்னை அடையும் அனைவர் மீதும் தனது ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சுகிறான். உண்மையான விவேகங்களின் பெரும் பொக்கிஷம் அவனே. உண்மையான வல்லமைகளின் மிகப் பெரும் களஞ்சியம் அவனே. அவனுடைய வல்லமையால் பலப்படுத்தப்பட்ட அவனுடைய விவேகத்தால் தெளிவுபடுத்தப்பட்ட அவனை அடைந்தவர்களை எந்த வெள்ளத்தாலும் புயலாலும் கொண்டு செல்ல இயலாது. அவனை ஒருமுறை அறிந்தவர்கள் மிக உன்னதமான மனிதர்களாக உயர்வதில் இருந்து மாற இயலாது. இஸ்லாத்தின் இறையைப் பற்றிய இப்புரிதலை முழுமையாக விவரிக்கிறது இந்நூல்.

# இஸ்லாமிய சிந்தனை - சில கட்டுரைகள்

**மவ்லானா வஹீதுத்தீன் கான்**

**தமிழில் - யூசுப் ராஜா**

**விலை ரூ.120/-**

மவ்லானா வஹீதுத்தீன் கான் Islam Rediscovered (Discovering Islam from its original sources) என்ற ஆங்கில நூலின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பே இந்நூல். இஸ்லாத்தை உள்ளது உள்ளபடியே எடுத்துரைப்பதுதான் இந்நூலின் நோக்கம். பிற்காலத் திரிபுகளையோ விளக்கங்களையோ உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் இன்று நடந்து கொள்ளும் முறைகளையோ அடிப்படையாகக் கொள்ளாமல் மூலச் சான்றுகளிலிருந்து இஸ்லாத்தை அறிந்துகொள்வதே சரியான முறையாகும். எனவே, திருக்குர்ஆன் மற்றும் நபிகளின் மொழிப் பதிவுகளின் அடிப்படையில் இஸ்லாத்தை சுருக்கமாகவும் எளிய வகையிலும் இந்நூலில் முன்வைக்கிறது. இஸ்லாத்தைப் புரிந்துகொள்வதற்கும் முழுமையாக அறிந்துகொள் வதற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது இந்நூல்.




இரு நூல்களையும் வெளியிட்டோர் :

**குட்வேர்டு புக்ஸ்**

324, திருவல்லிக்கேணி ஹை ரோடு,

சென்னை 600 005

போன் : 044 4351 4599

# விறுவிறுப்பான விற்பனையில்...

## மார்க்ஸ்-எங்கெல்ஸ்

## தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்

## 20 தொகுதிகள்

பதிப்பாசிரியர்: தமிழ் மார்க்சிய மெய்யியலாளர் **ந. முத்துமோகன்**




**ரா.கிருஷ்ணையா, ஆர்.கே. கண்ணன், எஸ்.வி.ராஜதுரை** முதலான தலைசிறந்த மார்க்சிய அறிஞர்களின் மொழிபெயர்ப்பில்

மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் (12 தொகுதிகள்), அரசியல் பொருளாதார விமர்சனத்துக்குப் பங்களிப்பு, டூரிங்குக்கு மறுப்பு, இயற்கையின் இயக்கவியல் முதலான

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள் ஆகிய அனைத்தையும் காலவரிசைப்படுத்தி

சோவியத் அறிஞர்கள் குழு எழுதிய ஆசான்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சேர்த்து

மொழிபெயர்ப்புகளை மேம்படுத்தி, கலைச்சொற்களைச் செழுமை செய்து வெளியாகியுள்ளது.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.



# சி.எம்.முத்துவும் அவரது எழுத்துகளும்

ஜி. சரவணன்

**'கத சொல்றவுங்களப் பாத்து ஆரும் லேசுல எட போட்ராதீங்க சாமி... அது அப்புடி ஒண்ணும் லேசுபட்ட விசியமுல்ல, அதச் சொல்றதுக்கு ஒரு சுளுவு வேணும். ஒரு நெளுவு வேணும். கல்பனை வேணும். கல்பனைய ஓட்டமா சொல்றதுக்கு தெறமை வேணும். எல்லாத்துக்கும் மேலயா சுத்தஞ் சுயமான மனசு வேணும். எல்லாருகிட்டயும் அது வாய்க்காது. அது ஒரு உன்னதமான கலை.' - சி.எம்.முத்து**

90களில் சுபமங்களா மாதஇதழ் வாசிக்கத் தொடங்கிய காலகட்டத்தில்தான் சி.எம்.முத்துவின் சிறுகதைகள் எனக்கு அறிமுகமாயின. அதன் பின்னரே அவரது 'மாஸ்டர் பீஸ்' என சொல்லப்படும் 'கறிச்சோறு' நாவலை வாசித்தேன். ஒரே சாதிக்குள்ளேயே நிலவும் மேல் கீழ் அடுக்குகளையும் சிடுக்குகளையும் அதன் வன்மத்தையும் கீழ்மைகளையும் உருப்படுத்தியிருந்த அந்நாவலை வாசித்த அதே பிரமிப்பில் பாபநாசத்திலிருந்து சாலியமங்கலம் செல்லும் சாலையிலுள்ள இடையிருப்பு எனும் கிராமத்திலிருந்த அவரைச் சில நண்பர்களோடு சந்திக்கச் சென்றோம்.

எழுத்தாளர் சி.எம்.முத்து என விசாரித்தபோது அந்த ஊரில் யாருக்கும் தெரியவில்லை. போஸ்ட் மாஸ்டர் முத்து என்று சொன்னபிறகு அடையாளம் காட்டினார்கள்.

அவர் வீட்டில் தபாலாபீஸ் என்பதற்கான சுவடுகள் தாறுமாறான அடையாளங்களோடு இருந்தன. சில பிள்ளைகள் அஞ்சலக முத்திரைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தன. சில காகிதங்கள், போஸ்ட் கார்ட், இன்லேண்ட் லட்டர்கள் முறையற்று சிதறிக்கிடந்தன. 'எழுத்தாளனின் வீடு ஒழுங்கற்று இருக்கும்' என்ற ஜெயகாந்தனின் வரிகள் நினைவுக்கு வந்தாலும் எழுத்தாளரின் அலுவலகம்கூட இப்படியா இருக்கும் என்றிருந்தது. அடுத்த அதிர்ச்சி எழுத்தாளர் சி.எம்.முத்துவின் தோற்றம். இந்த மனிதரா கதை எழுதுகிறார், இவரா சி.எம்.முத்து? இவர்தான் எழுதியிருப்பாரா? மேற்சட்டையில்லாத அவரது தோற்றம், அவரது உடலமைப்பு. எழுத்தாளர் என்ற பிம்பங்களைக் கலைத்துப்போட்ட அவரது உடல்மொழி, உபசரனைகள் ஆச்சரியமாக இருந்தது.

ஒன்றிரண்டு படைப்பாக்கத் தொகுதிகள் எழுதி வெளியிட்டவர்களுக்கே மாளாத சலிப்பு மேலோங்கி இலக்கியத் துறவு மேற்கொண்டுவிட்டதாக சிலர் அறிவித்துவிடுகிற இந்நாட்களில் சளைக்காமல் இம்முதிய வயதிலும் அன்றைக்கு எழுதியதைவிட வீரியமாகவும் ஆழமாகவும் எழுதுகிறார். தன்னை யாரும் இலக்கிய பீடமேற்றவில்லை என்றோ, போற்றிப் பாராட்டவில்லை என்றோ, விருதுகள் விழாக்கள் நடத்தவில்லை என்றோ குறைபட்டுப் புலம்பாமல் சலம்பாமல், என்னை எழுதுவது, எனக்குத் தெரிந்ததை எழுதுவது, என் கடமை எழுதுவது என எழுதியபடியே யிருக்கிறார்.

இவரது உலகமே வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதத்திணைதான். இவரது ஒட்டும் உறவும் வாழ்வும் எழுத்தும் எல்லாமே இந்த மருதநிலம்தான். இவரைத் தஞ்சை வட்டார எழுத்தாளர் என்று சுருக்கிச் சொல்வதைவிட மருதநில எழுத்தாளர் என்று மனம் நிரம்ப அழைக்க இடமுண்டு. ஏனெனில் இவரது பெரும்பான்மைப் படைப்புகளில் வயலும் வயல் சார்ந்த உயிரினங்களின் வாழ்வைத் தவிர மற்ற அம்சங்கள் அரிதாகவே தென்படுகின்றன.

இன்றளவும் தஞ்சை எழுத்தாளர்கள் என்று விளிக்கப்படுகிறவர்களின் எழுத்தும் வாழ்வும் வேறு வகைப்பட்டவை. அவ்வெழுத்துகள் ரசிக்கவும் மதிக்கவுமானவை. கொண்டாடப்படவேண்டியவை என்பதெல்லாம் உண்மைதான். நியாயமாக அவர்களை தஞ்சையில் வாழ்ந்த எழுத்தாளர்கள் என்று சொல்வதே சரியானதாக இருக்கும் எனத் தோன்றுகிறது. தஞ்சை வட்டார மக்களை எழுதிய எழுத்தாளர்கள் எனச் சொல்வதற்கு இடமில்லை. ஆகக் கரிசல் எழுத்தாளர் என கி.ரா.வையும், நெய்தல் எழுத்தாளர் என ஜோ டி குருஸையும் விளிப்பதுபோல சி.எம்.முத்துவை மருதம் எழுத்தாளர் என்றே சுட்டலாம், தவறில்லை.

சி.எம்.முத்து தேர்ந்தெடுத்துத் தொகுத்த அவரது 53 சிறுகதைகளின் தொகுப்பு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக விரைவில் வெளிவரவுள்ளது. அத்தொகுப்பில் இடம்பெற்ற கதை வாசிப்பைக் கொண்டே சி.எம்.முத்து சிறுகதைகள் குறித்த எனது பார்வையினை இங்கே பதிவு செய்கிறேன்.

சி.எம்.முத்துவின் கதைகளை சமூக ஆவண எழுத்து என வகைப்படுத்தலாம். அதாவது புதுமைப்பித்தனின் ‘பொன்னகரம்‘, ‘மகாமசானம்‘, சுந்தரராமசாமியின் ‘பிரசாதம்‘ போன்ற கதைகள் எல்லாக் காலத்திலும் பொருத்திப் பார்க்க பொருத்தமானவை. ஆனால் அசோகமித்திரனின் ‘புலிக்கலைஞன்‘, சா.கந்தசாமியின் ‘தக்கையின் மீது நான்கு கண்கள்‘ போன்ற கதைகள் ஆவணக்கதைகளின் வகைமைப்பட்டவை. இக்கதைகள் ஒரு உதாரணத்திற்காகத்தான் குறிப்பிடப்படுகின்றன. நிறைய கதைகளை இப்படியாக வகை பிரிக்கலாம்.

அதாவது இன்றைக்கு நிகழ்த்திப் பார்த்து எழுத வாய்ப்பில்லாத வகையைச் சார்ந்த கதைகள். இன்றைக்கு அக்கதைகளுக்கான களங்களுமில்லை. மனிதர்களும் இல்லை. ஆகவே கிராமங்கள் வேகவேகமாக நகர்மயமாகிவரும் இந்நாளில் காவிரிச் சமவெளிப் பகுதி கிராமங்களின் அசலான வாழ்வை அப்பட்டமாகப் பேசும் இவரது கதைகளை தமிழ்ச் சமூக ஆவணங்கள் என அவதானிப்பது சரி எனத் தோன்றுகிறது.

பள்ளிப்படிப்பு அதிகமில்லாத சி.எம்.முத்துவின் கலை மேதைமையைத் தேர்ந்த ஞானம் சித்திக்கப் பெற்றதொரு கூத்துக்கலைஞனின் அனுபவச் செறிவோடு ஒப்பிடலாம்.

நாடகக்கூத்து தொடர்பான இவரது சிறுகதைகள் மிகமிக முக்கியமானவை, தமிழில் இதுவரை எவராலும் சொல்லப்படாதவை என்பதைவிட இனியும் சொல்லவியலாதவை. மரபான நமது நாட்டார் கூத்து வடிவம் மறைந்தொழிந்துவிட்ட நிலையில் 50 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் கூத்துகள் எப்படி நடந்தன என்பதற்கான அரிதான ஆவணங்களாக ‘நாடகம் பார்த்தவன்‘, ‘நாடக வாத்தியார் தங்கசாமி‘ ஆகிய இவரது கதைகள் அமைந்துள்ளன.

1980ம் வருடம் தீபம் இதழில் வெளிவந்த கதை ‘நாடகம் பார்த்தவன்.‘

‘முட்டம் பெரியசாமின்னா சாதாரண ஆள் இல்லங்கறேன். அவரைத் தட்டிக்கறதுக்கு இந்த ஜில்லாவுல ஆள் கெடையாது. என்னமா பாடுவாருங்கறீங்க, சும்மா வெங்கலம் மாறி கொரல் கிணீர் கிணீர்ங்கும். அரிச்சந்திரா வேசம் கட்டிக்கிட்டு ஆடறுதுக்கு வேற எந்தக் கொம்பனாலயும் முடியாது. ஆளு சும்மா ஆறடி ஒசரமிருப்பாரு. அரிச்சந்திரா வேசத்துக்குன்னே பொறந்த மனுசன் அவர் ஒருத்தர்தான். வாயத் தொறந்தாருன்னா ரேடியோ பொட்டியோ மைக்கோ வாண்டாங்கறன். சும்மா அஞ்சி மயிலு சுத்தளவுக்கு சத்தம் பத்தமா கேக்கும். பொட்டிக்காரன் தாளக்காரனுக்கெல்லாம் சவுரு கயிண்டு போயிரும்.‘

‘சந்திரமதிக்கு காக்காமுளி கோயிந்தசாமின்னு பேருபோன ஒருத்தன் வருவான். அவன் என்னடான்னா அரிதாரத்தைப் பூசி சீலையைக் கட்டிகிட்டு வந்தான்னா அசல் பொம்பளையெல்லாம் மூக்கு மேல வெரலை வச்சிருவாளுக. அம்புட்டு சோராயிருப்பான் காக்காமுளி. குயிலு கணக்காப் பாடி மயிலு கணக்கா ஆடுவான்.‘

இப்படியாக அந்நாட்களில் நாடக உலகில் கோலோச்சிய பிரபலங்களை ஒவ்வொருவராக இக்கதையில் விரிவாக அறிமுகம் செய்கிறார்.

காடுவெட்டி கந்தசாமி - காமிக்கு, திருவாரூ மோகனா - மோகனாங்கி, டோலக்கு பொன்னுசாமி - மத்தளம், தஞ்சாவூர் சுப்பயா தனவேலு - ஜிஞ்சா, மன்னார்குடி பக்கிரிசாமிபுள்ள - மோர்சிங், வடுவூர் ராமையா வாண்டையார் - பின்பாட்டு, நீடாமங்கலம் சிங்காரம் - சீன்படுதா இப்படி ஒவ்வொருவரது பிரஸ்தாபங்களையும் அடுக்கிக்கொண்டே போவதோடு நாடகம் போடுமிடம், மக்கள் பாய் படுக்கையுடன் நாடகம் பார்க்க வருவது, தற்காலிகக் கடைகள் என்று ஒரு நாடகக்கூத்தின் சூழலையும் கண்முன் அரங்கேற்றுகிறார்.

நாடகத்தின் பிலாக்கணங்களைப் பற்றி கேள்விப்பட்ட நாளிலிருந்து பிரமித்து நாடகமே எங்கும் போடுவதில்லையே என விசனப்பட்டு ரொம்ப வருசமாகக் காத்திருந்து ஆசைஆசையாக நாடகம் பார்க்கச் செல்கிறான் கதை நாயகன். நண்பனின் வற்புறுத்தலால் வழியில் சாராயத்தைக் குடித்துவிட்டு போதை தாளாமல் உறங்கிவிட்டு காலையில் சூரியவெளிச்சம் முகத்தில் படும்போது எழுந்து நாடகம் பார்க்கவியலாத வருத்தத்தோடு அவன் வீடு திரும்புவதுதான் கதை. கதைநாயகன்தான் நாடகத்தைக் காண இயலவில்லையே தவிர கதை வாசகனுக்கு முழுமையானதொரு நாடகத்தை நிகழ்த்திக்காட்டுகிறார் சி.எம்.முத்து.

1994ல் சுபமங்களாவில் வெளிவந்த கதை 'நாடக வாத்தியார் தங்கசாமி.' முப்பது வருடங்களாக நாடக உலகில் கோலோச்சியவர் தங்கசாமி என அவரை அறிமுகம் செய்கிறார்.

> 'திண்ணையில குந்தி ஆச தீர பாடிகிட்டிருப்பாரு, பேசிப் பாக்குறதும் உண்டுதான். அவரு பாட்டையும் வசனத்தையும் கேட்டு ஊரு ஜனங்க வேலவெட்டிகளை வுட்டுபுட்டு செத்தநேரம் கேட்டு பாராட்டிப்புட்டு போய்ச் சேருவாங்க. பொண்டாட்டிக்காரி பெரிசா கத்தி நாறடிப்பா. கஞ்சிக்கி கதியத்த நாயிக்கி பாட்டும் கூத்தும்தான் மிச்சம்ன்னு. அத்தோடயா வுடுவா? கூலிக்காரனுக்கு வாக்கப்பட்டு போயிருந்தாக்கா வவுத்துக் கஞ்சிநாச்சும் தட்டுப்படாமக் கெடக்கும். இந்த மனுசனக் கட்டிக்கிட்டு அதுக்கும் வக்கத்துப் போச்சிம்பா.'

> 'கவலப்படாம கெடடி, குச்சிவூட்ட இடிச்சி மச்சிவூடா கட்டத்தான் போறன், சீக்கிரத்துல நீயும் நானும் சேந்தர்னயா கார்ல போற டயத்தப் பாரு அப்டின்னு ஆள அசமடக்கிப்புடுவாரு.'

ஆனால் தமிழ்க் கலைஞர்களுக்கே பாத்தியப்பட்ட தரித்திர நிலையிலிருந்து தங்கசாமியால் மீளமுடிய வில்லை என்பதையும் சி.எம்.முத்து எழுதுகிறார்.

> 'ரேட்டு பேசி அளச்சிகிட்டு போற மக்க மனுச பேசுன ரேட்ட ஒளுங்கா குடுத்து கணக்கு தீத்ததுண்டா? ஐநூறு பேசி அளச்சிகிட்டுப் போனா முந்நூறு குடுக்குறதே பெரிய காரியம்தான். வாக்குல ஒன்னு செய்கையில ஒன்னு. கலைக்கு என்னடா காசு மசுரு அப்டின்னு தங்கசாமிதான் தன்னை சமாதானப் படுத்திக்குவாரு.'

அந்திம காலத்தில் ஒருநாள் தங்கசாமியின் மனைவி நாய்க்கு வைக்கிற மாதிரி அவருக்கு சாப்பாடு வைத்ததால் சாப்பிடப் பிடிக்காமல் உட்கார்ந்திருந்த வருக்கு கலெக்டர் ஆபீசிலிருந்து ஆட்கள் வந்து அவருக்கு அரசு உதவிப்பணம் வரவுள்ளதாகத் தகவல் சொல்கிறார்கள். அப்போது புருசனுக்கு மாசாமாசம் பணம் வரப்போகிற சந்தோசத்தில் மனைவி,

> 'ஏங்க சோத்தத் திங்கலியா ஈ மொச்சிகிட்டு கெடக்கே... கொளம்பு ஊத்தட்டா, ஊருகா வய்க்கட்டுமா?ன்னு பாசமா கேக்குறா'

'எனக்குப் பசிக்கலடி, சோத்த எடுத்துட்டுப் போயிரு'ன்னு சொல்லிட்டு தனக்குப் பிரியமான நாடகப் பாட்டை ராகம் போட்டுப் பாடுகிறார். குரல் உடையாமல் பொங்கிவரும் பாட்டைக் கேட்டு ஊர் சனங்கள் வீடுமுன் கூடுவதாக அந்தக் கதை முடிகிறது.

இக்கதையிலும் அக்காலத்தில் பெயர் பெற்றிருந்த நாடக ஜாம்பவான்களின் ஒரு பெரிய பட்டியல். நாடக நடிகர்கள், இசைக்கலைஞர்கள், பாடகர்களோடு மேக்கப் போடுபவரிலிருந்து படுதா அமைப்பவர் வரை இருபது முப்பது பிரபலமான ஆளுமைசாலிகளை அங்குலம் அங்குலமாக விவரிக்கிறார்.

தமிழ்ச்சமூகத்தில் கூத்துக்கலை அழிந் தொழிந்திருந்தாலும் சி.எம்.முத்து என்ற கலைஞனுக்குள் அக்கலை ஆழமாகக் குடிகொண்டிருப்பதற்கான சாட்சியங்கள் இக்கதைகள். சி.எம்.முத்துவைத் தொடர்ந்து எழுத்தாளர் கண்மணி குணசேகரன் அவ்வப்போது கூத்துக்கலைஞர்களைப் பற்றி எழுதி வருவது சற்றே ஆறுதலான அம்சமாகப்படுகிறது.

1986ம் ஆண்டு தாய் வார இதழில் வெளிவந்த கதை 'அந்திமம்'. தமிழ்ச்சமூகத்தின் ஆகச்சிறந்த ஆவணமாக விரியும் இக்கதையில் வரும் ஊத்தா போட்டு மீன் பிடித்தல் என்பதை குறிப்பிடவேண்டும்.

ஊத்தா என்பது மேற்பக்க வாய் குறுகலாகவும் அடிப்பக்கம் அகலமாகவும் உள்ளவாறு மூங்கில் சிம்புகளால் இடைவெளி இல்லாமல் இணைத்துப் பின்னப்பட்ட கூடை. சிற்றாறுகளில் தண்ணீர் அதிக மில்லாமல் அளவாகச் செல்லும் காலங்களில் கரைப்பகுதியிலிருந்தவாறே சில நிமிடங்களில் தேவையான மீன்களைப் பிடித்துவிடும் எளிய வகையான மீன்பிடி முறை. நாற்பது ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஊத்தா பற்றித் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. தற்காலத்தில் மிகமிக அரிதாகிவிட்ட இம்மீன்பிடிமுறையை அறிந்துகொள்ள சி.எம்.முத்து வின் கதைகளைத் தேடிப் படிப்பதைத் தவிர தமிழ்ச்சமூகத்திற்கு வேறு மார்க்கமில்லை.

ஏழு முனிக்கும் இளைய முனி, காட்டேரி மதவு, பாம்புப்புத்து, ஆயிரங் கண்ணுடையாள் ஆகிய நான்கு கதைகளும் கிராமிய நம்பிக்கைகள், வழிபாடுகள் தொடர்புடையவை. ஆனால் இவற்றில் பேய், பிசாசு, அம்மன் வழிபாடுகளை மாற்றுக்கோணத்தில் அறிவியல் பார்வையோடும் இயல்பான கண்ணோட்டத்தோடும் வித்தியாசமாக அணுகுவதால் இவை தனித்த சிறப்பு பெறுகின்றன.

ஆதிக்க சாதி ஆண்கள் சேரிப்பெண்களை பாலியல் ரீதியாக சுரண்டுவதாலும் ஏமாற்றுவதாலும் அப்பெண்கள் இயலாமையில் வெம்புவதையும் தற்கொலையில் மடிவதையும் சில கதைகளில் காணமுடிகிறது. (ஞாயம் வேண்டும், போராட்டங்கள், மானங்காப்பான் மகன் ஆகிய கதைகள்).

பசியின் தாளமாட்டாத கொடுமையை, பச்சிளங் குழந்தை பாலுக்கழுதுகழுது கதறும் துடிப்பை, கண்கொண்டு காணச் சகிக்கவியலாத வறுமையை, மருத்துவம் செய்ய வழியற்று உயிர்கள் காவு போவதை, வாங்கிய கடனுக்காக அவமானப்பட்டுக் குறுகி நிற்பதை சில கதைகளில் சி.எம்.முத்து காட்சிப் படுத்துகிற இடங்களில் அவ்வரிகளைக் கடப்பதற்கு இறுக்கமான மனம் வேண்டும். (கோடை, இனிக்கும் வாழ்வு, மழை, அம்மன் தேர், மண்டையன், கடைசி பஸ், செம்மறி ஆடே... செய்வது சரியா, குறை, முகவரி இல்லாத முகம் ஆகிய கதைகள்).

சாக்கடைக்கும்பியும் பழங்குப்பையுமாக பலவாறு குமட்டலெடுக்கும் சூழலில் கூடுதலாக மீந்துபோன கட்டக்கால் கறியை உப்புக்கண்டம் போட்டு வைத்திருப்பதால் குடலைப் பிடுங்கும் நாற்றமடிக்கும் வீட்டுச்சூழலோடு தொடங்குகிறது அம்முலு கதை. (தஞ்சை வட்டாரத்தில் மாட்டுக்கறியை பெரியாட்டுக் கறி என்றும் பன்றிக்கறியை கட்டக்கால் என்றும் சொல்லும் பழக்கம் இன்றும் உள்ளது.) இக்கதையில் நகரசுத்தித் தொழிலாளியின் முடைநாற்றமடிக்கும் வீட்டில் கணவன் மனைவி பிள்ளைகள் தூங்கி எழுந்து காலைப்பசிக்கு டீயைக் குடித்துவிட்டு வேலைக்குப் புறப்படுவதில் தொடங்கும் கதை மதிய சாப்பாட்டுக்கு வீட்டுக்குத் திரும்புகையில் உண்ண உணவுக்கு வழியின்றி பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பவும் வெட்டவெயிலில் குப்பை அள்ளும் வேலைக்குத் திரும்பவேண்டிய அவசர அவசியத்தை வாசிக்கிறபோது கண்ணீர் வழிகிறது. காலையிலும் பட்டினி. மதிய நேர வயிற்றுப்பசிக்கு டீத்தண்ணிக்குக் கூட வழியில்லாமல் அல்லாட்டத்தோடு தோட்டிக்குச்சியோடு தெருக்குப்பைகளைச் சுத்தம் செய்யும் அவர்களின் அவல வாழ்வை விலாவாரியாக விவரிக்கும் இக்கதை ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கதைத்தளத்தில் தனக்கான இடத்தை எட்டிவிடுகிறது.

ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பான காவிரி சமவெளிப்பகுதி உடல் உழைப்பாளிகளின் வாழ்வை முழுவதுமாக அறிந்துகொள்ள விரும்புபவர்கள் சி.எம்.முத்துவின் எழுத்துகளை வாசித்தாலே போதும்.

இவருக்கு முந்தைய தலைமுறை எழுத்தாளர்கள் காவிரிக்கரையில் வசித்த மேட்டிமைச் சமூக மக்களின் வாழ்வியலை அம்மண்ணின் தன்மையோடு இணைத்துப் பதிவு செய்துள்ளனர். ஆனால் சி.எம்.முத்து தன்னுடைய சமூகம் சார்ந்த கதைமாந்தர்களை தன்னுடைய கதைகளில் முழுமையாகவும் நேர்மையோடும் உண்மையோடும் பாசாங்குகளும் பாவனைகளும் இல்லாமல் பதிவு செய்துள்ளார்.

அவரது கதைகளில் அவர் தரிசித்த அம்மண்ணையும் மக்களையும் அச்சு அசலாக உலவ விட்டிருக்கிறார். இக்கதைகளின் முக்கியமானதும் நேர்த்தியானதுமான அம்சம் அதன் உண்மைத்தன்மை. இது குறித்து ‘ஒரு செடியில் இரு வேறு மலர்கள்‘ என்ற 1990ம் ஆண்டு வெளிவந்த தமிழ்த்தாய் இலக்கியப் பேரவை ஆண்டு மலரில் வெளியான கதையில் எழுதுகிறார்.

> ‘வெறும் ஜோடிப்பிற்காக எழுத்தை ஆள்வதும் அல்லது எழுத்தினுடைய ரசனைக்காக ஜோடிப்பை வலிந்து உண்டாக்குவதும் அதன் சுய பார்வை யினின்றும் விலகி நசிவிலக்கியங்களைப் படைத்து விடக்கூடும்.’

அதே கதையில் இன்னோரிடத்தில், ‘ரசிப்புக் காகத்தான் எழுத்து உற்பத்தி செய்யப்படுகிறதென்றால் அதைவிட கிச்சுகிச்சு மூட்டுகிற காரியங்களை செய்துகொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது‘ என்று எழுதுகிறார்.

எழுத்தைப் பற்றி தீட்சண்யமும் தெளிவும் வெளிப்படும் சி.எம்.முத்துவின் வரிகள் இலக்கியம் குறித்த அவரது தன்னுணர்வை வெளிப்படுத்துகின்றன. ஜோடிப்பையோ நகாசு வேலைகளையோ ஏற்றுக் கொள்ளாத அவரது கலைமனம் உண்மையின் திசையிலிருந்து உண்மையை மட்டுமே பேசுவதால் அவரது படைப்புகள் உயர்ந்த ஸ்தானத்திற்குத் தன்னை உயர்த்திக்கொள்கின்றன.

சி.எம்.முத்துவின் நாவல்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தமான அவரது எழுத்துகளை நுணுகிப் பார்க்கையில் அடிப்படையில் அவரொரு நாவலாசிரியரே என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. அவரது நாவல்களின் களமும் கட்டமைப்பும் நுட்பமான மொழிநடையும் கூர்மையும் அரிதான தன்மை கொண்டவை. அவரது சிறுகதைகளிலும் அத்தன்மைகளைக் காணமுடிகிறது என்றாலும் நாவல்களைப்போல சுதந்திரமான எழுத்துப் பாங்கிலிருந்து சற்றே விலகி தான் எழுதிச் செல்லும் சிறுகதைக்கு ஒரு முடிபு தந்திடவேண்டும் என்ற யத்தனிப்பின் காரணமாக சில கதைகள் முழுமை யடையாததைப் போன்ற தோற்றம் கொண்டுவிடுவதைக் காணமுடிகிறது. (உதாரணமாக ‘இனிக்கும் வாழ்வு‘ எனும் கதை அதன் வீரியப் போக்கிலேயே எழுதப்பட்டிருந்தால் எம்.வி.வியின் ‘பைத்தியக்காரப் பிள்ளை‘க்கு அணுக்கமான கதையாகப் பேசப் பட்டிருக்கும் சாத்தியம் ஏற்பட்டிருக்கும். விவாதத்துக்குரிய இவ்வம்சத்தை விரிவாகப் பேசவேண்டும்) ஆனால் இதையும் மீறி தமிழின் அரிய

கதைத்தளங்களில் ஆகச்சிறந்த உச்சமான சில கதைகளை சி.எம்.முத்து எழுதியிருக்கிறார். இதுவரைத் தமிழ்ச்சிறுகதை உலகம் கண்டிராத தளங்களையும் மனிதர்களையும் காட்சிகளையும் அவரது கதைகள் அறிமுகம் செய்விக்கின்றன.

எல்லாக் கதைஞர்களும் எழுதுவதுபோல அவரும் அதிகப்படியாக மனிதர்களைத்தான் எழுதியிருக்கிறார். ஆனால் எந்தக் கண்ணாடி அணிந்து பார்த்தாலும் தமிழ் எழுத்துலகம் இதுவரை முன்வைத்திராத மனிதர்கள். தமிழக வேளாண்மை பூமியையும் அம்மனிதர்களின் அகப்புறப் பக்கங்களையும் அப்பட்டமாகக் கண்முன் விரித்துச் செல்கிறார்.

இவ்வாறெல்லாம் சிறப்பித்துப் பேசப்படுகிற அவ்வெழுத்து அவருக்கு எந்தளவுக்குப் பயனுடையதாக, அவரது வாழ்வுக்குத் துணை நிற்பதாக, அவரது குடும்பத்தைக் கரை சேர்ப்பதாக, அவரது எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் அனுசரனையானதாக இருக்கிறது என்பதை நோக்குகிறபோது எங்கள் காவிரிக்கரை எழுத்தாளரான எம்.வி.வெங்கட்ராம் எழுதியது நினைவுக்கு வருகிறது.

நீங்கள் எழுத்துத்துறைக்கு வர நேர்ந்தது என்ற கேள்வி குறித்து எம்.வி.வெங்கட்ராம்,

> 'ஹிந்துவாகிய நான் ஊழை நம்புகிறவன். பல பிறவிகளில் செய்த தீவினைகளின் பயனாகத்தான் நான் தமிழ் எழுத்தாளனாகப் பிறக்க நேர்ந்தது. இலக்கியப் படைப்பாளிகளைத் தமிழகம் எவ்வளவு நேர்த்தியாகப் போற்றுகிறது. பாரதியார் காலணாதாசனாக வாழ்ந்த கதை உலகப் புகழ் பெற்றுவிட்டது. வணங்காமுடியான புதுமைப்பித்தனை மண்ணில் புரட்டி, என்னைக் காப்பாற்றுங்கள் என்று அவரைக் கதற வைத்த பெருமையும் பிச்சமூர்த்தி, கு.ப.ரா. போன்றவர்களை அஞ்சுக்கும் பத்துக்கும் பஞ்சாய்ப் பறக்க வைத்த மகிமையும் இந்த மண்ணுக்கு உண்டு. வளமாகக் கலைஞன் வாழ்ந்தால் அவனுடைய படைப்பாற்றல் வற்றிப்போகும் என்கிற உண்மையைத் தமிழகம் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளது. பொருளாதார அந்தஸ்து வேண்டாம், இலக்கியப் படைப் பாளிக்குச் சமூக அந்தஸ்துகூட இங்கே கிடைக்கவில்லையே...'

என்று நொந்துபோய் எழுதியிருக்கிறார். சற்றொப்ப இந்த வரிகளை எழுத்தாளர் சி.எம்.முத்துவுக்கும் பொருத்திப் பார்க்கலாம். அப்படியான வாழ்வும் இருப்பும்தான் இவருக்கும். எம்.வி.வெங்கட்ராம் போன்ற மாபெரும் கலைமேதையே தன் அந்திமத்தில் இப்படி அரற்ற நேர்ந்தது துரதிர்ஷ்டமானதுதான் என்றாலும் சி.எம்.முத்து எழுத்திலும், நேர்ப்பேச்சிலும், வேறு எந்தவிடத்திலும் இப்படியாக ஆற்றாமையிலும் கழிவிரக்கத்திலும் எதனையும் கூற நேர்ந்ததில்லை என்பதே அவரது இலக்கியப் பிடிமானம். அவர் எழுத்தின்வழி தன்னை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிற இடம் அபாரமானது. அசுரத்தனமானது. பிடிவாதமானது. அதில் லட்சிய வேட்கைகளோ, முனைப்புக்குறிக்கோள்களோ நெம்புகோள்களோ ஏதுமில்லை.

பாபநாசம், திருக்கருக்காவூர், சாலியமங்கலம், தஞ்சாவூர் என மிகச்சிறிய அவரது உலகம் போலவேதான் அவரது ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் மிகமிகச் சிறிய அளவிலானவையாகவே இருக்குமென அனுமானிக்கத் தோன்றுகிறது.

'ஜாதகம்' என்ற கதையில் கும்பகோணத்து ஜனங்களைப் பற்றி ஓரிடத்தில் சி.எம்.முத்து எழுதியிருப்பார்.

> "கடவுள் இவர்கள் முன்னே தோன்றி நீர் ஒரு நிமிஷத்தில் சாகப் போகிறீர், கடைசியாய் உமது ஆசையைச் சொன்னால் நிறைவேற்றி வைப்பேன் என்பதாகச் சொன்னால் 'வேறொன்றும் வேண்டாம் ஸ்வாமி, இதோ எங்கள் முன்னே இருக்கிற வெத்திலைப் பெட்டியும், கும்பகோணம் கொளுந்து வெத்திலையும் ஏஆர்ஆர் ஸ்பெஷல் சீவலும், அதே டிரேட் மார்க் வாசனை சுண்ணாம்பும், மைதீன் புகையிலையும் இன்னபிற லவங்கமும், வாசனைப் பாக்கும் வற்றாது கொடுத்துவிட்டால் போதும் எஜமானே ஐயன்மீரை தெண்டனிட்டு அனந்தகோடி நமஸ்காரம் பண்ணி இந்த நிமிஷமே உயிரை விட்டுவிடுகிறோம். மேல் லோகத்தில் எந்நாளும் போட்டுக்கொள்ள இதுமட்டும் வேண்டுமய்யா. மற்றபடிக்கு ஐயனை அருந்த பானங்களோ அன்ன ஆகாரங்களோ வேறெதுவுமோ கேட்கமாட்டோம் ஸத்தியமாய்' என்றுதான் வேண்டிக்கொள்வார்கள்."

அநேகமாக எழுத்தாளர் சி.எம்.முத்துவின் அதிகபட்ச ஆசையும் எதிர்பார்ப்பும் இதுபோன்ற ஒன்றாகவோ அல்லது இதுவேயாகவோ இருக்குமென நம்புவதற்கு வாய்ப்புகள் நிரம்பவே உண்டு.

இத்தனை காலமாக எவரையும் எதனையும் எதிர்பார்த்துக் காத்திருக்காமல் அங்கீகாரமாவது அந்தஸ்தாவது புகழாவது ஒன்றாவது என்று தன்போக்கில் எழுதிச் சென்றுகொண்டிருக்கும் சி.எம்.முத்து இன்றைய எழுத்தாளுமைகளில் முக்கியமானவராகக் கவனிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

***(14-9-2018** அன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் சி.எம்.முத்துவின் சிறுகதைகள் குறித்து நிகழ்த்திய உரையின் எழுத்து வடிவம்.)*


KAAVYA TAMIL (QUARTERLY) OCTOBER - DECEMBER 2018
Regd No : TN TAM 8012 / 43610
பேரா.சண்முகசுந்தரத்தின்
பசும்பொன் தேவர்
நான்கு நூல்கள்
தேவர் ஜெயந்திக்காக
மொத்த விலை ரூ.1450
சலுகை விலை ரூ.1000
ரூ.400 பெட்டகம்
ரூ.400 களஞ்சியம்
ரூ.350 சரித்திரம்
ரூ.300 கருவூலம்
பசும்பொன் பெட்டகம்
பசும்பொன் களஞ்சியம்
பசும்பொன் சரித்திரம்
பசும்பொன் கருவூலம்
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882, 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com
KAAVYA TAMIL ISSN 2277 - 9221


28
ஐப்பசி
அக்டோபர் - டிசம்பர் 2018
மலர் 7 இதழ் 4
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
பொன்னீலன்
சுப்ரபாரதிமணியன்
பேரா. தே. ஞானசேகரன்
- கட்டுரைகள்
நீலபத்மநாபன்
சென்னிமலை தண்டபாணி
சுந்தரபாண்டியன்
- கவிதைகள்
புதுவை கோபியின் நாடகம்
மற்றும்
20 ஆய்வுக்கட்டுரைகள்
மானமிகு
சுயமரியாதைக்காரர்
கலைஞர்
- இரா. நரேந்திரகுமார்
கலைஞர் தமிழும்
தமிழ் கலைஞரும்
- காவ்யா சண்முகசுந்தரம்




# கொள்ளையர்

கி.இரா. சங்கரன்

**எரிக் ஹாப்ஸ்பாமின் Primitive Rebels எனும் நூல் தமிழில் ரகு அந்தோணி மொழிபெயர்ப்பில் 'கலகக்காரர்கள்' எனும் தலைப்பில் என்.சி.பி.எச் வெளியீடாக விரைவில் வெளிவரவுள்ளது.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**வரலாற்றில் கொள்ளையர் உருவாகும் சமூகச்சூழல்**

அரசு கட்டமைப்பு இல்லாத சமூகங்களில் சமூகச்சட்டங்கள் இரத்தப் போட்டியை உருவாக்குகிறது. அங்குக் கொல்லப்படுபவர் சமூகச் சட்டத்தினை உடைப்பவர். அவர்கள் மக்களின் சட்டப்படி (public law) தண்டிக்கப்படுவர். நாட்டுப் புறங்களில் விவசாயமும், வேளாண்தொழிலும், உலோகத்தொழிலும் நுட்பத்துடன் வளரும்போதும் நகரங்களில் ஆவணப்படுத்துதலின் அடிப்படையில் அலுவலகங்கள் வளரும்போதும் கொள்ளையர்கள் தம்மை தனிக்கூட்டமாகக் கருதுகின்றனர். செல்வந்தர் களிடமிருந்தும், அதிகாரமிக்கவர்களிடமிருந்தும் தம்மைப் பிரித்துப் பார்க்கின்றனர். காரணம், சமூகத்தின்மீதான ஒருவித வெறுப்பு. சமூகவியல் ரீதியாக கொள்ளையர் வரலாறு மூன்று கட்டங்களாக அமைந்துள்ளது. அவர்களின் தோற்றம்; அதற்கு முன்பு உருவான அமைப்பு; வர்க்க சமூகத்திலும், அரச கட்டமைப்பு சமூகத்திலும் உருவானபோது. இதன் உருமாற்றம் தோன்றிய காலத்திலும், வட்டார, உலக அளவிலான மாற்றத்தில் இருந்தும் எழுந்தது. இது அரச கட்டமைப்பிற்கும், சமூகக் கூட்டங்களுக்கும் இடையில் உருவான முரண். அதாவது, நிலைத்த வேளாண்குடிகளுக்கும், அலைகுடிகளான ஆயர் குடிகளுக்கும் இடையிலான முரண். நகர்ப்புறம், ஊர்ப்புறம் இரண்டிற்குமான சமூக வெடிப்பு.

Balkan, Anatolia பகுதிகளில் சமூகக் கொள்ளையருக்கு அலைகுடிகளின் இன உறவுக் கூட்டங்களே ஆதரவாக இருந்தன. 19 ஆம் நூற்றாண்டில் Argentina வில் கால்நடை வளர்க்கும் சமூகம், சமூகக்கொள்ளையர்களுடன் ஊரகத் தலைவர்கள் (Rural Chieftains) துணை நின்று நகரம் சார்ந்த பூர்சுவா சட்டங்களை எதிர்த்தனர். இருபதாம் நூற்றாண்டில் Colombia வில் காப்பித்தோட்டக்காரர்கள் கொள்ளையருக்குப் பாதுகாப்பளித்தனர்.

சமூகக்கொள்ளையர் இயக்கத்தின் இரண்டாம் கட்ட வர்க்கம், சொத்து, அதிகாரம் என்ற பின்னணியில் வேளாண்சமூகத்தில் முகிழ்த்த ஒன்று. கிராம்ஷியின் கூற்றுப்படி அவர் வசித்த தீவில் 20ஆம் நூற்றாண்டில் வர்க்கப்போராட்டம் புதுமாதிரியான போராட்டங்களைக் கொண்டிருந்தது. ஆள்கடத்தல், நாடுகளுக்கு தீவைத்தல், பெண்களைக் கடத்தல், குழந்தைகளைக் கடத்தல், நகராட்சி அலுவல கங்களைத் தாக்குதல், வழி பறிக்கொள்ளை போன்ற கூறுகளைக் கொண்டிருந்தது.

மூன்றாம்கட்ட சமூகக்கொள்ளை, பசியால் எழுந்த ஒன்று. 19-20 ஆம் நூற்றாண்டுகளில் முதலாளித்துவ வேளாண்பொருளியலில் உருவானதே சமூகக் கொள்ளையர் கூட்டம். இது USA, Australia, Argentina போன்ற நாடுகளில் எழுந்தது. சமூகக் கொள்ளைத் தளங்களாக விளங்கிய மத்தியதரைக்கடல் வட்டாரங்கள் இடைக்காலத்திலும் நவீன காலத்திலும் தொடர்ந்து பஞ்சத்தில் உழன்றன. வயிற்றுப்பசியின் உறுமல்களே, வழி பறிக் கொள்ளையின் உறுமலாயின. 1877-78களில் பிரேசிலில் வறட்சியின் காரணத்தால் கொள்ளையர் கூட்டம் உருவாயினர். இவர்கள் 1919 வரை இயங்கினர். இவர்களின் செயலுக்கு ஒரு சீனப்பழமொழி பொருந்தும் : பசியால் சாவதைவிட சட்டத்தினை மீறுவது மேல்.

**கொள்ளையரின் இயல்பு**

மலைப்பகுதிகளில் உள்ள கொள்ளையர்: 1860 களில் இத்தாலியின் தென்பகுதியில் உள்ள கொள்ளைக் கூட்டத்தலைவரில் பலர் கால்நடைகள் மேய்ப்பவர்,

ஆடு மேய்ப்பவர், பசு மேய்ப்பவர், நிலமற்ற கூலிகள், முன்னாள் ராணுவத்தினர் என்று பலரும் இருந்தனர்.

நிலச்சுவான்தார்களும் அவர்களின் அடியாட்களும் தாம் விரும்பியபடி வேளாண்குடி பெண்களிடம் நடந்து கொண்டனர். இச்சூழலில் பழிவாங்கும் கொள்ளையர் உருவாயினர். இப்பழிவாங்கும் கொள்ளையர் சமூகக்கொள்ளையராக மாறமாட்டார். அவர்கள் கிராமத்தின் காவலர்களாக இயங்குவர். நிலப்பிரபுவிற்கு சிப்பாயாக மாறுவர். ஆனால், இவர்களே பிறகு ஆயுதமேந்திய பூர்சுவாவாக மாறுவர். அதாவது, சிசிலியில் உள்ள மாபியா போன்று. சட்டத்தினை மீறும் இவரைப்போன்றவர்கள் பற்றி கதாநாயகர்கள் என்றும், சாதனையாளர்கள் என்றும், பழிதீர்ப்பவர்கள் என்றும் கதைப்பாடல்கள் உண்டு. இவ்வகையில் தனித்த கலகக் காரர்களும் உண்டு. அவர்களை அரசியல்ரீதியாக பொருளியல்ரீதியாக கணிக்க இயலாது. இவை யெல்லாம் ஏழ்மையின் வெளிப்பாடு.

கொள்ளையர் பற்றி வேறுவேறு விளக்கங்களும் உண்டு: கொள்ளையர் என்போர் பணிய மறுப்போர். அதிகாரத்திற்கு அப்பாற்பட்டோர், தீரத்துடன் செயல்படுவோர். ‘Bandito’ என்ற இத்தாலியச் சொல்லிற்கு சட்டத்திற்கு புறம்பாக இயங்குபவர் என்று பொருள் (Man placed outside the law). அதாவது சட்டத்திற்கு கட்டுப்படாதவர் என்று பொருள். எனவே, எளிதில் கொள்ளையராவது ஆச்சரியமன்று. 15 ஆம் நூற்றாண்டிலிருந்தே கொள்ளையர் பற்றிய கணிப்பு இருந்து வந்தது. Bandalora என்ற கொள்ளையரைக் குறிக்கும்சொல் Cataloria என்ற வட்டாரத்தில் உள்ள ஆயுதம் தாங்கிய பிரிவினை வாதிகளைக் குறிக்கும். இந்தப் பண்டலோராக்கள் 15-17 ஆம் நூற்றாண்டுகளில் இயங்கினர். இவர்கள் இயல்பாகவே கொள்ளையராக மாறிக்கொண்டனர். Ottoman பேரரசில் Celalis என்ற பெயரில் அறியப்பட்ட கொள்ளையர்கள் 16-17 ஆம் நூற்றாண்டுகளில் இயங்கினர். இப்பெயரினை அவைதீக இஸ்லாமிய கலகக்காரரைக் குறிக்கும் Seyh-celel என்ற சொல்லில் இருந்து பெற்றனர்.

### இனக்குழு வெடிப்பினால் உருவான கொள்ளையர் கூட்டம்

ஒரு பழங்குடிச்சமூகம் இரத்த உறவினை அடிப்படையாகக் கொண்டு பரிணாம வளர்ச்சி யுறும்போது இதுபோன்று வரலாற்றுப்போக்கு நிகழும். நவீன முதலாளியம் தொழிற்சாலை சமூகமாக மாறும்போதும் நிகழும். இரத்த உறவுச்சமூகம் (kinship society) உடைபட்டு வேளாண்சமூகம் முதலாளிய சமூகமாக மாறும்போதும் நிகழும். இவ்வகைச் சமூகத்தின் உள்கட்டமைப்பு கலகலத்து அமையும் போது கலகக்காரர்கள் கொள்ளையராக மாறுவர்.

### கொள்ளையரும் வர்க்கமும்

வேளாண்குழுக்களில் இருந்து உடைந்து வந்த கொள்ளையர் குழுக்கள் வேட்டைச்சமூகத்தையும், மேய்ச்சல் சமூகத்தையும் திடீர் திடீர் என்று தாக்கினர். இதனால் இவர்களுக்குள் வர்க்கமுறை உருவானது. பொருள் குவியக் குவிய கொள்ளையர் கூட்டங்கள் பல்கிப்பெருகின. இதுபோன்ற கொள்ளையர் கூட்டங்கள் 15-18 ஆம் நூற்றாண்டுகளில் Ottoman பேரரசில் உருவாயின. 19ஆம் நூற்றாண்டில் Sardania, Hungary போன்ற வட்டாரங்களில் இது போன்ற கொள்ளையர் கூட்டங்கள் உருவாயின. வரலாற்றின் மறுமுனையில் முதலாளிய மயமான வேளாண் சமூகத்தில், குறிப்பாக மரபுரீதியான வேளாண் சமூகத்தில் சமூகக்கொள்ளையர்கள் உருவாவது முடிவிற்கு வந்தது. ஆனால், நிலையான முதலாளிய மயமான நாடுகளான USA, Australia, Argentina போன்ற நாடுகளில் இம்மாற்றம் நிகழவில்லை.

### அரசும் கொள்ளையரும்

17 ஆம் நூற்றாண்டில் கொள்ளையர் பற்றிய ஒரு கருத்தாக்கம் உருவானது. அவர்கள், நெடுஞ்சாலைத் திருடர், நெடுஞ்சாலைக்குற்றவாளி என்று அறியப் பட்டனர். 18 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவில் நாடுமுழுக்க கொள்ளைகள் நடந்தன. 1861 இல் பண்ணையடிமைகள் ஒழிக்கப்பட்டவுடன் அரசு தொடர்ந்து பல ஆணைகளை கொள்ளையருக்கு எதிராக வெளியிட்டது. இறுதியாக 1864இல் ஓர் ஆணை வெளியிட்டது. சீனாவின் மேற்கில் ஹெனென் மலைப்பகுதியில் கொள்ளையர் கிராமங்கள் இருந்தன. சீன வரலாற்றில் எப்போதெல்லாம் அரசு வீழ்ந்ததோ அப்போதெல்லாம் கொள்ளையர் எழுந்தனர். 1920 களில் ஜப்பான், சீனா, மஞ்சூரியா போன்ற நாடுகளில் கொள்ளையர்கள் படையில் சேர்க்கப்பட்டனர். அப்போது மஞ்சூரியாவின் மக்கள்தொகையில் 0.5% லிருந்து 0.8% வரை கொள்ளையர் இருந்தனர். சீனம் முழுவதும் கொள்ளையர் கூட்டத்திலிருந்து 1.5% சதம் பேர் போர் வீரர்களாக தெரிவு செய்யப்பட்டனர். உலகம் முழுவதும் வேளாண்சமூகமும், மேய்ச்சல் சமூகமும் ஒருங்கிணைந்து காணப்படும் இடங்களில் சமூகக் கொள்ளையர்கள் இயங்கியுள்ளனர்

### கடவுளும் களவாணியும்

சமூகம்சார் கொள்ளையரை இனம்காண இயலுமா? அவர்கள் அன்றாட மனிதர் உடையில் எளிதில் கண்டுபிடிக்கமுடியாமல் உலவி வருவர். அதிகாரத்தில் இருப்பவ்ருக்கு தட்டுப்படமாட்டார். இத்தாலியின் தெற்கிலுள்ள கொள்ளையர் போப், அரசர் போன்றோரின் ஆசிபெற்றவராவர். அவர்கள் கன்னி மேரியின் பாதுகாப்பில் உள்ளவர் என்று அறியப் பட்டனர். பெரு நாட்டின் கொள்ளையர் Our Lady of Loren என்ற கடவுளுக்குப் பாத்திரமானவர் என்று அறியப்பட்டனர். பிரேசிலின் வடகிழக்குப் பகுதியில் கொள்ளையர் ஒரு சாதுவினால் ஆசீர்வதிக்கப் பட்டிருந்தனர்.

### கொள்ளையரும் தீயசக்தியும்

கொள்ளையர்கள் தீய சக்தியோடு ஒருவித உடன்படிக்கை கொண்டிருந்தனர் என்பது கற்பனைக்கு அப்பாற்பட்டது. 16 ஆம் நூற்றாண்டில் திருடர்கள் தீய

சக்தியோடு உடன்படிக்கைக் கொண்டிருந்தனர் என்று நம்பப்பட்டது. இன்றும்கூட இந்த நம்பிக்கை உண்டு. வேளாண் கொள்ளையர்கள் அவைதீகர்கள் அன்று. அவர்கள் அன்றாடம் வேளாண்மக்களோடு புழங்கினர். அவர்கள் இயல்பான உணர்வுகளுடன் இயங்கினர். ஆனால், மத்திய ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா போன்ற பகுதிகளில் செமிட்டிக் இனத்தினருக்கு எதிராக இயங்கினர்.

### கொள்ளையரும் மந்திரவாதியும்

தெற்காசிய, தென்கிழக்காசிய நாடுகளில் கொள்ளையர்கள் மந்திரச்சொற்கள் அறிந்தவராக அறியப்பட்டனர். ஜாவாவின் Rampok கொள்ளையர்கள் பரம்பரையான மந்திரமும், மாயமும் அறிந்தவராகக் கருதப்பட்டனர். இந்தோனேசியக் கொள்ளையரின் மந்திரத்தன்மைகள் பொதுமைப்படுத்தப்பட்டன. அவர்களின் மந்திரத்தன்மை அவர்களுக்கு ஆன்மவியல் அறிதேற்பினைத் தந்தது. இந்தோனேசியக் கொள்ளையர்கள் மாயவித்தைகளையும் காட்ட வேண்டியிருந்தது.

### காட்டிக்கொடுக்கப்பட்ட கொள்ளையர்

இவர்கள் கதைப்பாடல்களில் காட்டிக் கொடுக்கப் பட்டதாக பல செய்திகள் உள்ளன. இது 20ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. Robert Ford என்பவர் Jesse James என்ற கொள்ளையரைகாட்டிக் கொடுத்தார். Patgarrest என்பவர் Billy the kid என்பவரைக் காட்டிக் கொடுத்தார். Jim Murphy என்பவர் Sam Bass என்பவரைக் காட்டிக்கொடுத்தார். Oleksa Doubus என்ற 18 ஆம் நூற்றாண்டின் Carpathian கொள்ளையர் Stephen Dzvinka என்ற விவசாயினால் காட்டிக் கொடுக்கப் பட்டார்.

### கொள்ளையர் ஏன் நல்லவர் என்று நம்பப் படுகின்றனர்.

Jesse James என்ற கொள்ளையர் ஒருபோதும் விதவைகளை, அநாதைகளை, சமய பிரசங்கிகளை, முன்னாள் குற்றவாளிகளை கொள்ளையடித்ததில்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக இவர் ஒரு தேவாலயத்தில் இசையாசிரியராகப் பணியாற்றினார். ஞானஸ்நானம் செய்விக்கும் பணியினையும் செய்துள்ளார்.

சமூகம்சார் கொள்ளையர்கள் இறப்பிற்குப் பிறகு தெய்வத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான தன்மை யினைப் பெறுவர். அர்ஜெண்டினாவில் கொள்ளையர் தலைவர்களின் கல்லறைகளைச் சுற்றி பல வழிபாட்டுமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவர்கள் பெரும்பாலும் 19 ஆம் நூற்றாண்டின் உள்நாட்டுப்போரில் பங்குபற்றி பின் கொள்ளையராக மாறினர். இவர்களுக்கு பொதுமக்கள் பெரிதும் உதவினர். பெரும்பாலும் இவர்கள் துரோகத்தால் காட்டிக்கொடுக்கப்பட்டனர்.

### கொள்ளையரும் பெண்களும்

கொள்ளையர்கூட்டத்தில் பெண்கள் காதலி என்ற நிலையில்தான் இயங்கினர். சமூகத்தின் anti-social bandits பெண்களைக் கற்பழிக்கப் பயன்படுத்து கின்றனர். ஆனால், Lampiao என்ற கொள்ளையர் கூட்டத்தில் கற்பழிப்பில் ஈடுபடக்கூடாது என்பது சட்டமாக இருந்தது. கொரில்லா கூட்டத்தில் ஒருவர் கற்பழிப்பில் ஈடுபட்டால் தண்டனையுண்டு. காதலிகளின் வீடுகளுக்கு கொள்ளையர்கள் வந்து போவது வழக்கமாயிருந்தது. இப்பழக்கம் தொடர்ந்து கொள்ளையரின் பலதாரமுறைக்கு வழிவிட்டது. பொதுவாகக் கொள்ளைக்கூட்டத்தில் பெண்கள் வெளியாருடன் உறவு கொள்வது வழக்கில் இல்லை. அவர்கள் பொதுவாக துப்பாக்கி ஏந்துவதில்லை. சண்டைகளில் பங்குபெறுவதில்லை.

Bavariaவின் Schattinger எனும் பெண் கொள்ளையர் 200 ஆண்டுகளாகக் குற்றம் செய்யும் குடும்பத்திலிருந்து வந்தவர். அவரின் குடும்பத்தினர், தந்தை, சகோதரி அனைவரும் சிறையிலடைக்கப் பட்டனர், அங்கேயே கொல்லப்பட்டனர். ஆனால், அவர்கள் வேளாண்குடிகளிடமிருந்து கருணை, இரக்கத்தினை எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், நேர்மையான மக்களை கொள்ளையர்கள் எதிரிகள் என்றும் ஒடுக்குவர் என்றும் அதிகாரத்தால் பாதிக்கப்பட்டவர் என்றும் கருதினர்.

Lampiao என்ற கொள்ளையரின் மனைவி Maria Bonita என்பவர் தையல்வேலை, பூவேலை, சமையல், பாட்டு, நடனம் போன்றவற்றில் கவன மாயிருந்தார். Lampiao வின் Lieutenant Corisio என்பவரின் மனைவி தமக்கென ஒரு கொள்ளை குழுவினை வைத்திருந்தார். ஒரு பெண் சிறைபட்டிருந்த தம் கணவனை மீட்பதற்காக கைநிறைய பணம் தரத் தயாராய் இருந்தும் அவளின் கணவனை Lampiao கொன்றார். ஒரு மூதாட்டியை சித்திரவதை செய்தார். தண்டனையாக, சாகும்வரை ஒரு பெண்ணை நிர்வாணமாக நடனமாட வைத்தார். ஆனால், தாம் பெண்களிடம் sexual morality யை பின்பற்றுபவராக இருந்தார். இவருடைய கொள்ளைக் கூட்டத்தில் பெண்பித்தர்கள் (women seducers) ஆண்மை நீக்கம் செய்யப்பட்டனர்; கற்பழிப்பது தடை செய்யப் பட்டிருந்தது. துரோகம் செய்த பெண்களின் தலை மொட்டையடிக்கப்பட்டு நிர்வாணமாக இழுத்து வரப்படுவது பொதுமக்களால் கண்டிக்கப்பட்டது. பல்கேரியாவின் ஒரு கதைப்பாடல்படி Stoian என்ற கொள்ளையர் ஒரு கிராமத்தினை கொள்ளையிட்டார். அப்போது ஒரு மூதாட்டி அவரை அவமதித்தார். எனவே, இப்பெண் கடத்தப்பட்டார். வேலைக் காரியாக்கப்பட்டார். அவர் தலை துண்டிக்கப்பட்டது.

பொதுவாக, பெண்களை வைத்துக்கொண்டு கொள்ளையர் கூட்டம் ஒழுக்கமாக இயங்காது என்பதால் கொள்ளைக் கூட்டத்தில் பெண்கள் பங்குபெறுவது தடைசெய்யப்பட்டது.

### கொள்ளையரும் புரட்சியும்

ஒரு லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதியில் இயங்கிய ஆயுதம் தாங்கிய குழுவினரின் இயக்கத்தால் பிரேசில் இடர்பாடின்றி

காலனிய நுகத்தடியிலிருந்து விடுதலை பெற்றது. ஆயுதம் ஏந்திய அந்தக் குழுவே அங்கு அரசமைத்தது. இது 1960-1970களில் A national symbol of resistance and even revolution என்று வருணிக்கப்பட்டது. ஜாவாவில் இயங்கிய KenAngrok என்ற கொள்ளையர் Modjopair என்ற அரசகுடும்பத்திற்கு அடித்தளம் இட்டார்.

### கொள்ளையரும் அரசும்

அரசியல் ரீதியாக சமூகக்கொள்ளையர் பற்றிய வரலாறு ஒரு நாடகத் தன்மை வாய்ந்தது. அரசர்கள், பேரரசர்கள்கூட கொள்ளையராகத்தான் வாழ்க்கையினைத் தொடங்கினர். எத்தியோப்பியாவின் பேரரசன் (Tewodros) Theodre II (1855-1858) மஞ்சூரியாவின் Chang-T-Solin (Zhang-Zuolin) போன்றோர் இதற்கு காட்டாகும். உருகுவே என்ற சுதந்திர நாட்டினை உருவாக்கிய Jos-Antonio Artigas என்பவர் ஒரு கொள்ளையராகவே தம் வாழ்க்கையினைத் தொடங்கினார்.

### கொள்ளையரும் கூலிகளும்

1863 Italy இல் Calabria வில் நடந்த நீதிமன்றத்து வழக்கில் கொள்ளையர் என்ற பெயரில் விசாரிக்கப்பட்டவர்களில் பலர் கூலிகள், விவசாயிகள், வேளாண் குடிகள், கைவினைஞர்கள். இச்சூழலில் இவர்கள் இன்னொரு வகையில் பணம் திரட்டநினைப்பது இயல்பு. இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக கொள்ளையராவதில்லை. குமரப்பருவத்தினைத் தாண்டி திருமணவயதினை எட்டும் நிலையில் உள்ளவர்களே குழுவாக இணைந்து இயங்குவர். குடும்பப் பிரச்சினையினை தாங்கும் முன் இதுபோல் நிகழும். வேளாண்சமூகத்தின் இளைஞர்கள் சுதந்திரமாகவும், ஊக்கமான கலகக்காரர்களாகவும் இயங்குவர். ஒத்த வயதுடைய இவர்கள் குழுவாக, தெரிந்தும் தெரியாமலும், முறையாகவும் முறையற்றும் ஒரு வேலையினை விட்டு மறுவேலைக்குச் செல்வதும் சண்டைபோடுவதும் என இயங்குவர். ஹங்கேரியின் சமவெளியில் உள்ள ஏழைப் பையன்கள் (poor lads) தனித்திருக்கும்போது பிரச்சினையற்று இருப்பர்; இருபது, முப்பது பேராக இணையும்போது கொள்ளையராவர்.

### கொள்ளையரின் வயது

சீனத்தில், திருமணத்திற்கு முன்னதாகவே, இளம்பிராயத்தினரை கொள்ளைக்கூட்டத்திற்கு என்று ஆள் எடுப்பர். எனவே, கொள்ளையருக்கு முப்பது வயது என்பது முக்கியமான காலகட்டம். அவ்வயதில் கொள்ளை வாழ்வினை விடுத்து திருமண வாழ்வினைத் தொடருவர். கொள்ளையர் கூட்டத்தில் சேராமலும், திருமணமாகாமலும் இருக்கும் இளைஞர், அக்கூட்டத்தில் இருந்து விளிம்புநிலைக்கு தள்ளப்பட வேண்டியிருக்கும். பெண்குழந்தைகள் கொல்லப் படுவதால் கொள்ளையரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இதனால், சீனாவில் பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கை 20% அதிகரித்தது. பிரேசிலின் வடகிழக்குப்பகுதியில் புகழ்பெற்றிருந்த Lampiao என்ற கொள்ளையர் தம் தொழிலை 18 வயதில் தொடங்கினார். மஞ்சூரியாவில் கொள்ளையர்கள் தம் தொழிலை 1920களில் தம் 25-26 வயதுகளில் தொடங்கினார்.

### விளிம்புநிலையும் கொள்ளையரும்

சமூகத்தில் தனித்துவிடப்பட்ட நபர்கள், விளிம்பு நிலைக் கூட்டத்தினருடன் சேரும்நிலை உருவானது. பழைய ரஷ்யாவில் மக்கள் எளிதில் கடக்க இயலாத, குறைவான மக்கள்தொகை கொண்ட விளிம்பு நிலப்பிரதேசத்தில் Rasbioniki என்ற கொள்ளைக்கூட்டம் உருவானது. இவர்கள், பெரும்பாலும் தனித்து விடப்பட்ட விளிம்புநிலை மனிதர்கள், புலம் பெயர்ந்தவர்கள். ரஷ்யாவின் தெற்கு மற்றும் கிழக்குப்பகுதிகளில் இவர்கள் இயங்கினர். அங்கு நிலப்பிரபுக்களோ, அடிமைமுறை அரசோ நுழையமுடியவில்லை. இவர்களே, பிறகு புரட்சியினை உருவாக்கினர். Land of freedom என்ற அமைப்பினை உருவாக்கினர். (அவர்கள் அலைகுடிகளாகவும் வாழவேண்டியிருந்தது). இந்த அமைப்பில் தப்பிவந்த அடிமைகள், வாழ்ந்து கெட்ட தனிமனிதர்கள், செல்வந்தரின் பிடியினின்றும் ஓடிவந்தவர்கள், சிறையினின்றும் தப்பியோர், கோயில் மடங்களில், படையில், கப்பற்படையில் இருந்து தப்பியோர் இருந்தனர். இவர்களுடன் குருமார்களின் வாரிசுகள் ஒன்றிணைந்து இக்கொள்ளையர் கூட்டத்தினை உருவாக்கினர். இவர்கள் எல்லைப்புறங்களில் இயங்கிவந்த கூட்டத்தோடு கலந்தனர். இதுபோன்ற விளிம்புநிலைக் கூட்டத்தில் ராணுவவீரர், முன்னாள் படை வீரர், படையினின்றும் ஓடிவந்தோர் முக்கியமாக பங்காற்றினர். இவர்கள் எளிதில் கொள்ளையராயினர்.

1860 களில் இத்தாலியின் தென்பகுதியில் அவ்வப்போது எழுந்த கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் Bourborn Army யில் பணியாற்றிய முன்னாள் ராணுவத்தினர் என்றும், நிலமற்ற கூலித்தொழிலாளிகள் என்றும் அறியப்பட்டனர். இக்கொள்ளையர் கூட்டத்தின் முன்னாள் ராணுவத்தினர் கிராமத்து இளைஞர்களுக்கு கல்வி போதிப்பவராக இருந்தனர். புரட்சிப்படையின் பள்ளிகள் இவர்களைப் பயன்படுத்தின. ஓடிவந்த முன்னாள் ராணுவத்தினர் வேளாண்சமூகத்துடனும் இருந்தனர். ஓய்வான நேரங்களில் பிற வேலைகளைச் செய்தனர். சிலவேலைகளுக்கு ரகசியக் குழுக்கள் அமர்த்தப்பட்டன. இவர்கள் ஆயுதம் தாங்கிய மனிதராகவும், தோட்டக் காவலராகவும், வண்டி யோட்டிகளாகவும், பாணர்களாகவும் பணியாற்றி யுள்ளனர். பொதுமக்கள் புழங்கமுடியாத மணற் பகுதிகளில் சுற்றித்திரிந்தனர். அங்கு, கொள்ளையர்கள் கால்நடை மேய்ப்பவருடன் கலந்து திரிந்தனர்.

### குடியானவரும் கொள்ளையரும்

அரசியலில் கொள்ளையர் நுழைவது மரபுவாதிகள் புரட்சியாளர் ஆவதுபோலாகும். கொள்ளையர்கள் புரட்சியாளராக மாறுவது வேளாண்சமூகத்தின் உள்ளீடாகும். கொள்ளைத்தொழில் ஒருவகையான சுதந்திரம். ஆனால், வேளாண்குடியில் ஒருசிலர்

மட்டுமே சுதந்திரமாக இருக்கலாம். அவர்கள் பெரும்பாலும் ஒருவகையில் நிலப்பிரபுக்களாகவும் இன்னொருவகையில் கூலித்தொழிலாளிகளாகவும் பிணைக்கப் பட்டுள்ளனர். வேளாண்குடிகள் அதிகாரத்தின்பிடியில் பலியாகின்றனர். அவர்கள் தன்னிறைவு பெறவும் இல்லை. புலம் பெயரவும் இயலவில்லை.

குடியானவர் திருமணமானவுடன் மனைவி மக்களுடன் கட்டுண்டு பணிபுரியும் இடத்தினைவிட்டு நகரமுடியாமல் இருக்கிறார். வளர்ந்த குடியானவன் கொள்ளையனாக மாறுவதற்கு வாயுப்பு உண்டு. இது ஓர் ஆண்டுச்சுழற்சி. கோடைகாலம், வசந்தகாலம், பனிபொழியும் காலம் என்று மாறி மாறி கொள்ளை நடக்கும்.

### வேளாண்சமூகத்தினின்றும் கொள்ளையர் உருவாகும் சூழல்

வளமற்ற நிலப்பகுதியிலும் மேய்ச்சல் நிலப்பகுதியிலும் உள்ள வேளாண்குடிகள் உபரி உழைப்பாளர்கள் வேலையின்றி இருப்பதால் அவர்கள் கொள்ளையராக மாறும் சூழல் உருவாகும். இதுபோன்று ஆல்ப்ஸ் மலைகள், அல்ஜீரியாவின் Kabyk மலைகள், Albania, Switzerland, Corsica, Naples போன்ற பகுதிகளில் இவ்வாறு கொள்ளை நடந்தது. இதனால், சிக்கனமாக குடும்பத்தினை நடத்த வேண்டியிருந்தது. அது mini-feudalism என்ற சொல்லால் அழைக்கப்பட்டது. இதனால், நிலமற்ற நிலை விரும்பப்பட்டது. வேலையில்லாதவர் வாழ்க்கையைத்தேடி ஓடிக் கொண்டிருந்தனர். வேளாண்குடிகள் அப்படியில்லை. மலைகளும், மேய்ச்சல்வட்டாரங்களும் கொள்ளையரின் களங்களாயின.

### கொள்ளையின் விளைவு

கொள்ளையர்கள் ஆட்சியரின் தவறுகளைத் திருத்தினர். அநீதியினை சரி செய்தனர். எளிய மனிதனுக்கும், தனிமனிதனுக்கும் இடையிலான உறவினையும் சரிசெய்தனர். இது, நல்ல நோக்கமாக இருந்தது. செல்வந்தன் ஏழையை சுரண்டுவது நின்றது. கொள்ளைச்சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழக்கூடிய வேளாண்குடிகளின் புரட்சிக்கு அடித்தளமாக அமையும். கடந்த இரு நூற்றாண்டுகளில் முதலாளிய பொருளியல் சமூகத்தில் பெரும் மாற்றத்தினை உருவாக்கியது. இது, முற்றாக வேளாண்சமூகத்தினை அழித்து கொள்ளையர் உருவாக வழிவிட்டது. 19-20 ஆம் நூற்றாண்டுகளில் உலகம் முழுவதும் பரவலாக சமூகக்கொள்ளைகள் நிகழ்ந்தன. இன்றைக்கு முற்றிலும் ஒழிந்தன என்றாலும் சில இடங்களில் நிகழ்கின்றன. இன்னும் ஐரோப்பாவில் ஸ்காண்டினேவியன் மேட்டு நிலப்பகுதிகளில் கொள்ளை யர்கள் இயங்குகின்றனர்.

### Haiduks (ஹய்துக்கள்)

Haiduks என்பது ஒரு சகோதரத்துவ அமைப்பு. அதாவது Male brotherhood. இதற்கு நல்ல உதாரணங்கள் உண்டு. இவர்கள் இயல்பாகவே ஊக்க மானவர்கள். நோக்கமும், ஆக்கமும் கொண்டவர்கள். அவர்கள் எப்போதும் நிறுவப்பட்ட அலுவலர்களைத் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். இவர்கள் robin hoodலிருந்து வேறுபட்டவர்கள்; அகப்பட்டவர்களை பலிபோடுவர். Haiduks என்ற சொல்லிற்கு கால்நடை திருடுபவர் என்று பொருள். இவர்கள் தானாக உருவாகவில்லை. Hungaryயின் சிலபகுதிகளில் பிரபுக்களுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர். இவர்கள் free-robber liberation எனப்பட்டனர். இவர்கள் பிரபுக்களுக்கு இலவசமாக சண்டைக்காரர்களை உருவாக்கித் தந்தனர். இவர்கள் ரஷ்யாவிலும், ஹங்கேரியிலும் அரசு மற்றும் இளவரசர்களிடமிருந்து நிலம் பெற்றனர். பதிலுக்கு, ஆட்சியாளர்களுக்கு ஆயுதங்களையும், குதிரைகளையும் அனுப்பி பாதுகாப்புப் பணிகளைச் செய்தனர். ரஷ்யாவிலும் ஹங்கேரியிலும் துருக்கியரை விரட்டியடிக்கவே இவ்வேற்பாட்டினைச் செய்தனர். இவ்விரு நாடுகளின் எல்லைப்பகுதிகளில் வீரர்களுடன் பணியாற்றினர். இவர்கள்பற்றி பலகதைப்பாடல்கள் இருந்தாலும் அவர்களின் அடிப்படை நோக்கம் பொருளாதாரம் பற்றியது. இவர்களின் பாடல் ஒன்று:

> மாரிக்காலம் மோசமானது;
> கோடைக்காலம் வறண்டது;
> செம்மறியாடுகள் மரிக்கின்றன.

எனவே Stoian, Haiduk என்று மாறுகிறான்.

இன்னொருவகை ஹய்துக்கள் உண்டு. அவர்கள் கிறித்தவ ஆட்சியோடு சேர்வதில்லை. இவர்கள் அரசகுலத்தினரும் அன்று; போர்க்குலத்தவரும் அன்று; துருக்கிக்கு எதிரான கொள்ளையர்கள். பழிவாங்கும் கொள்ளையர்.

இவர்கள் விடுதலை விரும்பிகள். தொடக்கத்தில் கொரில்லாமுறை போராளிகளாக இருந்தனர். இவர்கள் முதலில் 15 ஆம் நூற்றாண்டில் Bosnia, Herzegovina போன்ற இடங்களில் உருவாயினர். அடுத்து Balkan, Bulgaria போன்ற இடங்களில் உருவாயினர்.

முதல் 'Haidot' தலைவர் 1454 இல் Bulgaria ஆவணங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளார். தொடக் கத்தில் இவர்கள் கொள்ளையர். இதுபோன்ற கொள்ளையர் தென்கிழக்கு ஐரோப்பாவில் மட்டுமல்ல உலகம் முழுவதும் பல்வேறு பெயர்களில் இயங்கினர். இந்தோநேசியா, இம்பீரியல்-சீனா போன்ற நாடுகளில் இயங்கினர். இவர்கள் பொதுமக்களின் ஆதரவினைப் பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை. அவர்கள் பேசும்மொழி, பின்பற்றும் சமயம் போன்றவை மட்டும், கருத்தியலும் வர்க்க உணர்வுகள் மட்டும் அவர்களைக் கொள்ளை யராகவில்லை. பல்கேரியாவில் ஒரு ஹைது தலைவர் தன் வரலாறு எழுதினார். 1850களில் அவர்தம் 25வது வயதில் ஒரு துருக்கிய அலுவலருடன் சண்டையிட்டார். பிறகு, ஒரு மணற் பிரதேசத்திற்குச் சென்று ஒளிந்துகொண்டார்.

ஹய்துக்கள் : கதைஒன்று

Tatuncho என்ற Haidu கொள்ளைத் தொழிலை விட்டு தம் தாய் வேண்டிக்கொண்டதற்கு இணங்க குடும்பவாழ்க்கைக்குத் திரும்பினார். அத்தாய் அவரிடம் சொன்னார்: கொள்ளையன் குடும்பத்தினைக் கவனிக்க மாட்டான். ஆனால், நடந்தது வேறு. அவனைக் கொல்வதற்கு சுல்த்தான்கள் அனுப்பிவைத்த ஆட்களைக் கொன்றான். அவர்கள் பெல்ட்டில் வைத்திருந்த பணத்துடன் வீடு திரும்பினான். இது தாயின் கூற்றுக்கு மாறாக உள்ளது. ஒரு விவசாயியின் வாழ்க்கையைவிட ஒரு கொள்ளையரின் வாழ்க்கை பொருளாதாரரீதியில் வளமானது. இச்சூழலில் நேர்மையான ஒரு சமூகம்சார் கொள்ளையரை எதிர்பார்ப்பது அரிது.

ஹைதுக்களின் கொடூரத்தன்மை யாவரும் அறிந்தது. இவர்கள் வேளாண்குடிமக்களிடமிருந்து நிரந்தரமாக அந்நியப்பட்டவர். இங்கும் அங்குமாக ஓடித்திரிபவர். அலைகுடிகளைப்போல் இருந்தனர். இவர்களுக்கு தனித்த ஒரு தலைவர் இல்லை. இவர்கள் Voivode Ordukes என்ற தலைவர்களால் வழிநடத்தப்படுகின்றனர். இத்தலைவர்களே ஹைதுக்களுக்கு ஆயுதங்கள் வழங்குகின்றனர். ரஷ்யாவில் இதுபோன்ற கொள்ளையரை Jamadars என்ற குழுவினர் வழிநடத்தினர். பதிலுக்கு கொள்ளையில் ஒருபங்கு வசூலித்தனர். 10% தீவர்த்திகளுக்கும், ஆயுதங்களுக்கும் இன்னும் பல பொருள்களுக்கும் கொடுக்க வேண்டியிருந்தது. ஹைதுக்கள் பால்கன் பகுதிகளில் தேசிய கொள்ளையர் (National bandits) என்று அறியப்பட்டனர். சில மரபு சட்டங்களின்படி இவர்கள் கிறித்தவர்கள் சார்பாக நின்று துருக்கியரை பழிவாங்கினர். ஒடுக்கப்பட்டவர்களுக்கு சார்பாக சண்டையிட்டனர்.

Robin hood

Robin hood என்ற கதாபாத்திரம் வேளாண்குடிகளின் கதாநாயகன் என்று அறியப்பட்டாலும் சில நேரங்களில் அவன் தெய்வாம்சம் பொருந்தியவன் என்றும் அறியப்பட்டான். எங்கெல்லாம் அரசாங்கத்திற்கும், பிரபுக்களுக்கும் இடையிலான உறவு தெளிவில்லாமல் உள்ளதோ அங்கு இவர் ஒரு சமூகத்தலைவராக எழுவார். ராபின்ஹூட் பற்றிய கதைப்பாடல்கள் 14 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கிறது. ஆனால், 16 ஆம் நூற்றாண்டுவரை இவர் ஒரு கதாநாயகனாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இங்கிலாந்தின் தொடக்ககாலத்திய வரலாற்றில் இதுபோல் ஒருவர் வாழ்ந்தாரா? என்பதனை இங்கிலாந்தின் இடைக்காலத்தினை ஆராயும் ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இக்கதாபாத்திரம் உலகம் முழுக்க புகழ்பெற்றது. இதற்கு பல கதைப்பாடல்கள் உண்டு. இருந்தாலும் இப்பாத்திரம் நடைமுறையில் அரிது. உண்மைக்கும், புனைவிற்கும் இடையிலான இடைவெளி அதிகமன்று. இதனை இப்படிப் புரிந்துகொள்ளலாம். குதிரை வீரனுக்கும் படைத்தளபதிக்கும் இடையிலான இடைவெளி அதிகமன்று.

**ராபின்ஹூட்டின் வரையறுக்கப்பட்ட இயல்புகள்**

1. ஒரு சாதாரண ராபின்ஹூட் தம்முடன் 6முதல் 20 வரையிலான ஆட்களை வைத்திருப்பார். இது நிரந்தரமான நிறுவனம்போல் இயங்கும்.

2. இவர் மரபுவழிப்பட்ட சமூகக்கொள்ளையர் (Traditional noble robber) என்று அறியப்படுகிறவர். இவர் ஆதிகாலத்திய முறையிலான சமூக எதிப்பினையே வெளிப்படுத்தினார்.

3. இவரை ஒரு தனிப்பட்ட வணங்காமுடி எனலாம்.

4. தம் கிராமத்தில் உள்ளவர் தவிர, பிற இடங்களில் உள்ள ஏழைகளையும், செல்வந்தர்களையும் கொள்ளையிடுவர்.

5. இவரால் ஒடுக்குமுறையினை அழிக்க முடியவில்லை. ஆனால், ஏழைநாடுகளுக்கு நீதியினைப் பெற்றுத்தரமுடியும் என்று நம்பினர்.

ராபின்ஹூட் கதாபாத்திரம் தொடர்ந்து உருவாக்கப்படும். அவர், ஏழைகளுக்குத் தேவை. அவர் நீதியின் அடையாளம். இங்கு Saint Augustine கருத்தினை மனம்கொள்ள வேண்டும். 'அரசுகள் பெரிய அளவிலான கொள்ளைக்கூட்டங்கள்'. ஆனால், ராபின்ஹூட்களால் ஒடுக்குமுறையினை அழிக்க முடியவில்லை என்றாலும் அவற்றினை குறைக்க முயன்றனர்.

Diego Carrienses என்ற (1757-81) noble robber, Andulasia நிலப்பிரதேசத்தில் இயேசு கிறிஸ்தோடு ஒப்பிடப்பட்டார். ஆனால், காட்டிக்கொடுக்கப்பட்டார். உண்மையில், பல Robin hoods, Noble robbers இல்லை. Noble robbers என்ற image உருவாக்கம் சமூக உறவுகளாலும், வேளாணுறவுகளாலும் உருவானது. இவர் ஒரு சாதனையாளராக, தவறுகளை சரிசெய்பவராக நீதியைக்கொண்டுவருபவராக சமூகத்தில் சமநிலையினை உருவாக்குபவராக அறியப்படுகிறார். வன்முறையின் நீக்கு-போக்கு பொறுத்து அவற்றினை அளவிடுதல் பொறுத்து ராபின்ஹூட்டின் புகழ் நிர்ணயமாகும். இவர், செல்வந்தரை கொள்ளையிடுவார், ஏழைகளுக்கு உதவுவார்; யாரையும் கொல்லமாட்டார். Billy the Kid என்ற தென் அமெரிக்காவின் ரபின்ஹூட் வெள்ளையரிடம் கொள்ளையடித்து தம் மக்களிடம் கொடுத்ததால் அவர் நல்லவராகப் பார்க்கப்பட்டார். 18 ஆம் நூற்றாண்டில் France, England, Germany நாடுகளில் முறையே Dick Tuprin, Cartouche, Schnder hanns போன்றோர் ராபின்ஹூட்களுக்கு இணையாகப் பார்க்கப்பட்டனர் / போற்றப்பட்டனர். ஆனால், அப்போது robin hood seasons முடிந்திருந்தது. Robin hood என்று ஒருவர் இருந்திருப்பாரேயானால் அவர் 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருப்பார். ஆனால், 16-17 ஆம் நூற்றாண்டுகளில் அச்சு நூல்கள் வந்த

பின்னரே இவர் பற்றிய கதைகள் புகழ்பெற்றன. Robin hoods எழுத்து ஆவணங்களை விட்டுச் செல்லவில்லை. 19ஆம் நூற்றாண்டின் கொள்ளையர்களால் பிடிக்கப்பட்ட பயணிகள் குறிப்புகள் வழியேதான் அவர்களைப்பற்றி அறிய இயலும். 20 ஆம் நூறாண்டில்தான் Bandoleer கொள்ளையர் பற்றிஒரு பத்திரிகையாளர் செய்தி தருகிறார். 19 ஆம் நூற்றாண்டின் தென்கிழக்கு ஐரோப்பா பகுதியில் பயணிகள் கொள்ளையரால் பிடித்துவைக்கப்பட்டனர்.

### கொள்ளையர் : மதிப்பீடு

கொள்ளையர் பொதுவாக உள்ளூர்க்காரர்களே. ஒரு வட்டாரத்தில் நிகழும் கொள்ளை இன்னொரு வட்டாரத்தில் இருப்பவர் அறிவதற்கு வாய்ப்பு இல்லை. ஒரு கூட்டத்தினைச் சார்ந்த ஒருவன் கொள்ளையடித்தால் சட்டத்திற்குமுன் அவன் கொள்ளையன். ஒரு நகரின் மூலைமுடுக்கில் ஒருவன் சம்பளப்பையினை பறித்துக்கொண்டு ஓடினால் இன்றைக்கு அவன் தீவிரவாதி என்று கொள்ளையனை மதிப்பிடுவர்.

சிலர் மானமிகு கொள்ளையர் (Gentleman robbers) எனப்பட்டனர். வேளாண் சமூகத்திலிருந்து தோன்றிய கொள்ளையர் நாகரிகமாதலை வெறுப்பர். இடைக்காலத்தில் ஜெர்மனியில் தோன்றிய வீரக் கொள்ளையர்கள் அல்லது கொள்ளைவீரர்கள் (Robber Knights) வேளாண் குடிகளோடு கலப்புற்று இருந்தனர். அவர்களை, அரசும் நிலவுடைமையாளர்களும் குற்ற வாளிகள் என்றனர். மக்கள் அவர்களை கதாநாயகள் என்றும், சாதனையாளர்கள் என்றும், பழிதீர்ப்போர் என்றும், நீதிக்காகப் போராடுவோர் என்றும், விடுதலைத் தலைவர்கள் என்றும் போற்றினர்.

ஒருவர் தம் சொந்தமண்ணில் சமூகக் கொள்ளை யராகவும், மலைப்பகுதிகளில் சமவெளிகளில் திருடனாகவும் இயங்குவர்.

என்னதான் கூட்டாகக் கொள்ளையடித்தாலும் கொள்ளையடித்தவற்றை தம் சகபாடிகளுக்கு அவற்றைத் தக்கவைத்துக் கொள்ளும் உரிமையினை தலைவர்கள் வழங்குவது இல்லை. சமூகக் கொள்ளையர்கள் சீர்திருத்தவாதிகள் புரட்சியாளர்கள் அன்று. இருந்தும் இவர்களால் ஓர் இயக்கத்தினை இயக்கமுடியவில்லை. நேபிள்ஸ் நகரில் தோன்றிய கொள்ளையர் அயல் நாட்டவருக்கும் Jacobinsக்கும் எதிராக எழுந்தனர். அவர்கள் போப்பின் பெயரால் புனித நம்பிக்கையின் பெயரால் புரட்சியாளர்களாயினர்.

சமூகக்கொள்ளை என்பது சில சந்தர்ப்பங்களில் சரியாகவும் சில சந்தர்ப்பங்களில் தவறாகவும் புரிந்து கொள்ளப்படுகிறது. கொள்ளையர்கள் குற்றவாளி களாகவும் பார்க்கப்படுகின்றனர்; கொள்ளையர் தலைவராகவும் கருதப்படுகின்றனர். இத்தாலியர்கள் கொள்ளையரை சமாளிக்க Dumas என்ற முகமூடியர்களை காவலர்களாக வாடகைக்கு அமர்த்தினர். மரபுரீதியான சமூகக்குற்றவாளிகள் அதாவது சமூகக்கொள்ளையர்கள் பெரும்பாலும் வெளியாராகக் கருதப்படுவார். அவர்கள் தங்களுக்குள் ஒரு சமூக அமைப்பினை உருவாக்கிக் கொள்கின்றனர். அவர்கள், அவர்களுக்கான மொழியில் பார்க்கப் படுகின்றனர். அது, குற்றவாளிகளின் மொழி. அது, argot என்ற மொழியாகும். இவர்கள் Gypsies என்ற நாடோடிகளோடு தொடர்பு கொண்டிருந்தனர். கொள்ளையர்கள் Gypsies, French, Spanish, ரவுடி கூட்டத்தினின்றும் சில சொற்களைப் பெற்றனர். ஆனால், வேளாண் கொள்ளையர்கள் இதுபோன்ற ஒரு கலவை மொழியில் பேசவில்லை; மக்கள்மொழியில் பேசினர்.

### கொள்ளையரின் குற்றவகைகள்

இருவேறுவகையான குற்றவகைகள் உண்டு: (1) தொழில்ரீதியான அடியாள் கூட்டத்தினரின் நடவடிக்கைகள். இவர்கள் பொதுவாக திருடர்கள். (2) குழுக்களாக ஊர்புகுந்து திடீரென்று கொள்ளை யிடல். கொள்ளையர்களும், ஊர்புகுந்து திருடுபவர் களும் வேளாண்குடிகளை தங்கள் இரைகளாகக் கருதினர். ஒரு சமூகக்கொள்ளையன் வேளாண்குடிகளின் விளைச்சலைப் பிடுங்குவது சிந்திக்க இயலாத ஒன்று. அவர்கள் பண்ணையாரின் வேளாண் விளைச்சலைக் கொள்ளையிடுவர். சமூகக் கொள்ளையர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படாததால் கொள்ளைத் தொழிலை விட்ட பிறகும் மீண்டும் சமூத்தில் இணைந்துகொள்ள அவர்களுக்குத் தடையில்லை. தம் சமூகம் இயங்கும் வட்டாரத்துக்குள்ளேயே அவர்களின் இயக்கம் இருந்தது.

### பயன்பட்ட நூல்கள்


1. David Arnold (1979).Dacoity and Rural Crime in Madras,1860-1940, The Journal of Peasant Studies, 6:2.140-167.
2. Fernand Braudel (1995).The Mediterranean and ther Mediterranean World in the Age of Philip II.Vol.II Translated from the French [II revised edition,1966 (Tr.Sian Reynolds)]. First California Paper Pack Printing.
3. Fernand Braudel (1992).Civilization and Capitalism 15-18th century, 3.Vols. (translated from French by Sian Reynolds) University of California Press.
4. Marc Bloch (1971).Feudal Society: The Growth of Ties of Dependance,Vol.I.Translated from French by L.A.Mauyon, First English Translation.1961.Reprint in 1971.
5. ----------------(1978).French Rural History: An Essay on its Basic Characteristics. Translated from the French by Janet Sondheimer.
6. Eric Hobsbawm (1959).Primitive Rebels: Studies in Archaic Forms of Social Movement in the 19th and 20th Centuries.
7. ----------------(1969).Bandits.[First published in Great Britain.(reprinted in 2012)].Abacus,London.

# நியூ செஞ்சுரியின் ராகுல்ஜி நூல்கள்




**ராகுல்ஜியின் சுயசரிதை**
(இரண்டு பாகங்கள்)
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**சிந்து முதல் கங்கை வரை**
(சிம்மசேனாபதி) ஆராய்ச்சி நாவல்
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: மாஜினி




**மனித சமுதாயம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**ஊர்சுற்றிப் புராணம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**இஸ்லாமியத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**இந்துத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**ஐரோப்பியத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**விஞ்ஞான லோகாயத வாதம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**பௌத்தத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு, ஆர்.பார்த்தசாரதி



# காந்தியின் கனவு வேறு சவர்க்கரின் கனவு வேறு

யு.ஆர். அனந்தமூர்த்தி
தமிழில்: வெ.ஜீவானந்தம்

**யு.ஆர். அனந்தமூர்த்தி எழுதி வெ.ஜீவானந்தம் மொழிபெயர்ப்பில் NCBH வெளியீடாக விரைவில் வெளிவர உள்ள 'இந்துத்துவாவா? இந்திய சுயராஜ்ஜியமா?' என்ற நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரையின் ஒரு பகுதி.**

இந்தியர்கள் நாங்கள் அகிம்சாவாதிகள் என்று உரக்கச் சொன்னபோதும் நமது திரைப்பட வன்முறைகள், அதற்கு நம் மக்கள் தரும் கைதட்டல், நாம் எவ்வளவு வன்முறை நாட்டம் கொண்டவர்கள் என்பதைச் சொல்கிறது. மக்கள் சாந்தமான முகத்துடன் உலவலாம். ஆனால் அவர்கள் மனம் அர்த்தமற்ற வன்முறைகளை ஆராதிக்கிறது. இதற்கு நம் கடவுளர் பெயர்களே சான்று. முரா என்பவனைக் கொன்றவன் முராரி. சிவாஜி நல்லாட்சியின் சின்னமல்ல, பலரைக் கொன்றவராகிறான். சாந்தியைப் பின்பற்றிய அசோகர் புறக்கணிக்கப்படுகிறார்.

ஐரோப்பாவின் பண்பாடும் அப்படித்தான். ஆதிக்கமும் அடக்குமுறையும் ஆண்களின் பெருமையாகக் கருதப்பட்ட காலம். லண்டன் கோபுரத்தடியில் ஆண் குழந்தை பெற்றுத்தராத இளவரசிகள் பலர் கொன்று புதைக்கப்பட்டதை வரலாறு சொல்லும். வரலாறு என்பது வெற்றி பெற்ற வன்முறையாளர்களின் கதையே தவிர, மக்களின் வாழ்வு பற்றிய பதிவாக இல்லை. காந்தியின் அகிம்சை வழிப் போராட்டம் உலகுக்கே பெரும் செய்தியானது. அதில் வன்முறையும் அவ்வப்போது கலந்ததுண்டு. பிரிவினையின்போது எத்தனை இந்துக்களும், முஸ்லீம்களும் கொன்று குவிக்கப்பட்டனர். நாடு முழுதும் ரத்த ஆறு ஓடியது. தனது அகிம்சை தன் கண்முன் பொருளற்றதாக மாற்றப்படுவது கண்டு கலங்கி, காந்தி தன்னைவிட உயரமான தடியை ஊன்றி, வெறுங்காலுடன் கலவர பூமி நவகாளியில் தனிமனித ராணுவமாக நடந்தார். தில்லியில் விடுதலை நாள் கொடியேற்றமும், கொண்டாட்டமும் காந்தியின்றியே நடந்தது.

குஜராத் இன்று ஒர் இந்தியா தழுவிய மற்றொரு தலைவரை உருவாக்கி உலவவிட்டது எப்படி? மோடி முதல்வராக இருந்தபோதே குஜராத் படுகொலை நடந்தது. அவர் தடுக்க முயன்றார் முடியவில்லை என்பது அவரது பலவீனத்தையே கூறும். பெரிய யாகம் நடக்கும்போது பலரும் பல வேலைகளை ஓடி ஓடிச் செய்வர். ஆனால் மூலகர்த்தா ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து தனது கட்டளை நிறைவேற்றப்படுகிறதா என்பதை மட்டும் கண்காணிப்பார். அவரே பிரம்மா, சூத்திரதாரி. மோடி சூத்திரதாரி. நடந்தது நடந்தது தான்.

தாஸ்தயேவ்ஸ்கியின் கதைப் பாத்திரமான ராஸ்கோல்னிகோவ் என்பவன் தன் தவறுக்காக குற்றவுணர்ச்சியில் வாடினான். ஒரு விலைமகள் அவனுக்குக் காதலின் மகிமையை உணர்த்துகிறாள். மோடியும் வருந்தலாம். ஆனால் அது வேறு மாதிரியானது. ஒரு நாய்க்குட்டி காரில் அடிபட்டால் உண்டாகும் இரக்கம் போன்றது அது. அதற்கு என்ன செய்ய முடியும் என ஒருவர் கூறக்கூடும். ஒருவர் பாவம் நாய் என்று வருந்தவும் கூடும். கார் நின்றிருந் தால் நாய் அடிபட்டிருக்காது எனவும் கூறலாம்.

இங்கு நான் என் கருத்தைத் துணிவுடன் கூற வேண்டும். மோடி எவ்வளவு திறமையாக

சிறுபான்மையினரை அடக்கிவிட்டாரெனச் சிலர் பாராட்டவும் கூடும். NDTUயில் பர்காதத் ஓர் இஸ்லாமியரை அழைத்து மோடியைப் பாராட்டச் செய்தார். இப்போது நாம் மோடியின் ஆவேசப் பேச்சைக் கேட்க முடிவதில்லை. மோடி இப்போது அனைவரின் நேயராகிறார். ஊடகம் உட்பட அனைத்தையும் உருவாக்கிய இந்த மோடி யார்?

காந்தியின் சிறிய புகைப்படத்திற்கு மாலையிடும் படம் நம்மைத் தாக்குகிறது. ஒரு புதிய தலைவர் உருவம், உறங்காமல் உழைக்கும் தலைவர், கவர்ச்சிகரமான ஆடைகளில் உலா வருபவர். புறம் மாறியுள்ளது, அகம் மாறவில்லை. தன் மனைவியைத் தள்ளி வைத்து, ஜாதியை ஒதுக்கிப் புதிய சிவாஜி, படேல் ஆகிறார். நாடே மறதி மேகத்தில் மறைகிறது. காந்தியை மறந்தால் என்ன? லண்டனில் காந்தி சிலை திறந்து வணிக ஒப்பந்தம் கையெழுத்திட்டால் சரி.

மோடியின் முதல் நிதிநிலை அறிக்கையில் சர்தார் படேல் சிலையமைக்கப் பல கோடிகள் ஒதுக்கப்பட்டது. இது ஏன்? முதலாவதாக நேருவை ஒரு முதன்மைத் தலைவராகக் காட்டி, பட்டேலை பின்தள்ளினர் அவரது வழித்தோன்றல்கள். எனவே இப்போது அவர்கள் இதை எதிர்க்க முடியாது. மோடி நேரடியாகத் தனது வழிகாட்டி சவர்க்கரின் சிலையை வைக்க முடியாது. காந்தி கொலை வழக்கிலிருந்து சவர்க்கர் விடுவிக்கப்பட்ட போதும், அதன் கறை நீங்கவில்லை. அவரது புகைப்படம் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு இது போதும். பின் விமான நிலையம், பல்கலைக்கழகம், கட்டிடங் களுக்குப் பெயர் சூட்டலாம். நேருவின் சீடர்கள் செய்ததையும் மோடி செய்வதையும் யாரும் தடுக்க முடியாது. அத்வானிக்குக் கூடச் சிலை எடுத்து கௌரவிப்பார்.

காந்தி யுகம் முடிவுக்கு வந்து விட்டதெனவே நான் நினைக்கிறேன். சவர்க்கர் வென்றுள்ளார். இது தற்காலிகமானதாக இருக்கலாம். ஆனால், நம்மீது தற்போது வெற்றி பெற்றுள்ளார். “நமக்கு மூடநம்பிக்கை, ஜாதிப் பிரிவினை, சடங்குகள் மலிந்த இந்து மதம் வேண்டாம். இப்போது அனைத்து இந்துக்களும் இணைந்தால் போதும், முஸ்லீம்களைப் போல. நாம் அவர்களைச் சேர்ந்து எதிர்ப்போம். ஒரு வலிமைமிக்க இந்து பாரதத்தை உருவாக்குவோம்.”

வலிமையான பாரதம் இது சவர்க்கரின் கோஷம். அவர் கடவுளை நம்பாத நாத்திகரே. அவர் தீண்டாமையைக் கண்டித்தார். காந்தி போல ஜின்னாவுடன் சமமாகப் பேச்சு வார்த்தை நடத்தியவர். மதம் அவர்களுக்குத் தடையாக இல்லை.

சவர்க்கர் ஒரு பகுத்தறிவுவாதி. அனைத்து மாநிலங்களையும் சமஸ்தானங்களையும் இணைத்து வலிமைமிக்க இந்து பாரதம் உண்டாக்க வேண்டு மென்பதே அவர் லட்சியம். நாம் தாராளவாதிகள். எதையும் அடக்கி ஒடுக்கும் வெறியற்ற சமாதானவாதிகள். சில முஸ்லீம்கள் கலவரங்களில் ஈடுபடக் கூடும். அது போலவே சில தலித்துகளும் பிராமணர்களும் வன்முறையில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொருவரும் பெரும் குழப்பத்திற்குக் காரணமா கின்றனர். நம்மைப் போன்ற நல்லிணக்கவாதிகளே சமூக நல்லிணக்கத்திற்காகச் சிந்திக்க வேண்டியுள்ளது. மனித நேயத்தை வளர்க்கும் பொறுப்பும் நம்மிடமே உள்ளது.

மோடி உத்திரப்பிரதேசத்தில் அம்பேத் கரிஸ்ட்டுகளை வாயடக்க, அம்பேத்கர் சிலைக்கு மரியாதை செய்தார். அதுபோல லோகியா யிஸ்ட்டுகளாக இருந்து ஜாதிக்கட்சியினரான யாதவ்களை எவ்விதம் அடக்கினார். எதிர்காலத்தில் 24 X 7 தொலைக்காட்சி ஊடகத்தின் நவீன பிராமணர்களும், மனுவாதிகளும் நல்லிணக்கவாதிகளை விவாதத்திற்கு அழைப்பார்களா? மோடி அவர்களின் வாயையும் என்று அடைப்பாரோ? மண்டல் ஜாதியைச் சேர்ந்த நான் பிரதமராகவில்லையா என்று கேட்பாரோ?

மத்தியதர வர்க்கம், தலித்துகள், சூத்திரர்கள், முஸ்லீம்கள் கூட மோடி முழக்கத்தில் வீழ்வார்கள் போல் உள்ளது. அவர்கள் இடதுசாரிக் கொள்கைகளைக் கைவிட்டு விட்டார்கள். இனி இந்த மண் மட்டுமே இடதுசாரிக் கொள்கைகளைப் பேசக் கூடும். மோடியின் வளர்ச்சித் திட்டத்தில் இயற்கை தலைகீழாகப் புரட்டப்பட்டுக் கொண்டுள்ளது. மண் அன்னையின் கோபம் புயலாக, இடியாக, மழையாக, வெள்ளமாக, நிலநடுக்கமாகத் தாக்கக் கூடும்!

மத நல்லிணக்கவாதிகள் இப்போது ஒதுக்கப் பட்டுள்ளனர். இந்த தேசபக்தி, தேசியவாதம் எப்போது எல்லை கடந்து பாசிசமாகுமோ தெரியவில்லை. இந்த அச்சம் நியாயமானதே. இதுதானே இரண்டு உலகப் போர்கள் நமக்குச் சொல்லும் பாடம்? இந்தக் குறுகிய தேசியவாதம் சீனாவிலும் தலைதூக்குகிறது. மாவோவின் கொள்கைகள் கைவிடப்பட்டு வருகின்றன. சீனா உலக முதலாளித்துவமாகி வருகிறது. வேகமான அசுர வளர்ச்சியில் பயணிக்கிறது.

கனவுகளற்றவன் மனிதனல்ல. மனிதகுல நலன், மேம்பாடு, பசுமை உலகம், தெளிவான வானம் என்பன காண வேண்டிய கனவுகள். காந்தியின் கனவு அகிம்சை. கனவுகளை மனிதர்கள் உழைப்பால் நனவாக்குகின்றனர். அறிவியல் அதற்குத் துணை நிற்க வேண்டும். விஞ்ஞானம் இயற்கையை அழிக்க உதவக்கூடாது.

காந்தியின் இந்திய சுயராஜ்யம் இத்தகைய கனவின் சாரமே. மோடியின் வெற்றியும் கனவும் அதற்கு நேர் எதிரானது. மோடியின் கனவு சவர்க்கரின் லட்சியமான இந்துத்துவாவே. ஆனால் அவர் அதை நேரிடையாகச் சொல்லமாட்டார்.

●

# அதிகரித்து வரும் அயல்நாட்டு தீவிரவாதம்

பி.தயாளன்



ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பாரமுல்லா மாவட்டம் உரி பகுதியில் இந்திய இராணுவத்தின் டோக்ரா படைப்பிரிவு நிர்வாகத் தலைமையகத்தின் அருகில் இருந்த இராணுவ முகாம் மீது 16.09.2016 அன்று தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதலில் 17 இராணுவ வீரர்கள் பலியானார்கள். 30 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்தனர், இத்தாக்குதலையொட்டி மோடி அரசு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர்ச் சூழலை ஏற்படுத்தியது.

இராணுவ முகாம்களை தீவிரவாதிகளிடமிருந்து எப்படிப் பாதுகாப்பது என்பது குறித்து நிபுணர் குழு அளித்த பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை. மேலும், எல்லை தாண்டிய தீவிரவாதத்தை முறியடிப்பது குறித்த தேசியக் கொள்கையும் உருவாக்கவில்லை.

பிரதமர் மோடி, 'தாக்குதலுக்குக் காரணமானவர் களைத் தண்டிக்காமல் விடமாட்டோம்" என்று வாய்ச்சவடால் அடித்தார். மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 'பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த வேண்டும்" என்று அறிக்கை வெளியிட்டார். பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் ராம்தேவ், 'நாம் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டிய காலம் முடிந்துவிட்டது' என்று கொக்கரித்தார். ஆனாலீல் உரி இராணுவ முகாமில் நிலவிய பாதுகாப்புக் குறைபாடுகள், எதிர்காலத்தில் எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தவிர்ப்பதற்கான திட்டவட்டமான திட்டமிடல் குறித்த அறிவிப்புகள் ஏதும் இல்லை.

எல்லை தாண்டிய தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குவதற்கு, துல்லியத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. 'துல்லியத் தாக்குதல் என்பது ஒரு திட்டமிட்ட படைத்துறையின் இரகசிய அதிரடித் தாக்குதலாகும். இதன் நோக்கம் சரியான இராணுவ இலக்கிற்கு மட்டும் சேதம் விளைவிப்பது. இராணுவ வீரர்களுக்கோ, பொதுமக்கள் வாழும் சுற்று வட்டாரப் பகுதிகளுக்கோ பெரிய சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என இந்திய இராணுவ ஆய்வாளர் மோகன் குருசாமி வரையறுத்து உள்ளார்.

மோடி அரசு துல்லியத் தாக்குதலை நடத்தியும் எந்தப் பயனும் இல்லை. எல்லை தாண்டிய தீவிரவாதத்தை ஒழிக்க முடியவில்லை. 'துல்லியத் தாக்குதல் நடத்தியதால் தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்க முடியவில்லை, எல்லை தாண்டிய

தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை" என லெப்டினன்ட் ஜெனரல் ரன்பீர் சிங் அறிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்தை முறியடிப் பதற்குப் பதிலாக பாகிஸ்தான் நாட்டுக்கு எதிராக போர்வெறியைக் கிளப்பி விடுவதையும், எல்லையோரப் பகுதிகளில் பதட்டத்தை ஏற்படுத்துவதையும் வாடிக்கையாகக் கொண்டு உள்ளது மோடி அரசு.

உரி இராணுவ முகாம் தாக்கப்பட்டதை அடுத்து, பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த திரைப்பட நடிகர்கள், கலைஞர்கள் இந்திய சினிமாவில் நடிப்பதற்கு தடை விதித்ததுடன், அவர்களை நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று மோடி அரசு அறிவித்தது.

மேலும், பாகிஸ்தான் நாட்டு நடிகர் ஃபவாத் கான் நடித்துள்ள 'ஏ தில் ஹை முஷ்கில்' என்னும் திரைப்படம் மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கோவா ஆகிய நான்கு மாநிலங்களில் திரையிடுவதற்கு இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்தது, ஆனால், இந்த திரைப்படம் இந்தியர்களால் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அப்போதைய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் வெங்கைய்யா நாயுடு, 'கலைகளுக்கு எல்லைகள் கிடையாது என்றாலும் நாடுகளுக்கு எல்லைகள் உண்டு. இந்தியா பாகிஸ்தானுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு சிலர் இந்நாட்டுடன் நாடகம் நடத்திக் கொண்டிருக்க முடியாது' என்று மறைமுகமாகத் தடையை ஆதரித்தார். அதே வேளை இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் எஸ்.ஜெயசங்கர் பாகிஸ்தான் நடிகர்களுக்குத் தடை விதிப்பது குறித்து அரசு எவ்வித முடிவும் எடுக்கவில்லை என்றும், இரண்டு நாட்டைச் சேர்ந்த மக்களும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்கு எவ்வித தடையும் இல்லை என்றும் அறிவித்தார். அத்துடன் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்வதற்காக விசா வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு விசா அளிக்கப்படும் என்றும் அறிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் மேற்கண்ட திரைப்படத்திற்கு தடை விதிக்கப்பட வேண்டும் என்று அறிவிப்பதும், மத்திய அரசின் வெளியுறவுத்துறை செயலாளர் தடை விதிப்பது குறித்து முடிவு எடுக்கவில்லை என்று அறிவிப்பதும் மோடி அரசின் இரட்டை நாக்கில் பேசும் ஏமாற்று வித்தையாகும். கலைகள் நாடுகளையும் எல்லைகளையும் கடந்தது. இந்தியா சகிப்புத்தன்மை கொண்ட நாடு என்று பறைசாற்றிக் கொண்டு, இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுடையே கலாச்சார பரிவர்த்தனைகளையும், இரு நாட்டு மக்களின் தகவல் தொடர்புக்கும் தடைவிதிப்பது சரியான அணுகுமுறை அல்ல. இதனால் பாகிஸ்தானுடன் பகைமை அதிகரிக்கவே வழி கோலும்.

இந்தியாவில் இராணுவம் குறித்த அனைத்து தகவல்களும் இரகசியம் என்ற பெயரில் மூடி மறைக்கப்படுவது காலங்காலமாக நடைபெற்று வருகிறது. இதனால் இராணுவ தளவாட உற்பத்தி, கொள்முதல், பாதுகாப்பு ஒப்பந்தங்கள், நிதி ஒதுக்கீடு என அனைத்தும் மூடி மறைக்கப்பட்டு, வெளிப்படைத் தன்மையில்லாமல், ஊழலும், லஞ்சமும் தலைவிரித்தாடுகிறது. பதான்கோட் தாக்குதலின் போது இந்திய இராணுவத்தினர் கையாண்ட பாதுகாப்பு உத்திகள் குறித்த செய்திகளை ஒளிபரப்பிய என்.டி.டி.வி. சேனலுக்கு தடை விதித்தது மோடி அரசு. இதேபோல் மோடி அரசை விமர்சிக்கின்ற பத்திரிக்கைகள், தொலைக்காட்சி நிறுவனங்கள், நூல்கள், இதழ்கள், திரைப்படங்கள் முதலியவற்றை தடை செய்வதும், செய்தியாளர்கள் தாக்கப்படுவதும், அன்றாட நிகழ்வாகிவிட்டது. இது கருத்துரிமையைப் பறிக்கும் சனநாயக விரோத செயலாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியா - பாகிஸ்தானுக்கும் இடையில் அசாதாரணமான அரசியல் சூழல் நிலவுவதாலும், அமைதிப் பேச்சு





**எல்லை தாண்டிய தீவிரவாத தடுப்பு நடவடிக்கை சிக்கல்கள்**

நூலாசிரியர் : சு.அழகேஸ்வரன்.

விலை : ரூ.30/-

வெளியீடு : Vashviya
H-242, phase -2, Anna Nagar, Trichirapalli – 26.
Cell No. 9443701812

வார்த்தைகளில் உறுதித் தன்மையும், நல்ல முன்னேற்றமும் இல்லாததாலும், பதான்கோட் இராணுவத்தளம் தாக்கப்பட்டதாலும் வர்த்தகத்தில் மிகப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டது. இதனால் இருநாட்டு வர்த்தகங்களும், விவசாயிகளும், தொழிலாளர்களும், பொதுமக்களும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அதனால் மோடி அரசு உடனடியாக பாகிஸ்தானுடனான வர்த்தக உறவுகளை சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எல்லை வழி வர்த்தகத் தடையை உடனடியாக நீக்க வேண்டும்.

உரி இராணுவ முகாம் தாக்கப்பட்டதையொட்டி பாகிஸ்தானுக்கு எதிராக சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யப் போவதாக மோடி அறிவித்தார். இந்நூலில் சிந்து நதி நீர் ஒப்பந்தம் உருவான வரலாறு விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. சிந்து நதி நீர்ப் பிரச்சனை இருநாட்டு அமைச்சர்களும், அரசுப் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்க்கப்பட வேண்டும்.

அணு ஆயுதங்கள் உற்பத்தி குறித்த பேச்சு வார்த்தையில், அணு ஆயுதங்கள் குறைப்பு குறித்த எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே, அணு ஆயுதங்கள் தயாரிப்பது குறித்து இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே பாதுகாப்புத்துறை சார்ந்த பிரதிநிதிகள் மீண்டும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தி, உறுதியான உடன்படிக்கை ஏற்படுத்துவதே உரிய தீர்வாகும் என்பதை நூலாசிரியர் வலியுறுத்துகிறார்.

இந்திய இராணுவத்திற்கு தேவையான வெடி மருந்துகளை பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் கொள்முதல் செய்வதை மோடி அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் மூலம் பல நூறு கோடி ரூபாய் கமிஷனாக கைமாறுவதற்கும், ஊழல் நடப்பதற்கும் வழிவகுத்துள்ளது.

வெடி மருந்துகள் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களிடம் படைக்கலத் தொழிற்சாலைகளிடம் ஒப்பந்தப்புள்ளி அளிக்க அனுமதிக்கப்படவில்லை. மேலும் வெடிபொருள்கள் தயாரிப்பதற்காக துவங்கப்பட்ட நாலந்தா படைக்கலத் தொழிற்சாலையை செயல்பட வைப்பதற்கான நடவடிக்கைகளை மோடி அரசு மேற்கொள்ளவில்லை. இதன் மூலம் படைக்கல பொதுத்துறை நிறுவனங்களை மூடுவதற்கு மோடி அரசு தீவிரம் காட்டி வருகிறது.

நாட்டின் பாதுகாப்பிற்கு, இராணுவத்திற்கு தேவையான வெடி பொருள்கள் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு முன்வராத மோடி அரசு இந்தியாவை எப்படிப் பாதுகாக்கும் என்ற கேள்வி அனைவர் உள்ளத்திலும் எழுவது இயல்பே.

வெளிநாட்டு தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுப்பதற்கு அமைக்கப்பட்ட மதுக்கர் குப்தா குழு, சந்தோஷ் மெஹரா குழு முதலிய குழுக்களின் பரிந்துரைகள் அமல்படுத்தப்படாமல் மோடி அரசால் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. இதனால் மோடி ஆட்சியில் வெளிநாட்டு தீவிரவாதிகளின் ஊடுருவல் களும், தாக்குதலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி அரசு பதவியேற்றது முதல், எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தடுப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள், கொள்கை முடிவுகள் குறித்தும், எல்லை தாண்டிய தீவிரவாத தடுப்பு நடவடிக்கை சிக்கல்கள் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

எல்லை தாண்டிய தீவிரவாத தடுப்பு நடவடிக்கை சிக்கல்களை தீர்ப்பதற்கு நூலாசிரியரின் முன் வைப்புகள்.

- இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே சமாதானம், அமைதி ஏற்பட தொடர்ச்சியான, தடங்கலற்ற பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.
- இருநாட்டு அரசியல் பிரமுகர்கள், சிவில் உரிமை அமைப்பின் பிரதிநிதிகள், சனநாயக அமைப்புகள் இடம்பெறக் கூடிய கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும்.
- காஷ்மீர் மக்களின் உணர்வுகளையும், துயரங்களையும், துன்பங்களையும் இரு நாடுகளும் உணர்ந்து, காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும்.
- இருநாட்டு அரசியல் பிரமுகர்கள், அமைச்சர்கள் வெறுப்பேற்றும் விதமாக பேசி மக்களிடையே விரோத மனப்பான்மை உருவாக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இருநாடுகளுக்கு மிடையேயான மக்கள் உறவுகள் இயல்பான நிலைக்கு திரும்பிடவும், விசா கட்டுப்பாடுகள் நீக்கப்படவும், இலவச சுற்றுலா விசாக்கள் வழங்கப்படவும், வர்த்தகம், பொருளாதாரம், கலாச்சார உறவுகள் வளர்த்தெடுக்கப் படவும், ஊடகங்கள் நடுநிலைமையுடன் செய்தி வெளியிடவும் மேற்கொள்ள வேண்டுமென மோடி அரசை சனநாயக, முற்போக்கு, இடதுசாரி கட்சிகள், இயக்கங்கள் நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதை நூலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.
- இந்திய நாட்டின் பாதுகாப்பின் மீதும், அண்டை நாடுகளுடன் அமைதியான நல்லுறவை வேண்டுவோரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது.

●

# நியூ செஞ்சுரியின் ரஷ்ய இலக்கிய நூல்கள்




## பல கோடி வருடங்களுக்கு முன்னர்

தொல்லுயிரியலைப் பற்றிய படப் புத்தகம்

**இரினா யாகோவ்லெவா, மொழிபெயர்ப்பாளர் நா.தர்மராஜன்**

சோவியத் அறிஞர் இரினா யாகோவ்லெவா எழுதியுள்ள இந்நூல் உலக உயிர் வரலாறு குறித்து ஆதாரப்பூர்வமாகவும் சுவையாகவும் எளியமுறையில் விளங்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.

₹ 50/-

## குழந்தைகளும் குட்டிகளும்

**ஓல்கா பெரோவ்ஸ்கயா,** தமிழில்: **ருக்மணி**

சோவியத் அறிஞர் இரினா யாகோவ்லெவா எழுதியுள்ள இந்நூல் உலக உயிர் வரலாறு குறித்து ஆதாரப்பூர்வமாகவும் சுவையாகவும் எளியமுறையில் விளங்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.




₹ 180/-




## மே தின வரலாறு

**அலெக்ஸாந்தர் டிராச்டென்பர்க்,** தமிழில்: **ரகுநாதன்**

மே தின வரலாறு என்பது மேலை உலகில் உழைக்கும் மக்களிடம் எவ்வாறு விழிப்புணர்வு கரு கொண்டது என்பதை விளக்கும் வரலாறு.

₹ 40/-

## அரசியல்

**அரிஸ்டாட்டில்,** தமிழில்: **சி.எஸ்.சுப்பிரமணியம்**

அரிஸ்டாட்டிலின் அரசியல் நூலுக்கு ஆங்கிலத்தில் அறுபது மொழியாக்கங்கள் வெளிவந்துள்ளன. அத்தனை ஆங்கில மொழியாக்கங்களையும் ஒப்புவைத்து, பத்தாண்டு கால உழைப்பில் செய்யப்பட்ட மொழியாக்கம் இது.




₹ 285/-




## நெஞ்சை ஈர்க்கும் வானவியல்

**வி.கொமரோவ்,** தமிழாக்கம்: **அ.நடராஜன்**

வானவியல் புதிர்கள் இன்னமும் முழுமையாகத் தீர்க்கப்பட்டுவிடாத நிலையில், வானவியல் அறிவுத்துறை நோக்கில் போதுமான அளவிற்கு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் உண்மைகளை விரிவாக விளக்கிச் செல்கிறது இந்நூல்.

₹ 270/-

கட்டுரை

# ஹிரன் முகர்ஜியின் காந்தி

## ஆர். பட்டாபிராமன்

மார்க்சியம் சார்ந்த எழுத்துக்கள் மூலம் அயராது தோழர்களுக்கு கற்றுக் கொடுத்த மிக முக்கியத் தலைவர்களுள் ஹிரனும் ஒருவர். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது நேரு உட்பட முக்கிய தலைவர்கள் அவரது உரையை கவனமாகக் கேட்டனர். அவரது சொற்செறிவும் ஆழமும் மிகுந்த ஆங்கிலம் நேருவை மிக அதிகமாகக் கவர்ந்தது. அவரது பெங்காலி, உருது மொழியாற்றலும் பிரமிக்கத் தகுந்தவை. நாடாளுமன்றத்தில் இடதுசாரிகளின் மனசாட்சி என அவர் கருதப்பட்டார்.

ஹிரன்முகர்ஜி பார் அட் லா பாரிஸ்டர் பட்டம்பெற்று 1934இல் இந்தியா திரும்பினார். சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவுரையை ஏற்று ஆந்திரா பல்கலைக்கழகத்தில் வரலாறு அரசியல் விரிவுரையாளராகச் சேர்ந்தார். பிறகு கல்கத்தா சுரேந்திரநாத் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரியத்துவங்கினார். கல்கத்தா பல்கலைக்கழக இலாகாத்துறை தலைவராக 1940இல் உயர்ந்தார். 1936இல் தோழர் பி சி ஜோஷி பிற நண்பர்கள் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்கிறார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம், சோவியத்நண்பர்கள் அமைப்புகளில் செயல்படுகிறார். கட்சியில் வங்க மாநில கமிட்டியில் ஆரம்பத்தில் செயல்பட்டுவந்தார். பின்னர் 1958-68களில் தேசிய கவுன்சிலில் செயல்பட்டார். முதல் நாடாளுமன்ற தேர்தல் துவங்கி 5வது லோக்சபா 1977வரை 25 ஆண்டுகள் ஹிரன் முகர்ஜி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். 1990இல் பத்மவிபூஷனும் 1991இல் பத்மவிபூஷனும் அவருக்கு வழங்கப்பட்டது. ஒரே நேரத்தில் ஹிரனின் காந்திய ஆய்வும், இ.எம்.எஸ் அவர்களின் மகாத்மா இசம் என்கிற ஆக்கமும் வெளியாயின. இங்கு இடம்பெற்றுள்ள கட்டுரையில் காந்தி குறித்த ஹிரன் முகர்ஜியின் ஆய்வு சுருக்கமாக விளக்கப்படுகிறது.

காந்தியின் பெருமிதமே அவரது அச்சமற்ற தன்மையில்தான் இருக்கிறது. பேச சக்தியற்ற மக்களை நியாயம் கேட்கத்தெரிந்த மனிதர்களாக உயர்த்தினார் காந்தி. திரண்டு தங்களால் போராட இயலும் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார். மற்ற மாபெரும் மனிதர்களைப்போலவே அவர் உலகிற்கு உரியவரானார்

நாங்கள் புரட்சிக்காரரர்களாக இருக்கலாம். ஆனால் எங்களில் பலர் மகாத்மா காந்தியின் நேரடியான அல்லது மறைமுக சீடர்களாகவே இருக்கிறோம் என ஏப்ரல் 7, 1958இல் வியத்நாமின் ஹோசிமின் கூறினார். மார்க்சிய அறிஞரும் இந்திய விடுதலைக்கால நிகழ்வுகளை உற்றுநோக்கி இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு வழி காட்டியாக இருந்தவருமான ரஜனிபாமிதத், காந்தியை முதலாளிகளின் முகமூடி என 1939இல் குறிப்பிட்டது சற்றுக் கடுமையானது .

மற்ற எல்லோரையும்விட காந்தியால்தான் மக்களை போராட்டப் பாதைக்கு அழைத்துவரமுடிந்தது. அதேபோல் புரட்சி அளவிற்கு அது போய்விடாமல் தடுக்கவும் முடிந்தது. இந்த அபார சக்தியால் அவரால் பிரிட்டிஷாரை விவாதமேடைக்கு, கொணரமுடிந்தது என ருஷ்ய அறிஞரும் இந்திய ஆய்வாளருமான உல்யாவ்னாஸ்கி 1970இல் எழுதினார்.

கம்யூனிஸ்ட் கட்சி லைன் என காந்தியைப்பற்றி திட்டவட்டமான வரையறை ஏதும் இல்லை. அவரது பங்களிப்பு, பாத்திரம் குறித்த பொதுவான புரிதல் கட்சியிடம் இருந்தது. ஹிரனின் காந்தியை படித்தல் புத்தகம் வந்தநேரத்தில், பியாரிலாலில் காந்தி இறுதிக் கட்டமும், இ எம் எஸ் நம்பூதிரிபாடின் மகாத்மா - இசம் என்கிற ஆக்கங்களும் வெளிவந்தன.

இந்தியாவைப்போலவே முரண்பாடுகள் கொண்ட மனிதராக காந்தி இருந்தார். அதே நேரத்தில் மற்ற அனைவரையும்விட உயர் பார்வை தீர்க்கம் கொண்டவராக அவர் விளங்கினார்.

இந்திய வேர்கள் என்பதிலிருந்து வந்தாலும் எங்களைப் போன்றவர்களை மார்க்சியம் ஈர்த்தது. காந்தியம் என்பது என்னிடம் காணப்படவில்லை என்பதை ஹிரன் ஏற்கிறார். காந்தியம் என்கிற ஒன்றுடன் தான் வேறுபட்டு இருந்தாலும் அது மகத்தான சிந்தனையாக இருந்தது. விஞ்ஞான சிந்தனை என்ற பெயரால் எல்லாம் அதை புறக்கணித்துவிட முடியவில்லை என்கிற உணர்தல் தம்மிடம் இருந்ததாகவும் ஹிரன் ஏற்கிறார்.

காந்தியை அவரின் புகழைக் குறைத்து மதிப்பிடாமலும், அதே நேரத்தில் அவரின் சிந்தனை செயல்பாட்டில் உணரப்பட்ட limitations குறித்து கண்ணை மூடிக்கொள்ளாமலும் ஆய்விட வேண்டும். நமது புராணங்களில் கடவுளை எதிராக நின்று விமர்சிக்கும் தன்மையும் பதிவாகியே இருக்கிறது. அத்தகைய விமர்சனப் பார்வையுடன் தன் ஆய்வை ஹிரன் நடத்திச் செல்கிறார்.

காந்தி மிருதுவானவர். அதே நேரத்தில் பிடிவாதமானவரும்கூட. அப்பிடிவாதம் எழுந்து

விட்டால் அவர் பின்வாங்குவதில்லை. தென்னாப்பிரிக்கா சோதனையில் அவரிடமிருந்த உட்டொபியனிசத்தை நாம் பார்க்கமுடிகிறது. அவரது குடியேற்ற முறைகளில் சமத்துவத்தையும் சக மனிதர் என்கிற உணர்வையும் அவர் அடைந்தார். போராட்டம் என வந்தபோது அதன் உச்சிக்குச் சென்றார்.

மனிதர்களை மத சாதி ரீதியாக வேற்றுமை பாராட்டும் இந்திய முட்டாள்தனத்தை அவர் பொதுமேடையில் சாடினார். அப்படி எழுந்த முதல் பெருங்குரலாகவும் அவர் இருந்தார். 'தாகத்தால் சாவேனே தவிர இஸ்லாமியர் ஒருவரிடம் தண்ணீர் வாங்கிப் பருக மாட்டேன்' என்பதைத்தான் அவர் முட்டாள்தனம் என்றார். கிலாபத் காலத்தில் இந்து - முஸ்லீம் என இரு சாராருக்கும் உரிய பொதுத்தலைவராக அவர் உணரப்பட்டார். அரசியலை ஆன்மீகப்படுத்துவது என்பதில் பெரும் நம்பிக்கையுடன் செயல்பட்டார். அரசியலில் மதம் என்பது குறித்து அவர் அச்சப்படவில்லை. மகாத்மா - சௌகத் அலி வாழ்க என்பதைவிட இந்து- முஸ்லீம் ஒற்றுமை வாழட்டும் எனப் பேசினார். இரு சாராரும் சேர்ந்து அல்லாஹூ அக்பர், பாரத்மாதாகி ஜே, இந்து முசல்மான் கி ஜே என ஏன் முழக்கமிடக்கூடாது என வினவினார்.

காந்தி முதலாளிகளின் கருவி என்கிற எண்ணமின்றி செயல்பட்டிருக்கலாம். ஆனால் அவரின் போராட்டமுறைகள் அதன் எல்லைகள் முதலாளிகளின் எண்ண ஓட்டத்திற்கு இசைவாக இருந்தது என ஹிரன் மதிப்பிடுகிறார்.

அந்நிய பொருட்களை எரியூட்டிய இயக்கம் விமர்சிக்கப்பட்டபோது எனது அவமானத்தை எரியூட்டுகிறேன் என்றார் காந்தி. மக்களின் கோபத்தை மனிதர்களிடமிருந்து பொருட்களுக்கு திருப்பியதாக காந்தி தெரிவித்தார். ஹஸ்ரத் மொகானி பரிபூர்ண சுதந்திரம் என்கிற தீர்மானம் கொணர்ந்தபோது காந்தி அதற்கு உடன்படவில்லை. நமக்கு இன்றுள்ள எல்லைகளைப் புரிந்துகொள்ளாமல் பொறுப்பற்ற தீர்மானங்களை நிறைவேற்றக் கூடாது என்றார் .

சம்பரான், அகமதாபாத் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம், சிவில் சட்டமறுப்பு- சௌரி சௌரா அனுபவம் வழியே . பர்தோலி கிராமத்தில் வரிகொடா இயக்கம் என மக்கள் போராட்டங்களுடன் மக்களின் பேரன்புக்குரிய தலைவராக அவர் உயர்ந்துவந்தார்.

சௌரி சௌரா நிகழ்வால் அவர் பிப் 12, 1922இல் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தார். நூற்பு, தீண்டாமை ஒழிப்புத் திட்டங்கள் என இயங்கினார். அரசியல்ரீதியாக தன் முடிவு விமர்சிக்கப்பட்டாலும் சமயரீதியாக சரியான முடிவே என்றார். உண்மைக்கும் அகிம்சைக்கும் உடன்பாடில்லாமல் காங்கிரசில் இருக்க வேண்டியதில்லை என்றுகூட சற்று காரமாகப் பேசினார். காந்தியின் இவ்வகைப்பட்ட கோட்பாட்டு அணுகுமுறை அவரது தலைமையையே வரையறைக்கு உட்படுத்திவிட்டது என ஹிரன் தன் மதிப்பீடாகத் தருகிறார். எனவேதான் அவரால் சுரண்டலுக்கு எதிராகப் பேசமுடிந்தாலும் நடைமுறையில் சுரண்டுபவர் நலன்களை தடுக்க முடியவில்லை.

காந்தியின் கட்டுமான திட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் மக்களைத் திரட்ட உதவியது என்பதை மறுக்க முடியாது. ஆனால் பாதுகாப்பான எல்லைக்குள் எல்லாம் ஒன்றாக்கப்பட்டது. அவர் பூர்ஷ்வாக்களின் தலைவர் என நினைத்துக்கொள்ளாமல் காரியமாற்றியிருந்தாலும், அதன் நலன்களுக்கு உட்பட்ட வகையில் மக்களைத் திரட்டிப் போராடவைக்கும் அவ்வர்க்க இயல்பிற்கு காந்தியின் போராட்டமுறை பொருத்தமாகப் போய்விட்டது. நேருவின் மூலம் இடதுசாரி இயக்கங்களையும் காந்தி தனது கட்டுக்குள் வைக்க விரும்பினார். நேருவும் அவரது மாஸ்டரின் அன்புசிறைக்குள் கட்டுண்டு நின்றார்.

பூர்ஷ்வாக்களின் உலகம் உண்மைக்கு அப்பாற்பட்ட ஏமாற்று உலகம். அவர்கள் வர்க்கம் என்கிற வகையில் ஒழுக்கசீர்கேடுகளைப் பற்றியோ வன்முறைகள் குறித்தோ எந்த பொருட்படுத்தலையும் செய்வதில்லை. காந்திக்கு இது ஒரு பெரும் முரண். காந்தி அவர்களின் விருப்பமான கருவியாக செயல்பட்டார் எனச் சொல்வது அற்பவாதமாக இருக்கும். காந்தி மக்களின் இதய கதவுகளைத் திறந்தவர். அவர்களின் மதிப்பை உயர்த்தியவர். நம்மை அடிமைப்படுத்தி வாழவைத்தவர்களிடம் அச்சமற்று இருக்கக் கற்றுத்தந்தவர். அதே நேரத்தில் அவரது தலைமையில் காணப்பட்ட சில வித்தியாசமான தன்மைகள் (oddities) விமர்சனத்திற்கு உள்ளாகாமல் இல்லை என்கிறார் ஹிரன்.

காந்தி-இர்வின் உடன்பாடு பெரும் ஏமாற்றத்தையே தந்தது. உடன் நடந்த கராச்சி மாநாட்டில் இளைஞர்கள் அதிருப்தியுடன் அவருக்கு எதிரான மனநிலையில் இருந்தனர் என்பதை சுபாஷ் சந்திரபோஸ் வெளிப்படுத்தினார். காந்தி **1932**இல் தனது முழு கவனமும் அரிசன மக்கள் முன்னேற்றம் நோக்கி என அறிவித்து செயல்படலானார். அரிசன முன்னேற்றம் முக்கியப் பிரச்சினைதான். ஆனால் தேச விடுதலை இயக்கத்தை நிறுத்திவிட்டு செய்யவேண்டுமா என்கிற விமர்சனம் காந்தியார் மீது வரத்துவங்கியது. தன்னைத் தியாகம் செய்துகொள்ள இப்படிப்பட்ட பக்கவாட்டு பிரச்சினைகளை அவர் ஏன் தேர்ந்தெடுத்துக்கொள்கிறார் என்று பலர் புதிராகப் பார்த்தனர். பெரும் தியாகங்களை மேற்கொண்ட நமது இயக்கம் சிறிய அவ்வளவாக முக்கியமில்லாத பிரச்சினைகளுடன் கட்டப்படவேண்டுமா என்கிற வேதனையை நேரு வெளிப்படுத்தினார். அதே

நேரத்தில் உரிய உளவியல் தருணத்தை அவர்தான் சிறப்பாக அறிந்து வழிகாட்டுகிறார் என நேரு சமாதானமும் அடைந்தார்.

1934 மே மாதம் கூடிய காங்கிரஸ் ஒத்துழையாமையை விலக்கிக்கொள்ள முடிவெடுத்தது. சத்தியாக்கிரகத்தை மக்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என வருந்தினார் காந்தி. "ஆன்மீக கருவிகளை ஆன்மீகமற்ற ஊடகங்களால் மேற்கொள்ளும்போது அவை வலுவிழக்கும்'' என்றார்.

1928ல் சக்லத்வாலா காந்தி சந்திப்பும் உரையாடலும் நடந்தது. இந்தியாவின் பிரச்சனைகள் குறித்த சரியான புரிதல் சக்லத்வாலாவிற்கு இல்லை எனினும் அவரின் தியாகம் போற்றப்படவேண்டும் எனக் கருதினார் காந்தி.

காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி அமைப்பு 1934இல் துவங்கப்பட்டது. காந்தி சோசலிசம் குறித்தோ தொழிலாளர் - விவசாயி அமைப்புகள் குறித்தோ விமர்சனங்களை அடுக்கி அரசியல் செய்யவில்லை. ஒவ்வொன்றையும் புரிந்துகொண்டு தனது தராசில் அவைகளை எடை போட்டார். சி எஸ் பியின் முக்கிய தலைவரான நரேந்திரதேவாவிடம் விஞ்ஞான சோசலிசம் என்றில்லாமல் நடைமுறை சோசலிசம் பற்றிய புரிதலுடன் வாருங்கள் என்றார் காந்தி. உங்கள் திட்ட நகலை எதார்த்த நடைமுறை வாழ்க்கையில் செயல் ஆற்றுபவர்களுடன் கலந்து பேசி மேம்படுத்துங்கள் என்றார்.

1940இல் பாகிஸ்தான் கோரிக்கை தீவிர வடிவம் எடுத்தது. தங்களின் நலன்களுக்கான மக்களின் எழுச்சிகர இயக்கம் மட்டுமே வகுப்புவாத சூழலுக்கு இறையாண்மைகொண்ட தீர்வாக இருக்க முடியும் என ரஜனி பாமிதத் எழுதினார். இதை காந்தியடிகளும் காங்கிரஸ் தலைவர்களும் புரிந்துகொள்ளத் தவறிவிட்டனர் என்பது அவரது விமர்சனமாக இருந்தது. எரியும் தீக்கு எண்ணெய்யாக அவர்கள் நடவடிக்கைகள் அமைந்துவிட்டன என்றார் தத்.

காந்தி அரசியல் தலைவராகச் செயல்பட வேண்டியிருந்ததால் அவர் துறவி ஆசனத்திலிருந்து இறங்க வேண்டியிருந்தது. தனது கொள்கை நிலைகளில் உறுதிப்பாட்டைக் கொண்டிருந்தாலும், மக்களுடன் தொடர்ந்து பயணித்தவர் என்ற முறையில் தனது நிலைகளை மாற்றிக்கொள்ள அவர் தயங்கவில்லை. அதே நேரத்தில் சில அடிப்படைகளை, கைவிடாமல் பயணித்தார்.

இரண்டாம் உலகப்போர் காலமான 1940இல் பிரிட்டிஷாரே தங்களை காப்பாற்றிக்கொள்ள போராடிக்கொண்டிருக்கும்போது அவர்கள் நம்மை எப்படிக் காப்பார்கள் என்றார். மௌலானா உட்பட்ட தலைவர்கள் மக்கள் இயக்கம் என்றபோது இப்போது சிவில் ஒத்துழையாமை கூடாது என்றார். 'காங்கிரசின் தேசியம்' என ஜின்னா கேலியாக விமர்சிக்கலானார். இந்துக்கள் தேசியம் என சாவர்க்கர் பேசிவந்தார். கே. எம் முன்ஷி போன்றவர் அகண்ட இந்துஸ்தான் என்றனர். காந்தி தனக்கான எதிர்வினைகளை காணத்துவங்கினார் என இச்சூழல் பற்றி ஹிரன் விவரிக்கிறார்.

எனது ராமராஜ்யத்தில் இளவரசருக்கும் ஆண்டிக்கும் ஒரே உரிமையே என காந்தி பேசினார். அவருக்கு ஏழைகள்பாற் நலன் என்பதில் பெரும் உறுதிப்பாடு இருந்தது. உயர்ந்தோர் பெறும் சமூக சலுகைகளும் பீடங்களும் ஏழைகளின் அவதிகளும் சில சரிகட்டல்களுடன் சமவாழ்வு நடத்தமுடியும் என அவர் நம்பினார். ஜனவரி 1940இல் அவர் தன்னிடம் சிவப்பு அழிவிற்குரிய (Red ruin) பாதையை எதிர்பார்க்க வேண்டாம் என்றார். எனது வாரிசு ராஜாஜி அல்ல, நேருதான். நேரு எனது மொழி புரியவில்லை என்கிறார். மொழி முக்கியமல்ல. இதயங்களின் ஒன்றிணைவுதான் முக்கியம். நான் மறைந்தபிறகு எனது மொழியை நேரு பேசுவார் என்றார் காந்தி.

1942 மே மாதம் இந்தியாவிற்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் இதயபூர்வ ஒற்றுமை ஏற்பட வேண்டுமெனில் உடன் பிரிட்டிஷ் வெளியேற வேண்டும் என்றார். காங்கிரசிடம் விடக்கூட அவர் சொல்லவில்லை. இந்தியாவை இறைவனிடம் நம்பி விட்டுச் செல்லுங்கள் என்றார். இருக்கிற கட்சிகள் சண்டையிட்டுக்கொள்வார்கள். அவர்கள் சமாதானமும் அடைவர். தீர்வையும் எட்டிவிடுவார்கள். அனைத்து குழப்பமான நிலையிலும் அகிம்சை எழும் என்றே தான் நம்புவதாகக் காந்தி குறிப்பிட்டார்.

விவசாயிகள் வரிகொடா இயக்கத்தையும் நிலம் மீட்கும் போராட்டத்தையும் நடத்துவர். நிலப்பிரபுக்கள் ஓட்டம் பிடித்து ஒத்துழைக்கவேண்டும். அவசியம் என்றால் பொதுவேலைநிறுத்தம் கூட இறுதியில் தேவைப்படலாம் என லூயி பிஷ்ருடன், இக்கட்டத்தில் காந்தி தனது உரையாடல் மூலம் தெளிவுபடுத்தினார்.

1942 ஆகஸ்ட்டில், செய் அல்லது செத்துமடி உரையில் காந்தி நேரிடையாக விவசாயிகளுக்கோ, தொழிலாளர்க்கோ அறைகூவல் விடுக்கவில்லை. பத்திரிகையாளர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், வீரர்கள் உதவலாம் எனப் பேசினார். உடனடியாக விடிவதற்குள் விடுதலை எனவும் குறிப்பிட்டார். வெறும் அமைச்சரவைக்கான பேரமில்லை. முழுவிடுதலை என பிரகடனப்படுத்தினார். செய் அல்லது செத்துமடி மந்திரமான அறைகூவலில் இரகசியம் ஏதுமில்லை. சுதந்திரமனிதன் இரகசிய அமைப்புகளில் வேலை செய்யவேண்டியதில்லை என்பது அவரது நிலைப்பாடு.

அரசாங்கம் அனைத்து தலைவர்களையும் சிறையில் அடைத்தது. போராட்டத்தை தீவிரமாக

ஒடுக்கியது. அரசாங்கத்தின் மோசமான அடக்கு முறையால்தான் மக்கள் மேலும் வெகுண்டு எழுந்துள்ளனர். அழிவுகள் நேர்ந்திருந்தால் அதற்கு அரசே பொறுப்பு என காந்தி பேசினார். வைஸ்ராய்க்கு செப் 23, 1942இல் கடிதமும் எழுதினார். அடக்கி ஒடுக்குதல் கசப்பையே கூட்டும் - அதிருப்தியை அதிகரிக்கும் என்பது வைஸ்ராய்க்கு உணர்த்தப்பட்டது.

பாகிஸ்தான் எனும் தனி ஸ்டேட் பற்றிக்கூட புரிந்துகொள்ளலாம். ஆனால் தனி இறையாண்மை என்பதை ஏற்கமுடியவில்லை. பிரிவினை நாம் மட்டும் உணரும் ஒன்றாக இருக்கலாமே ஒழிய உலகத்திற்கு அதை காட்டவேண்டியதில்லை என்கிற பொருள்பட அறிவுறுத்தினார் இந்து பிரிவினைவாதிகளும் காங்கிரஸ் - லீக் மத்தியில் விரிசலை அதிகப்படுத்திவிட்டதாகக் காந்தி கருதினார்.

கப்பற்படை எழுச்சிக்கு சில நாட்கள் முன்னர் காந்தி நாட்டில் உலாவும் வெறுப்பு குறித்து கவலையுடன் பேசினார். அது பொறுமை யிழந்தவர்களுக்கு வாய்ப்பாகிவிடும் என்றார். கப்பற்படை எழுச்சி ஏற்பட்டபோது அவரால் அதை மோசமான உதாரணமாகவே பார்க்கமுடிந்தது. சிந்திக்காமல் செயல்பட்டுவிட்டனர் என்பது அவரது அபிப்ராயமாக இருந்தது. பிரிட்டிஷ் வெளியேறுவதாக பேசிக்கொண்டிருக்கும் சூழலில் இது மாதிரியான போராட்டங்கள் அந்நிலைப்பாட்டை தள்ளிப் போட்டுவிடும். அருணா ஆசப்அலிக்கு வேண்டுமானால் அரசியல் சட்ட வழியல்லாது போர்முனையில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்கிற நம்பிக்கை இருக்கலாம். அகிம்சை வழி நம் மக்களை உறக்கத்திலிருந்து எழுப்பியதா இல்லையா என்பதை அருணாவும் அவரது தோழர்களும் மனசாட்சியை கேட்டுக்கொள்ளட்டும் என்றார் காந்தி. நேருவும் மெஷின் துப்பாக்கி காலத்தில் 18ஆம் நூற்றாண்டுவகை போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கமுடியாது என்றார்.

விடுதலை நாளான ஆகஸ்ட் 15, 1947 அன்று தன்னிடம் எந்த செய்தியும் இல்லை என்றே காந்தி கூறினார். அவரை அணுகியவர்கள் ஜனவரி 26, 1948இல் கேட்டபோதுகூட தான் ஏமாற்றமடைந் துள்ளதாகத் தெரிவித்தார். வகுப்புக் கலவரங்கள் அவரை பெரும் வேதனையில் ஆழ்த்தியிருந்தன. அமெரிக்க பேராசிரியர் ஒருவரிடம் அகிம்சா வழியில் இருப்பதாக இந்திய மக்கள் நடித்துக்கொண்டிருந்த தாகவும், சத்தியாக்கிரகம் ஆழமாக இறங்கவில்லை என்பதை உணர்ந்ததாகவும் காந்தி தெரிவித்தார். அகிம்சை போல் தோற்றம் கொண்டவை நொறுங்கிப் போயுள்ளதாகவும் அவர் விசனப்பட்டார்.

காந்தி வயதாகி நோய்ப்படுக்கையில் கிடந்து இறக்கவில்லை. தான் கொண்டிருந்த நம்பிக்கையின் பாற்பட்டே சுடப்பட்டு மரணித்தார். இருநாட்கள் முன்பாகக் கூட, தான் சுடப்பட்டு சாகலாம் என்கிற உள்ளுணர்வை அவர் வெளிப்படுத்தியிருந்தார். நேரு கூறியபடி தன் முழு கட்டுப்பாட்டில் அனைத்தும் நடந்துவந்த காலத்தில் அவர் மறைந்தார். வாழும் நாட்களிலேயே வழக்கற்றுப்போய் சாவு படுக்கையில் கிடந்த வந்த மரணமல்ல. அவரது வாழ்க்கையை அம்மரணம் மேலும் உயர்த்திவிட்டது. ஒற்றுமைக்கான பெரும் தியாக மரணமது.

காந்தியால் தீண்டாமையை ஒழிக்கமுடியாமல் போயிருக்கலாம். ஆனால் அதை ஆட்டம் காணச் செய்தார். வறுமை நீக்கம் மற்றும் வளர்ச்சி குறித்த காந்தியக் கருத்துக்கள் மரியாதைக்குரியனவாக இருக்கலாம். நடைமுறையில் அவை வலுவற்றனவாக இருக்கின்றன. காந்தி மட்டுமே சுதந்திரம் பெற்றுத்தந்த கர்த்தா என்பது உண்மைக்கு நெருக்கமான ஒன்றல்ல என்பது ஹிரனின் மதிப்பீடு. சத்தியாக்கிரகம் மட்டுமே சுதந்திரத்தை பெற்றுத்தந்தது என்பதைத் தாண்டி வரலாற்று மாணவர்களால் செல்லமுடியும். ஆனால் மக்களைத் தட்டி எழுப்பிய பெரும் இயக்கமது.

காந்திக்கு இணையாக செயலாற்றியவர் எவரும் இல்லை என்றாலும் காந்தி தரிசு நிலத்தில் செயலாற்றிடவில்லை. அவர் மட்டுமே என்பதிலும் உண்மையில்லை. காந்தி பூர்ஷ்வா இயக்கத்திற்கு பெரும் அசைவைக் கொடுத்தார். மக்களைத் திரட்டி எல்லைக்குள் கட்டுக்குள் போராடவேண்டும் என்கிற முயற்சியைச் செய்தார். அது சொத்துரிமை கொண்ட வர்க்க நலன்களுக்கு பாதுகாப்பாகவும் அமைந்தது.

எந்த நேரத்திலும் எதையும் சந்திக்க வேண்டிய நிலையில் நடைமுறை சார்ந்தவர்களாக சோசலிஸ்டுகள் இருக்க வேண்டியுள்ளது. சோசலிசம் என்பதே கூட moral objective கொண்டதுதான். நெறிகோட்பாடுகளை பின்பற்றவேண்டிய ஒன்றுதான். ஆனால் முன்கூட்டியே முடிந்த முடிவான ஒன்றாக எதுவும் எப்போதும் இருக்கமுடியாது என்பதையும் புரிந்து செயலாற்ற வேண்டியுள்ளது.

உயர் இலட்சிய தாகம் கொண்ட நடைமுறை சார்ந்து இயங்கிய பழமையும் புரட்சிகரத் தன்மையும் கொண்ட கலவையாக இருந்தார் காந்தியடிகள். காந்தியத்தைவிட காந்தி பலமடங்கு உயர்ந்து நிற்கிறார். நான் உண்மைக்கான வழியைத்தான் காட்டுகிறேனே தவிர உண்மையையே காட்டவில்லை என அவர் தெளிவுபடுத்தினார். தனிநபர் ஒழுக்கம்-நன்னெறி மேம்பாடு என்பவற்றை அவர் வலியுறுத்திவந்தார். வாழ்ந்தும் காட்டினார். எந்த சமூக இயக்கமும் இவற்றை புறக்கணிக்கமுடியாது. அன்புநிறை செயல் - மனிதகுல அன்பின்பாற்பட்டு செயல் என்பதையும் எவரும் மறுக்கமுடியாது.

*ஆதார நூல்: Gandhi A study Hiren Mukerjee PPH July 1958 5th edition Ap 2010*

●

# கவிமணி என்னும் பண்பாட்டியலாளர்

க. காமராசன்



தேசிக விநாயகம் பிள்ளை (1876-1957) தமிழகத்தின் தலைசிறந்த தமிழியல் ஆராய்ச்சியாளர்; கவிஞர்; ஆசிரியர். காலனியம் நிலைபெற்று எழுந்த காலத்தில் உருவான தமிழ்ப் புலமை உலகில் மறுத்தொதுக்க முடியாத புலமையாளர்களில் ஒருவர். ஆயினும் அவர் ஒரு கவிஞர்; அதுவும் குழந்தைக் கவிஞர் என்ற எண்ணமே பொதுவாக மேலோங்கியுள்ளது. இந்த எண்ணத்தை அடியோடு மறுத்து வாதிட்டு இப்போது ஒரு நூல் வெளிவந்துள்ளது.

அ.கா. பெருமாள் அண்மையில் எழுதி, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ள "கவிமணி வரலாற்றாய்வாளர்" என்பதுவே அந்த நூல். ஏற்கனவே இந்நூலாசிரியர் கவிமணியின் இல்புனைவு எழுத்துகளையும் புனைவு எழுத்துகளையும் தொகுத்து, சீரிய முறையில் பதிப்பித்துள்ளார். கவிமணியின் சில ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழாக்கம் செய்துள்ளார். இந்தப் பணிகளின் பெறுபேறாக இந்த நூலை அவர் எழுதியுள்ளார்.

தேசிக விநாயகம் பிள்ளை தமிழ்நாட்டின் கவிமணி என்ற எண்ணம் பொதுப்புத்தியில் ஆழமாகப் பதிந்துள்ளது. இந்த எண்ணத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற அவாவில் இந்நூலாசிரியர், கவிமணியை 'வரலாற்றாய்வாளர்' என்று இந்நூலில் அழுத்திச் சொல்லியுள்ளார். ஆயினும் கவிமணியின் கவிதைப் பயணம் பற்றியும் இந்நூலில் ஒரு நீண்ட கட்டுரை உள்ளது.

வாழ்வும் பணியும், கவிமணியின் கவிதைகள், வரலாற்று ஆய்வாளர், கவிமணியும் நாட்டார் வழக்காறுகளும், கவிமணியின் சமகாலநோக்கு ஆகிய ஐந்து இயல்களையும், ஆறு பின்னிணைப்புகளையும் இந்நூல் கொண்டுள்ளது. மலரும் மாலையும் கவிதைத் தொகுதியில் உள்ள ஆங்கிலவழி மொழிபெயர்ப்புக் கவிதைப் பட்டியல், கவிமணியின் இல்புனைவு எழுத்துகளின் பட்டியல், இல்புனைவு எழுத்துகளில் கல்வெட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளின் சுருக்கம், கவிமணி குறித்து வெளிவந்த மலர்களும் நூற்களும் அடங்கிய பட்டியல், தெரிவு செய்யப்பட்ட கவிமணியின் சில கவிதைகள், கவிமணியின் வாழ்க்கைக் குறிப்புகள் என இவை ஆறும் பின்னிணைப்புகள் ஆகும்.

கவிமணி வாழ்ந்த காலத்தையும், அக்காலத்திற்கு முகம் கொடுத்து அவர் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றியும் இந்நூலின் 'வாழ்வும் பணியும்' என்ற முதலாவது இயலும், 'கவிமணியின் சமகாலநோக்கு' என்ற ஐந்தாவது இயலும் தகவல்களை அளிக்கின்றன. கவிமணியை இ.எம்.எஸ். நம்பூதிரிப்பாடு சந்தித்த நிகழ்வு பற்றிய வருணனையோடு தொடங்கி, முதலாவது இயல் கவிமணி வாழ்ந்த காலத்திற்குள்ளும் நிலத்திற்கும் சமூகத்திற்குள்ளும் அழைத்துச் செல்கிறது.

கவிமணி நாஞ்சில் நாட்டுக்காரர். சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுக்கு இடையில் நாஞ்சில் நாடு ஒரு தனித்துவமான பண்பாட்டு மண்டலம். இயற்கைச் சூழலாலும் சமூக வரலாற்றாலும் உருவான இந்தத் 'தனித்துவத்தை' இன்றுவரைகூட இழக்கவில்லை. காலனியக் காலம் முழுவதும் திருவிதாங்கூர் சமஸ்தான ஆட்சியின் கீழ், சேர நாட்டுப் பண்பாட்டின் தமிழ் முகமாக நாஞ்சில் நாடு விளங்கியது. ஆயினும்,

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நவீன அம்சங்கள் முனைப்புப் பெறத் தொடங்கியதும் தமிழ் முகம் ஒடுங்கத் தொடங்கியது.

நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகத்தவரில் 1876ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் நாள் சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி ஆகியோருக்கு மூன்றாம் மகவாகக் கவிமணி பிறந்தார். இவரது ஒன்பதாம் வயதில் தந்தை மறைந்தார். இவர் வாழ்ந்த காலத்தில் நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகம் எத்தகைய இடுக்கண்ணில் பட்டு உழன்றது என்பதற்கு, அவரது மருமக்கள் வழி மான்மியமே சான்று பகர்கின்றது. இக்குறுங்காப்பியம் காட்டுவதுபோல, மருமக்கள் வழியினாலும் மூடநம்பிக்கைகள் முதலிய இன்னும் பிற சீர்கேடுகளாலும் நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகம் துன்புற்றது.

கவிமணி மரபு வழியில் தமிழ்க் கல்வியையும் நவீன கல்விமுறையில் மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் கற்றார். பள்ளிக் கல்வியையும் புகுமுகப் படிப்பையும் ஆசிரியர் பயிற்சியையும் பெற்றார். பள்ளியிலும் பெண்கள் கல்லூரியிலும் 30 ஆண்டுகள் அறிவியல் மற்றும் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். சிறுவயதிலிருந்தே செய்யுள் இயற்றுவதில் ஆர்வமும் திறமும் பெற்று விளங்கினார். பின்னர் கல்வெட்டு ஆராய்ச்சியிலும் கவனம் செலுத்தி வந்தார். மிகவும் குறிப்பிடத்தகுந்த ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன் சமகாலநோக்கு உடையவராக விளங்கினார் என்பதைப் பல நிகழ்வுகள் வாயிலாக இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

கவிமணியின் காலம், சூழல் குறித்து எஸ்.வையாபுரிப் பிள்ளை எழுதியுள்ள கருத்து எடுத்துக் காட்டத்தக்கது. பாரதியின் கவிதைகளில் காணும் தேச உணர்ச்சி கவிமணியின் கவிதைகளில் இல்லை என்றும், அதற்குக் காரணம் நேரடி காலனி ஆட்சியில் அல்லாமல் சுதேச மன்னர் ஆட்சியின் கீழ் இருந்த வாழ்க்கை நிலமையே காரணம் என்றும் விளக்கிய பின்னர், “இவருடைய கவிகள் பெரும்பாலானவற்றில் தேசப் பக்தியின் நன்மணம் கமழ்ந்து வீசவில்லை. இதற்கு மாறாக, எப்பொழுதும் நிலைபேறாயுள்ளதும், நமது மக்களால் பெரிதும் போற்றப்படுவதுமாகிய இந்தியப் பண்பாட்டின் பெருநலமே (cultural interest) இவைகளில் நிரம்பித் ததும்புகிறது. பண்பாட்டின் உணர்ச்சியொன்றே கவிமணியின் பாடலுக்கு உயிர் நாடியாக உள்ளது ” என்று கூறுகிறார்.

இக்கூற்றில் உள்ள பண்பாட்டு பெருநலம் என்ற சொல்லுக்கு வையாபுரிப் பிள்ளை cultural interest என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இதனை இக்கால மொழியில் பண்பாட்டு ஆர்வம் என்று சொல்லலாம். 1950களுக்குப் பிறகுதாம் பண்பாட்டு ஆய்வு, பண்பாட்டியல் என்ற சொற்கள் வந்துசேர்ந்தன.




**கவிமணி வரலாற்றாய்வாளர்**

அ.கா.பெருமாள்

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*

விலை : ₹ 85/-

ஒருவேளை, வையாபுரிப் பிள்ளை, கவிமணியை ஒரு பண்பாட்டியலாளர் என்று கூற வருகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது. கவிமணியின் கவிதைகளை எடுத்து விவாதிக்கும் போது, கவிமணியின் கவிதை மொழிபெயர்ப்புகள் எல்லாம் பண்பாட்டுத் தன்வயமாக்கலாக நிகழ்ந்திருப்பதை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். ஆயினும் அவர் கவிமணியின் ஆராய்ச்சி எழுத்துகளைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை.

இதற்கு மாறாக, இந்நூலாசிரியர் வரலாற்று ஆய்வாளர், கவிமணியும் நாட்டார் வழக்காறுகளும் என்ற இரண்டு தலைப்புகளில் கவிமணி ஒரு பண்பாட்டியல் ஆய்வாளராக விளங்கியுள்ளார் என எடுத்துக்காட்டுகின்றார். எனவே கவிமணியின் படைப்புகள், புனைவு ஆயினும் சரி, இல்புனைவு ஆயினும் சரி பண்பாட்டில் நிலைகொண்டுள்ளன என்ற எண்ணம் வலுப்பெறுகின்றது. ஆயினும், கவிமணி பண்பாட்டைக் குரங்குப் பிடி பிடித்துத் தொங்கிய பழமைவாதி இல்லை; பண்பாட்டை சீர்திருத்தம் செய்யும் எண்ணம் கொண்ட புதுமையாளர். இதற்கு அவரது படைப்புகளே சான்றுகள் ஆகும்.

இந்த வகையில் ‘கவிமணி வரலாற்றாய்வாளர்’ என்னும் இந்நூல் சுவையான நடையில், பல புதிய தகவல்களை அளித்து, கவிமணி பற்றி ஆழமான சிந்தனைகளைக் கிளப்பும் சிறந்ததொரு களஞ்சியம் ஆகும். ●